# என் தாசனாகிய

# மோசே




திருமறை அறிஞர்
Rev. Dr. A. கிறிஸ்டோபர் M.A., D.D.,

# என் தாசனாகிய
# மோசே

ஆசிரியர்

திருமறை அறிஞர்

**டாக்டர் அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்

**விண்ணக அப்பம்**

**நேரு வீதி, சூரம்பட்டி,**

**ஈரோடு – 9. தென்இந்தியா.**



FIRST EDITION - JAN 1997

RE - EDITION - JULY 2004

TOTAL COPIES - 2000

COPY RIGHT - TO AUTHOR

PRICE - Rs. 40.00 (IN INDIA)

BOOK NUMBER - T 27

**FOR DETAILS CONTACT**

**WINNAGA APPAM**

**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**

**ERODE - 638 009. S.INDIA.**

**PHONE : (0424) 2271323 (Off)**

**Cell : 98433 - 58824**

**Fax : (0424) 2277286**

**e-mail : winnagaappam@rediffmail.com**

## ஜெபத்துடன் அறிமுகம் செய்கிறேன்

**Rev. Dr. யோபு ஞானப்பிரகாசம்**
ஸ்தாபகர் & தலைவர்,
இந்தியன் பெந்தெகொஸ்தே அசெம்பிளீஸ்
கோயம்புத்தூர் - 12. தெ.இந்தியா.

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள எனது உடன் ஊழியர் பாஸ்டர்.அ.கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறேன். 5-1-97 அன்று இவரது 25-வது நூலை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஈரோட்டில் வெளியிட்டேன். இப்போதும் இந்த இருபத்தேழாவது நூலை அறிமுகப்படுத்துவதில் என் உள்ளம் பூரிக்கிறது.

வேதத்தில் கிடைக்கின்ற சில குறிப்புகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அடுக்கடுக்காக கருத்துக்களை அள்ளித்தருகிற அபூர்வ தாலந்தை கர்த்தர் இவருக்கு தந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது புத்தகத்தை கையில் எடுத்தால், படித்து முடிக்காமல் கீழே வைக்க முடியாது என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

இனிய தமிழ், எளிய நடை, உரிய உதாரணம், உபதேசப்பிடிப்பு, பயப்படாமல் சத்தியத்தை சொல்லும் துணிவு இவைகள் பாராட்டுக்குரியவைகள்.

இப்போதும் மோசேயை பல்வேறு கோணங்களில் படம்பிடித்து காட்டுகிறார் (இல்லை, இல்லை பாடம் புகட்டுகிறார்) ஊழியர்களையும் விசுவாசிகளையும் உணர்வூட்டி, உற்சாகப்படுத்தி உருமாற்றம் அடையச் செய்யும் என்ற விசுவாசத்தோடு இந்த நூலை ஜெபத்துடன் அறிமுகம் செய்கிறேன்.

**ஆமென்.**



## உரிமையோடு உங்களுக்கு எழுதுகிறேன்

எனது இதய தேக்கத்தில் நீண்ட நாளாய் இருந்த இஃது இன்று ஊற்றாய் பெருக்கெடுத்து உரிய உருவெடுத்து உங்கள் கைகளில் தவழ்கிறது.

ஒரு நல்ல சுவிசேஷகன், ஒரு நல்ல தீர்க்கதரிசி, ஒரு நல்ல மேய்ப்பன், ஒரு நல்ல போதகன், ஒரு நல்ல அப்போஸ்தலன் என ஐவகை ஊழியத்திற்கு ஒருவரை அடையாளம் காட்டு, என்று என்னிடம் யாராவது கேட்டால் **இயேசு** என்று உடனே பதில் சொல்லிவிடுவேன்.

அவரை விட வேறு பெயர் கொடு என்று திருப்பிக் கேட்டால் மோசே என்று முழங்கிவிடுவேன். ஆம்! புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு, பழைய ஏற்பாட்டிலேயே சரியான முன் அடையாளம் மோசே என்கிற அதிசய மனிதர்தான்.

கடந்த நாளில் மோசேயை நான் சிந்தித்துக் கொண்டு இருந்தபோது பரிசுத்த ஆவியானவர் எனக்கு கற்றுத்தந்த எளிமையான பாடங்களை உங்களுக்கு உரிமையோடு எழுதுகிறேன்.

மோசே - மிகப்பெரிய சரித்திரம்
மோசே - மிகப்பெரிய சகாப்தம்
மோசே - மிகப்பெரிய சமுத்திரம்

அவைகளில் கடுகளவு, கணுக்காலளவு இந்நூலில் உங்களுக்கு அளித்திருக்கிறேன். ஆனால் அவைகள் உங்கள் வாழ்வில் உசிதமான ஆசீர் வழங்கும் என்பது திண்ணம்.

அன்புடன்,
**அ. கிறிஸ்டோபர்.**

## பிரியமுள்ள பிதாவே!

**அ**கில உலக ஆவிக்குரிய எழுத்தாளர் அமைப்பின்
ஸ்தாபகரே உமக்கு கோடி ஸ்தோத்திரம்!

**அ**ன்று நீர் கற்பலகையில் கற்பனையை எழுதி, எழுத்து
ஊழியத்தை துவக்கி வைத்தீர் உமக்கு ஸ்தோத்திரம்!

**அ**தற்கு பின் உமது தாசனாகிய மோசே – ஐந்தாகமங்களை
எழுத உதவி செய்தீர் உமக்கு ஸ்தோத்திரம்!

**அ**வரையே இவ்வமைப்பின் பொதுச் செயலர் என்பேன்.
அதன்பின் எழுதியோரெல்லாம் அங்கத்தினர் என்பேன்.

**அ**டியேன் அவர்களில் ஒருவன், ஆனாலும் அவர்கள் யாவரிலும்
மிகச் சிறியவன் – எளியவன்.

**அ**ப்பா உம் நாம மகிமைக்காய் உமது தாசனாகிய மோசே
வாழ்வைக் குறித்து வரிவடிவில் இதனை தொகுத்து உள்ளேன்.

**அ**ன்பாய் ஏற்றருளும் அபிஷேகித்தருளும், அனைவருக்கும்
ஆசீர்வாதமாய் மாற்றியருளும்.

அன்புடன்,

**அ. கிறிஸ்டோபர்.**



## நீங்கள் சந்திக்கப் போகிறவர்கள்

1. அதிசயமான தேவன்
2. பாலகனாகிய மோசே
3. வாலிபனாகிய மோசே
4. இரட்சகனாகிய மோசே
5. தலைவனாகிய மோசே
6. தாசனாகிய மோசே

# 1. அதிசயமான தேவன்

என் இனிய வாசகர்களுக்கு,

இரட்சகர் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். இந்த இருபத்தி ஏழாவது நூலின் மூலம் உங்களைச் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கிறிஸ்துவுக்கு அடுத்தபடி முழு வேதாகமத்திலும் அதிகமாகப் பேசப்படுகிற ஒரு அற்புத மாமனிதரைக் குறித்து இந்தப் புத்தகத்தில் நாம் ஆவிக்குரிய ஆழ் கருத்துக்களை ஆய்வு செய்யப்போகிறோம்.

மற்ற எல்லா வேதாகம மனிதரைவிட மோசே எல்லாவற்றிலும் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்திருக்கின்றார். நம்முடைய கிறிஸ்து இயேசு இந்த உலகத்தின் இரட்சகர். அதைப்போலவே, மோசே இஸ்ரவேலர்களின் இரட்சகர்.

நம்முடைய கிறிஸ்து இயேசு வானத்திலிருந்து வார்த்தையாய் இறங்கி வந்தார். மோசே வானத்திலிருந்து வார்தையை (நியாயப் பிரமாணத்தை) இறக்கித் தந்தார்.

சீனாய் மலையில் தேவனுடைய மகிமையைக் கண்டவர். அதுமட்டுமா? மற்றுமொருமுறை தேவனுடைய பின்பக்க சாயலைக் கண்டவர். அத்தோடு நிற்கவில்லை. **சில ஆயிரம் ஆண்டுகள் கடந்த பிறகு** மறுரூபமலையில் பூலோகத்தில் ஊழியம் செய்து வந்த கிறிஸ்துவை முகமுகமாய் சந்தித்தவர்.

நம்முடைய வேதாகமத்தில் முதலில் இருக்கின்ற ஆதியாகமம் முதல் உபாகமம் வரை உள்ள ஐந்து ஆகமங்களையும் எழுதியவர். அதுமட்டுமல்ல. வேதப் பண்டிதர்களின் கருத்தின்படி – சங்கீதங்களில் சிலவற்றையும் யோபுவின் புஸ்தகத்தையும் இவரே எழுதினார்.

நாற்பது ஆண்டுகாலம் அரசமக்களோடு, நாற்பது ஆண்டுகாலம் ஆட்டு மந்தைகளோடு, நாற்பது ஆண்டு காலம் ஆண்டவரின் ஜனத்தோடு தனது ஆயுட் காலத்தை செலவழித்த மோசே, ஆண்டவரின் வார்த்தையின்படி மரித்து, ஆண்டவராலேயே அடக்கம் பண்ணப்பட்டு, ஆண்டவருடைய சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ஒப்பற்ற தெய்வீக மனிதர்.

யாத்திராகமத்திலே ஆரம்பிக்கிற இவருடைய பெயர், பழைய ஏற்பாட்டு கடைசிப் புத்தகத்திலும் தொடர்ந்து வந்து, புதிய



ஏற்பாட்டின் முதல் புத்தகத்திலும் நுழைந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் எழுதப்பட்டிருப்பது எத்தனைப் பெரிய மகிமை என்பதை யோசித்துப் பாருங்கள்!

பழைய ஏற்பாட்டில் கடந்த கால ஊழியத்தில் செயலாற்றிய இவர், நிகழ்கால ஊழியமாகிய புதிய ஏற்பாட்டின் ஆரம்ப காலத்தில் இயேசுவுடன் மறுரூப மலையில் காட்சி தந்தது மாத்திரமல்ல, இனி எதிர்காலத்தில் பூலோகத்தில் நடக்கப்போகிற அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்திலேயும் தன் பங்கை இவர் அளிக்கப் போகிறார்.

இங்கே மற்றுமொரு காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மற்றப் பரிசுத்தவான்களைக் குறித்து வேதத்தில் எழுதப்பட்ட குறிப்புகளில் பெரும்பாலும் வேறொரு நபரால் சொல்லப்பட்ட எழுதப்பட்ட சம்பவங்களே அதிகமாகயிருக்கும். ஆனால், மோசேயைக் குறித்து நாம் சிந்திக்கப்போகிற பெரும்பாலான குறிப்புகள் மோசேயாலேயே எழுதப்பட்டவைகள் என்பது சிறப்பு அம்சமாகும்.

**ஆகமங்கள் :**

வேதத்திலுள்ள முதல் ஐந்து ஆகமங்களாகிய – ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய பஞ்சாகமங்களும் மோசேயினாலேயே எழுதப்பட்டன.

இதில், யாத்திராகமத்தில் மோசேயின் பிறப்பையும், உபாகமத்தில் மோசேயின் அடக்க ஆராதனையையும், குறித்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது – கூர்ந்து கவனித்துப் பார்த்தால், யாத்திராகமத்தின் முதல் வசனம், ஆதியாகமத்தின் தொடர்ச்சி போலவே, எழுதப்பட்டிருப்பதை உங்களால் கண்டு கொள்ள முடியும்.

எனவே, சிலவரிகளில் யாத்திராகமத்திற்கும், ஆதியாகமத்திற்கும் பொருந்திப் போகிற சில காரியங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

★ ஆதியாகமம் – முற்பிதாக்களின் வாழ்க்கை வரலாற்றை நமக்குத் தெரிவிக்கிறது. யாத்திராகமம் இஸ்ரவேலரின் ஆரம்ப வரலாற்றை நமக்குத் தெரிவிக்கிறது.

★ ஆதியாகமம் – தேவன் ஏதேனில் மனிதரோடு உலாவினதை தெரிவிக்கிறது. யாத்திராகமம் தேவன் ஆசரிப்புக் கூடாரத்தில் மனிதர்கள் நடுவிலே வாசம் பண்ணினார் என்பதைத் தெரிவிக்கிறது.

★ ஆதியாகமம் – ஏறக்குறைய ஆயிரக்கணக்கான

ஆண்டுகளின் வரலாற்றை சுருக்கி அளிக்கிறது. யாத்திராகமம் – ஒரு தலைமுறையின் வரலாற்றை விவரித்துக் கூறுகிறது.

★ஆதியாகமம் – மோசேக்கு முந்தின காலத்தை குறித்து தேவனால் அளிக்கப்பட்ட வெளிப்பாடு, யாத்திராகமம் மோசேயின் சமகாலத்தைக் குறித்த குறிப்பேடு.

★ஆதியாகமத்தில் ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு தேவன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையைத் தெரிவிக்கிறது. யாத்திராகமத்தில் தேவன் பத்து கட்டளைகள் மூலம் இஸ்ரவேலரோடு பண்ணின உடன்படிக்கையைத் தெரிவிக்கிறது.

யாத்திராகமம், ஆதியாகமத்தைப் போலவே பல்வேறு சிறப்புகளை தனக்குள்ளடக்கியுள்ள புஸ்தகமாகும். ஆதியாகமத்தில் தேவன் எப்படி இயற்கையில் அற்புதங்களை நிகழ்த்தினாரோ, அப்படியே அதைப் போன்ற அற்புதங்கள் யாத்திராகமத்திலும் இருக்கத்தான் செய்கிறது.

அடிமைத்தனம் – விடுதலை, முறுமுறுப்பு – அற்புதம், பத்து கட்டளைகள் – பொன் கன்றுக்குட்டி, ஆசரிப்புக் கூடாரம், யூத, கிறிஸ்தவ மார்க்கத்திற்கான அஸ்திபாரக் காரியங்கள் அனைத்தையும் தனக்குள்ளடக்கி வைத்திருக்கிற மிக விறுவிறுப்பான புஸ்தகம் இந்த யாத்திராகமம்.

**கோத்திரம் :**

தேவனுடைய தாசனாகிய மோசே லேவி கோத்திரத்தில் பிறந்தார். இங்கே கிரியையை கிருபை முந்திக் கொள்ளுகிறது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்தபோது கன்றுக்குட்டி முன் களி – நடனம் புரிந்தவர்களை வெட்டி வீழ்த்த கர்த்தரின் பட்சத்தில் லேவிக் கோத்திரத்தார் நின்றபடியினால், அந்த நாளில் அவர்கள் கிரியைகளினிமித்தம் தேவனுடைய சுதந்திர வீதமாய் – கோத்திரமாய் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார்கள்.

ஆனால், சிந்தித்துப் பாருங்கள்! மோசேயும், லேவிக் கோத்திரத்தான் தான். ஆனால், அவர் கிரியையினால் அல்ல தேவ கிருபையினாலேயே தாயின் வயிற்றிலிருக்கும்போதே தெரிந்து கொள்ளப்பட்டார்.

இன்னும் சொல்லப்போனால் லேவிக் கோத்திரமே மோசேக்கு முன்பாகவே இந்தக் கிருபையினால் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இதை விளக்க வேண்டுமானால், நமது கவனத்தை



ஆதியாகமம் 29 : 34ம் வசனத்தின் மேல் திருப்ப வேண்டும். அங்கே யாக்கோபின் மனைவியாகிய லேயாள் தனக்குப் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தெய்வீக வெளிப்பாட்டின்படி பெயர் வைக்கிறாள்.

ரூபன் – அவர் என்னை நேசிப்பார்

சிமியோன் – அவர் கேட்டருளுவார்

இந்த வரிசையின்படி மூன்றாவது குழந்தை பிறக்கும்பொழுது **அவர் சேர்ந்திருப்பார்** என்று அர்த்தங்கொள்ளும்படி **லேவி** என்று பெயரிட்டாள்.

ஆக, பிறக்கும் போதே லேவி கிருபையினால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டான். அந்தக் கிருபை லேவிக் கோத்திரத்தை திரும்பவும் தனக்கென மீட்டுக் கொண்டது.

பிரியமானவர்களே! இன்றைக்கு நம்மிடத்தில் பக்தி, வைராக்கியம், பரிசுத்தம், தகுதிகள் இவைகளெல்லாம் இருக்கிறதே. அவைகள் கிரியைகளினால் வந்தவைகளல்ல. உலகத்தோற்றம் முன்பே நம்மைத் தெரிந்து கொண்ட தேவனின் நித்தியக் கிருபை – நீங்காத கிருபை!

**குடும்பம் :**

யாத்திராகமம் இரண்டாம் அதிகாரம் முதல் வசனத்தை வாசித்துப் பாருங்கள். லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம் பண்ணினான் என்று எழுதப்பட்டுள்ளது.

அந்த லேவியன் அம்ராம் என்றும், அந்த லேவியின் குமாரத்தி யோகெபேத் என்றும் யாத்திராகமம் 6 : 20ம் வசனத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

மோசேயைக் காட்டிலும் ஆரோன் மூன்று வயது பெரியவர். மோசே குழந்தையாய் இருந்த காலத்தில், குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய் அதன் தாய் நதியில் போட்டுவிட்டு வந்தாலும், என்ன நடக்கிறது என்பதை கவனித்துப் பார்த்து, அரசிளங் குமரியிடம் அதைக் குறித்துப் பேசும் அளவு வளர்ந்திருந்தவர் மிரியாம் என்று தெரிகிறது. எனவே, இந்த தம்பதிகளுக்கு மிரியாம், ஆரோன், மோசே என்ற வரிசைப்படி பிள்ளைகள் பிறந்திருந்தார்கள் என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய காரியம்.

**அரசாங்கம் :**

எகிப்துக்கு கொண்டு போகப்பட்ட யோசேப்பிற்குப் பிறகு யாக்கோபின் முழுக்குடும்பமும் எகிப்திற்குச் சென்று ராஜ

மரியாதையுடனும், ராஜ மானியத்துடனும் எகிப்திலே வாழ்ந்தார்கள்.

யாக்கோபு, யோசேப்பு உட்பட அந்த தலைமுறையார் எல்லாரும் எகிப்திலே மரணமடைந்தார்கள். அதே வேளையில் இஸ்ரவேல் புத்திரர் (1) மிகவும் **பலுகி,** (2) ஏராளமாய்ப் **பெருகி,** (3) **பலத்திருந்தார்கள்,** (4) தேசம் அவர்களால் **நிறைந்தது.**

இதைப்போலவே, எகிப்திலே மாபெரும் அரசியல் மாற்றமும் ஏற்பட்டது. எகிப்தை வேறொரு வம்சம் ஆளுகை செய்ய ஆரம்பித்தது. அந்தப் புதிய வம்சம் முந்தின ஆட்சியாளர் களுடைய நினைவுக் குறிப்புகளை பதிவேட்டிலிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும் நீக்கிப் போட்டது.

எனவே, புதிய ஆட்சியின் வழியில் அரசர்கள் எழும்பி யிருந்த பொழுது இதற்கு முன் நடந்த யோசேப்பின் மகத்துவமான செயல் திட்டங்களை அறியாதிருந்தார்கள். இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்படுவதற்கு 144 வருடங்களுக்கு முன்பாக யோசேப்பு மரித்தான் என்பதை நினைவிற் கொள்க.

இதனால் தான், யோசேப்பை அறியாத புதிய இராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான் என்று யாத்திராகமம் 1 : 8ல் எழுதப்பட்டுள்ளது. யோசேப்புக் காலத்திலிருந்த பார்வோன் (பார்வோன் - என்பது எகிப்திய அரசர்களுக்கான பட்டப்பெயர்) செமித்திய வம்சத்தைச் சார்ந்தவன். பாரம்பரியக் கருத்துக்களின்படி யோசேப்பினாலும், யாக்கோபினாலும் கர்த்தருக்குள் வழிநடத்தப்பட்டான். புறப்படுதலின் போதிருந்த பார்வோன் எகிப்திய பூர்வீக குடியைச் சார்ந்தவன். எனவே அவன் இஸ்ரவேலின் பெருக்கத்தைக் கண்டு சீற்றம் கொண்டான்.

எகிப்திலிருந்த இஸ்ரவேலர்களின் மேல் பார்வோன் வெகுண்டு எழுந்ததின் காரணம், இவர்கள் பெருங்குற்றம் ஏதும் செய்து விடவில்லை. அவர்கள் பலுகி, பெருகி, பலத்ததே எகிப்தியருக்கு வேதனையளித்தது.

ஆகவே, இஸ்ரவேலரை ஒடுக்கும்படி ஆட்களை பார்வோன் நியமித்தான். பாருங்கள்! உலகத் தோற்றத்திலிருந்து இதுவரை இதுதான் நடக்கிறது. தேவன் ஒரு கூட்டத்தை ஆசீர்வதிக்கும் பொழுது மறுகூட்டம் ஆசீர்வதிக்கப்பட்ட கூட்டத்திற்கு எதிராக எழும்புகிறது.

காயீன் - ஆபேலுக்கு விரோதமாக, இஸ்மவேல் - ஈசாக்குக்கு விரோதமாக, ஆகார் - சாராளுக்கு விரோதமாக, ஏசா - யாக்கோபுக்கு விரோதமாக என எழும்பி ஒரு மௌனப்



போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஆதியிலிருந்தே மனுஷ கொலை பாதகனாயிருக்கிற சாத்தான் ஆபேலைக் கொல்லும்படிச் செய்தான். இஸ்ரவேலருக்கு மீட்பு உண்டாகக் கூடாது என்பதற்காக பால வயதுள்ள ஆண் பிள்ளைகளைக் கொல்லும்படிக்கு பார்வோன் ஆணைப்பிறப்பித்தான்.

இந்த இகம் இரட்சிக்கப்படக்கூடாது என்பதற்காக இயேசு கிறிஸ்து பாலகனாய் இருந்த காலத்தில் ஏரோது மூலம் பாலகர்களைக் கொல்லும் திட்டத்தை செயலாற்றினான். இன்றும் சாத்தான் யூதர்களை இல்லாமற்போகப் பண்ண எத்தனையோ வழிமுறைகளை வகுத்து தருகிறான். ஆனாலும் என்ன? இஸ்ரவேலர்கள் எவ்வளவாய் ஒடுக்கப்பட்டார்களோ, அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள்.

இதைப் போலவே, யூதர்களுக்கு விரோதமாக எத்துனை எத்தனங்கள் எழும்பினாலும், எத்திசையிலும் அவர்கள் வெற்றி கண்டு, நிற்கிறார்கள். அப்படியே, **தெய்வ ஜனத்தை அழிக்க - சபையை அழிக்க - பரிசுத்தவான்களுடைய கூட்டத்தை பாழ்படுத்த பார்வோனின் வாரிசுகள் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், வெட்ட வெட்ட வாழையாய் சுடச் சுடச் சங்காய் - நசுக்க நசுக்க நாளொரு மேனியாய், நல்பெலன் கொண்டு சபை ஓங்கி எழும்பி நிற்கிறது.**

எகிப்திலே வாழ்ந்த இஸ்ரவேலருக்குப் பிறக்கும் ஆண்மக்களைக் கொன்று போடும்படி மருத்துவச்சிகளுக்கு கட்டளை கொடுத்தான். இஸ்ரவேலர் மேல் விசாரணைக்காரரை பார்வோன் ஏற்படுத்தினான். அவர்கள் இஸ்ரவேலரின் ஜீவனையும், கசப்பாக்கினார்கள் (யாத். 11 : 4) கொடுமையாய் நடத்தினார்கள்.

தெய்வ பிள்ளையே, உங்கள் ஜீவன் உங்களுக்குக் கசக்கும்படி உங்கள் வாழ்க்கை மாறிப் போயிருக்கிறதா? உங்கள் பெருக்கத்தைக் கண்டு மற்றவர்கள் உங்களைக் கொடுமையாய் நடத்துகிறார்களா? எனக்கேன் இந்தப் பாடுகள்? கர்த்தரின் நாமத்தைத் தரித்துக்கொண்ட எனக்கேன் இந்தப் போராட்டம்? என்ற கலக்கத்தோடு இருக்கின்றீர்களா?

தைரியப்படுங்கள். இவர்களால் - இவைகளால் ஒன்றும் நீங்கள் சேதப்படுவதில்லை. நீங்கள் தேவனுக்கு முன்பாக விலையேறப் பெற்றவர்கள். அதிசீக்கிரமாய் நீங்கள் பெறப்போகிற ஆசீர்வாதங்களையும், அனுபவிக்கப்போகிற அற்புதங் களையும், சுதந்தரிக்கப் போகிற பாலும் - தேனும் ஓடுகிற கானான்

தேசத்தையும் உங்களுக்குக் கிட்டாமல் செய்வதற்கு உங்களைத் திசைத்திருப்ப சத்துரு செய்கிற சதிகள் இவை.

**சதிகளைக் கண்டு பயப்படாதீர்கள்,** சக்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏரோதின் சட்டத்தின் மூலமாய் இயேசுவைக் கொல்ல முடியாத சாத்தான், யூதாஸை எழுப்பினான். இயேசு அழியவில்லை. அழியாமையுள்ளவராய் - மகிமை பொருந்தினவராய் - இன்றும் ஜீவிக்கிறார்.

அடிகள் - உதைகள் - சிறைச்சாலை - கப்பற் சேதம் அதுமட்டுமா? விஷப் பாம்பு கவ்விக் கொண்டது - ஆனாலும் பவுல் மரிக்கவில்லை. சபைகளை ஸ்தாபித்தார் ஊழியர்களை எழுப்பினார் - அற்புதங்களைச் செய்தார்.

சிங்கங்கள் வந்தது - கரடி வந்தது. மாமனாராகிய சவுலே துரத்திக் கொண்டு வந்தார். மகன் அப்சலோம் அழிக்கும்படித் துடித்தான். ஆனால், தாவீது மங்கிப் போகவுமில்லை. - மடிந்து போகவும் இல்லை.

எனக்கன்பான **தெய்வபிள்ளையே! உங்களுக்கு இப்பொழுதிருக்கிற உபத்திரவங்கள் பனியைப் போல் நீங்கும். உங்களை உபத்திரவப் படுத்தினவர்களுக்கு முன்பாக, அவர்களின் நுகத்தடிகளை உன் மேலிருந்து முறித்து, தேவன் உங்களை நிமிர்ந்து நடக்கச் செய்வார். உன்னை ஒடுக்கினவர்களை தேவனுடைய நியாயத் தீர்ப்பு சந்திக்கும். கர்த்தர் உங்களை நினைத்திருக்கிறார்.**

இஸ்ரவேலரின் பெருக்கத்தைக் கண்டு, எகிப்தியர் எரிச்சலடைந்தார்கள். தேவ ஜனம் - தேவ சபை பெருகுவதிலே பார்வோனுக்கு என்றுமே எரிச்சல்தான். இந்தப் பெருக்கத்தை தடுப்பதற்கு அவன் இரண்டு திட்டங்களை வைத்திருக்கிறான். முதலாவது, அதிகமான சுமையை சுமத்துவது - இரண்டாவது, ஆண் பிள்ளைகளைக் கொன்று போடுவது.

இன்றைக்கும் சத்துரு சபைகளில் இதைத் தான் செய்கிறான். தேவையில்லாத பிரச்சனை. தேவையில்லாத கவலைகள். ஆக இவற்றைக் கொண்டுவந்து விசுவாசிகளின் உள்ளத்தில் வைத்துவிடுகிறான். இதனால் இவர்கள் ஜெபிப்பதற்கும், துதிப்பதற்கும் பதிலாக அழுவதற்கும் விழுவதற்குமே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து விடுகிறார்கள்.

ஆண் பிள்ளைகளைக் கொன்று போடுவதற்கு பார்வோன் எபிரெய மருத்துவச்சிகளை அணுகினான் என்று யாத். 1:15,16ல்



எழுதப்பட்டுள்ளது. சபையில் வருகின்ற புதிய ஆத்துமாக்களைக் கொல்லுவதற்கு சபையில் இருக்கிறவர்களையே சாத்தான் சந்தித்துப் பேசி ஏற்பாடுகளைச் செய்கிறான் என்பது ஒரு பெரிய வேடிக்கையான விசயமாகும்.

இயேசுவோடிருந்த அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ் இந்தக் காரியத்திற்காக அன்று கிட்டியது போலவே இன்றும் இந்த வேலைக்கு ஏகப்பட்ட ஆட்கள் சாத்தானுக்கு கிடைக்கிறார்கள்.

இவர்கள் எபிரெயர்கள். இவர்கள் அப்போஸ்தலர்களில் ஒருவர் - போன்ற கூட்டத்தைச் சார்ந்தவர்கள். எனவே, இவர்களை சபையைவிட்டு ஒதுக்கிவிடவும் முடியாது. இவர்களே ஒதுங்கிப் போவதும் கிடையாது. இவர்களுக்கு ஒரே ஒரு ஊழியம், சபையில் ஸ்திரமாய் உட்கார்ந்து கொண்டு புதிய ஆத்துமாக்களை சாகடிப்பதே இவர்களின் சாதனை.

இந்த ஆபத்தை ஜெயிக்க ஊழியர்களுக்கும், சபைகளுக்கும் பரிசுத்த ஆவியானவர் புதிய பலத்தைத் தருவாராக. சபையில் உட்கார்ந்து கொண்டே போதகரைக் குறித்தும், சபையைக் குறித்தும் புறங்கூறி சபையைவிட்டு புதிய ஆத்துமாக்களை விரட்டுகிற இந்த வறட்டுக் கும்பல்கள் மேல் தேவனுடைய கண்கள் திரும்புவதாக.

**சமுதாயம் :**

இராஜாவே தங்களை நேரடியாக சந்தித்து, இரகசியமாய் கட்டளையிட்டாலும், இரத்தப் பழிகளுக்கு நீங்கலாகி, தங்களைக் காத்துக் கொண்ட உத்தமமான மருத்துவச்சிகள் இரண்டு பேரை மோசே மறவாமல் யாத்திராகமத்தில் பெயர் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

சிப்பிராள், பூவாள் என்கிற அந்த இரண்டு பேர் போற்றுதலுக்குரியவர்கள் - (யாத். 11:5). அவர்கள் இராஜாவுக்குப் பயந்ததைவிட தேவனுக்கே பயந்திருந்தார்கள். அதினிமித்தம் கண்சாடையாய் இருந்தார்கள் என்பதல்ல. ஆண்பிள்ளைகளைக் காப்பாற்றினார்கள் (யாத். 1:17) என்பதே மிக முக்கியம்.

இராஜாவுக்கு கீழ்ப்படிந்திருந்தால், ஒருவேளை ஓர் குழந்தைக்கு இத்தனைப் பணம் என்று பரிசு கிடைத்திருக்கலாம் அல்லது ஒருவேளை பதவி உயர்வு கிடைத்திருக்கலாம். அநித்தியமான - இழிவான - ஆதாயத்தை இவர்கள் விரும்பாமல், தேவனுக்குப் பயந்ததினால் தேவனால் நன்மை பெற்றார்கள். இதினிமித்தம் அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படிச் செய்தார். (யாத். 1:22).

இப்படி சிப்பிராள், பூவாள் போன்ற சிலர் இன்றளவும் சபைகளில் இருப்பதினால்தான் தொல்லைகளையும் மீறி, எல்லைகளைத் தாண்டி சபைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் அரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியாமற் போனாலும் தேவனுக்குப் பயந்து, சபைக்கு இடறல் அற்றவர்களாக நடந்து கொள்ளப் பாருங்கள். அது உங்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும்.

ஒருவேளை அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் கட்டுப்பட்டு தேவ ஜனத்திற்கு எதிராக நீங்கள் எழும்புவீர்களேயானால், பணம் – பதவி கிடைக்கும் – என்பது உண்மை தான். ஆனால், குடும்பம் என்னவாகும் தெரியுமா? தழைக்காது, தத்தளிக்கும். மறந்துவிடாதீர்கள்!

இந்த மருத்துவச்சிகள் அரசனை எதிர்த்துக் கொள்ளவும் இல்லை. ஆண்டவரையும் எதிர்த்துக் கொள்ளவில்லை. அந்நிய தேவர்களை வணங்கும் அதிகாரிகளின் கீழ்பணிபுரிந்து கொண்டே ஆண்டவருக்குப் பிரியமாய் வாழ முடியும் என்பதற்கு இந்த மருத்துவச்சிகள் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

திடீரென்று அரண்மனையிலிருந்து அழைப்பு வருகிறது. அரசன் கேட்கிறான். ஆண் பிள்ளைகளை நீங்கள் தப்பவிட்டது என்ன? அவ்வளவு தான். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆரணங்குகள் வாயைத் திறந்தார்கள். (1) எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப் போலல்ல, நல்ல பலமுள்ளவர்கள், (2) நாங்கள் போகு முன்பே அவர்களுக்குப் பிரசவம் நிறைவேறி விடுகிறது. ஒரே கேள்விக்கு இரண்டு பதில்கள் பார்த்தீர்களா? (பெண்கள் – பெண்கள் தான்).

எகிப்தியருக்கும், எபிரெயருக்கும் – தெய்வ ஜனத்திற்கும், தெய்வ ஜனத்திற்கு எதிரானவர்களுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை அழகாக படம் பிடித்து அரசனுக்கே காண்பித்தார்கள். அதன் பிறகு அரசன் அந்தப் பணிக்கு அவர்களை அழைக்கவில்லை.

நீங்கள் சத்தியத்திற்கு சாட்சியாய் நிற்க, முடிவு எடுத்து முயற்சி செய்து பாருங்கள். உங்களைத் தவறான வழிக்கு – வேலைக்கு நடத்த விரும்பும் அதிகாரிகள் கூட உங்கள் பக்கமே தலைவைத்துப் படுக்கமாட்டார்கள். முயற்சித்துப் பாருங்கள். நிச்சயம் வெற்றி உண்டு.

இதன் பிறகு பார்வோன் எபிரெயர்களையல்ல, தன் ஜனங்களை நம்ப ஆரம்பித்தான். ஆகவே, எபிரெயருக்குப்



பிறக்கும் ஆண்பிள்ளைகளை நதியில் போட தன் ஜனத்திற்கே கட்டளையிட்டான்.

இதுவரைக்கும் அரசனும், ஆளோட்டிகளும் மாத்திரமே எதிரிகள். இப்போதோ அனைத்து எகிப்தியருமே எபிரெயருக்கு எதிராளிகள். உங்களுக்கும் அப்படித்தானோ? உலகமே திரண்டு உங்களுக்கு எதிராக ஓர் அணியில் நின்றாலும், உலகத்திலிருப்பவனை விட உங்களோடிருப்பவர் பெரியவர் – என்பதை மறந்து விடாதீர்கள்.

இப்படி பிள்ளையை நதியில் போட வேண்டுமே, என்பதற்காக அஞ்சி எபிரெயர் யாரும் பிள்ளை பெறுவதை நிறுத்தி விடவும் இல்லை. தேவன் பிள்ளைப் பேற்றை நிறுத்தவுமில்லை. அந்தந்த வேலை ஒழுங்காய் தேசத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்த சூழ்நிலையிலிருந்து தான் மோசே வந்தார். **தேவன் செய்ய நினைத்த காரியம் தடைபடாது.**

மிரட்டல் – உருட்டல்களைக் கண்டு சோர்ந்து போய் உட்கார்ந்து விடாதீர்கள். பார்வோன் ஒருபக்கமிருக்கட்டும். எகிப்தியர் ஒரு பக்கமிருக்கட்டும். நைல் நதி ஒரு பக்கம் ஓடட்டும். உங்களுக்கென்ன கவலை? உங்கள் வேலையைப் பாருங்கள். உங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட விசுவாசத்தின்படி கிரியைச் செய்யுங்கள். அதற்குமேல் அதிசயமான தேவன் பார்த்துக் கொள்கிறார்.

மோசேயின் தாய் அதைத் தானே செய்தார்கள். எதிரான சூழ்நிலையிலும் மோசேயைப் பெற்று, மூன்று மாதம் வளர்த்தார்கள். அதற்குமேல் முடியவில்லை. எகிப்தியன் என்ன? என் மகனை நதியில் போடுவது? நானே போட்டு விடுகிறேன் – என்று தன் மகனை நதியில் விட்டாள். மோசே செத்தா போய் விட்டான்? பின் நாளில் கடலையேப் பிளக்கிற கர்த்தரின் தாசனாகிய மோசேயாக மாறினார்.

இந்த மோசேயின் பிறப்பு – ஓர் அதிசயம். வளர்ப்பு – ஓர் அதிசயம். அவரது ஊழியம் – ஓர் அதிசயம். மரணம் – ஓர் அதிசயம். அவரது அடக்கமும் – ஓர் அதிசயம்.

இனி வரும் அத்தியாயங்களில் இந்த அருள்பெற்ற மாமனிதரின் வாழ்க்கையை வேத வசனத்தின் ஆதாரத்தோடு பல்வேறு கோணங்களில் நாம் சிந்திக்கப் போகிறோம்.

# 2. பாலகனாகிய மோசே

லேவிக் கோத்திரத்தைச் சார்ந்த அம்ராமுக்கும், யோகெபேத்துக்கும், மூன்றாவது குழந்தையாக மோசே பிறந்தார் என்று வேதம் தெளிவாகச் சொல்லுகிறது.

அரசாங்கம், அரசன், அயலகத்தார் யாவரும் எதிராய் இருக்கிற சூழ்நிலையில் மோசே தன் பெற்றோருக்குப் பிறந்தார் என்பது குறிப்பிட்டு கவனிக்க வேண்டிய விஷயம். உண்மையிலேயே மோசேயின் பெற்றோர் ஒரு தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றிருந்தார்கள் என்பது புலனாகிறது.

ஆரோன் பிறந்த காலக் கட்டத்தில் ஆண் பிள்ளைகளைக் கொல்ல வேண்டும் என்கிற சட்டம் பிறப்பிக்கப்பட்டதினாலே அம்ராமும், யோகெபேத்தும் பிரிந்திருந்தார்களாம். ஆகிலும், வேளை வந்தபொழுது கர்த்தருடைய ஆவி சிறுமியாக இருந்த மிரியாம் மேல் இறங்கினதால், யோகெபேத்தை அழைத்து வர வேண்டும். நானல்லவா பாதுகாக்கிறவர் என்று அம்ராமைப் பார்த்து கர்த்தருடைய வார்த்தை உரைத்தாள்.

அந்த தீர்க்கதரிசன செய்திக்கு கீழ்ப்படிந்து, யோகெபேத்தை சேர்த்துக்கொண்டு வாழ்ந்த போது தான் மோசே பிறந்தார் என்று பாரம்பரியக் கருத்து ஒன்று உண்டு.

(இந்தக் கருத்தை திருமறைப் பெரியாருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது அவர் மூலமாய் கேட்டறிந்து கொண்டேன்).

மோசேயின் பெற்றோர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது என்பது உண்மை. அவர்கள் பெற்றெடுத்த மூன்று குழந்தைகளும் தேவனுடைய ஊழியத்தைச் செய்ததை சற்று சிந்தித்துப் பாருங்கள்!

யாத்திராகமம் 2 : 1ல் லேவிக் கோத்திரத்தான் லேவிக் கோத்திரத்தாளை விவாகம் பண்ணினான் என்று எழுதப்பட்டுள்ளதை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் சற்று சிந்தித்துப் பாருங்கள். விசுவாசி – விசுவாசியை மணம் முடிக்க வேண்டும். ஆவிக்குரியவர்கள் – ஆவிக்குரியவர்களோடு சம்பந்தங்கலக்க வேண்டும்.



ஆஸ்தி போய்விடுமே என்று அண்ணன் மகளை உங்கள் மகனுக்கு கட்ட நினைப்பதும், அத்தை மகளை நீங்கள் கட்ட நினைப்பதும் ஆராய்ச்சிக்குரிய ஒன்று. அதற்கப்பால் நீங்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும். அவர்கள் விசுவாசிகளா? அவர்களை உங்களோடு விவாகம் என்னும் ஏரில் பூட்டினால், மாடும் – மாடும் பூட்டப்பட்டது போலிருக்குமா? அல்லது மாடும், கழுதையும் பூட்டப்பட்டது போலிருக்குமா? ஆராய்ந்து செய்திடுங்கள்.

அம்ராமோ லேவிக் கோத்திரத்தைச் சார்ந்த யோகெபேத்தை மணம் முடித்ததினால் தெய்வீகப் பிள்ளைகளைப் பெற்றாள். ஆவிக்குரியவர்களுடைய குடும்பத்தில் மோசே பிறப்பார்கள். அவிசுவாசிகளுடன் கலந்த குடும்பத்தில் மோசம் பிறக்கும் என்பதை எச்சரிக்கையாக எழுத விரும்புகிறேன்.

யாத்திராகமம் 2–ஆம் அதிகாரம் முதல் பத்து வசனங்களில் அவருடைய பால பருவத்தைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. மோசேயின் பால பருவத்தில் ஏதுமறியாத சூழ்நிலையிலும், தெய்வீக நடத்துதலின்படி அவர் நடந்திருக்கிறார் என்பதும் அதற்கொப்ப அவரது பெற்றோர்களும், குடும்பத்தாரும் நடந்திருக்கிறார்கள் என்பதும் ஆச்சரியத்துக்குரிய ஒன்றாக இருக்கிறது.

யோகெபேத் கர்ப்பவதியாகி மோசேயை பெற்றெடுக்கிறாள். கர்ப்பத்தை மறைக்கவா முடியும்? ஊரறிந்த விஷயம். ஆனால், பிள்ளை பிறந்தவுடன் பெண்ணென்றால் வெளியே காட்டியிருக்க வேண்டும். ஆணென்றால் நதியில் போட்டிருக்க வேண்டும்.

இவர்கள் மறைத்து வைத்ததல்ல. பிரசவத்தில் என்ன குழந்தை என்று எந்த எகிப்தியனும் வந்து விசாரிக்கவில்லையே. அதுவே அதிசய நடத்துதலின் ஆரம்பம்.

எபிரெயர் 11 : 23ல் மோசே பிறந்தபோது அவன் அழகுள்ள பிள்ளையென்று கண்டு, அவனுடைய தாய் தகப்பன்மார் இராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் விசுவாசத்தினாலே மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள்.

மோசேயின் பெற்றோரின் விசுவாசத்தைப் பாருங்கள்! மரியாள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட சங்கதிகளை

தன் இருதயத்தில் வைத்து சிந்தனை பண்ணினது போலவே, இந்தப் பெற்றோர்களும், இந்தக் குழந்தையைக் குறித்து தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்று மூன்று மாதமளவும் ஒளித்து வைத்தார்கள்.

பிறந்த குழந்தையை ஒளித்து வைத்தல் என்பது சாதாரண காரியமல்ல. அதன் உருவத்தை மறைத்து வைக்க முடியுமே தவிர, அதன் ஓலத்தை மறைத்து விடமுடியாது. நேரங்கெட்ட நேரத்தில் தான் அழும்.

ஒரு வீட்டில் குழந்தை இருந்தால், அயலகத்தாருக்கு அதன் அழுகையால் தொல்லைதான். இப்படியிருக்க பாலகனாகிய மோசே மூன்று மாதம் அழாமல் இருந்த பட்சத்தில் மாத்திரமே ஒளித்து வைத்தல் என்பது சாத்தியமாகும்.

பிரியமான பெற்றோரே! நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய், தேவனுக்குப் பயந்தவர்களாயிருந்தால் உங்கள் பிள்ளைகளால் எந்த நாளும் பிரச்சனையே வராது. பேசத் தெரியாத பால பருவத்திலேயே உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். குடும்ப சூழ்நிலைகளையறிந்து பிள்ளைகள் நடந்து கொள்ளும்.

இதற்கு மோசே சிறந்த சாட்சி, தன் குடும்பத்திற்கு மோசேயால் பிரச்சனை வரவில்லை. பிரயோஜனம் தான் வந்தது. பிள்ளைகள் அடங்கவில்லையா? பிள்ளைகளால் பிரச்சனையா? அவர்களைக் குறை சொல்லாதீர்கள். அவர்களை முழங்காலில் நிற்கச் சொல்லி தண்டனை தராதீர்கள். முதற்கண் நீங்கள் முழங்காலில் நின்று பரிசோதனை செய்யுங்கள்.

உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போலிருப்பார்கள் என்ற வசன அட்டையை வாங்கி வீட்டை அலங்கரிக்கிறோமே தவிர, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான் என்ற வேதப்பகுதியை வாசித்து நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறோமா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

மூன்று மாதங்கள் உருண்டோடி விட்டது. இதற்குமேல் ஒளித்து வைக்க முடியவில்லை. இங்கே தான் பெற்றோரின் விசுவாசமும், தெய்வீக வெளிப்பாடும் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. நாணற் கூடையை எடுத்து, பிசினும், கீலும் பூசி



குழந்தையை உள்ளே கிடத்தி, நதிக்குக் கொண்டு போகிறார்கள்.

விசுவாசத்தின் அடுத்தக் கட்டத்தைப் பாருங்கள்! நாணற் பெட்டியை நதியில் போடவில்லை. அப்படிச் செய்திருந்தால், அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கும். ஆனால், அதின் தாயோ நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள் (யாத். 2 : 3).

இந்தச் செயலைக் குறித்து பவுல் எழுதுகிறபோது, இஃது விசுவாசம் என்று குறிப்பிடுகிறாரே, அந்த விசுவாசம் எப்படி வந்தது தெரியுமா? அதற்கும் பதிலை ரோமர் 10 : 17ல் இதே பவுல் குறிப்பிட்டிருக்கிறார்.

விசுவாசம் கேள்வியினாலேயே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். மோசேயின் பெற்றோர்களின் விசுவாச அடிப்படைக்குக் காரணம், அவர்கள் பெற்றோர் மூலம் கேள்விப்பட்ட நோவாவின் சம்பவமே.

மூல மொழியில், நோவாவின் பேழைக்கும், மோசேயை சுமந்து சென்ற நாணற்பெட்டிக்கும் ஒரே வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

பெற்றோர்களே! தேவனின் மகத்துவமான கிரியைகளை உங்கள் பிள்ளைகளுக்கு விவரித்துச் சொல்லுங்கள். அப்பொழுது அம்ராம் – யோகெபேத் தம்பதியரின் விசுவாசத்தைப் போல் உங்கள் பிள்ளைகளின் விசுவாசம் விருத்தியாகும்.

பெற்றோரின் விசுவாசம் பிள்ளைகளையும் பற்றிப் பிடிக்கிறது. மிரியாம் பிள்ளைக்கு என்ன நடக்கும்? என்பதைக் கண்டறிய தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தாள். அப்பப்பா! வித்தியாசமான அக்கா! விசுவாசமுள்ள அக்கா!

அவளின் விசுவாசம் வீண் போகவில்லை. பார்வோனின் குமாரத்தி தாதியர்களின் பட்டாளத்தோடு ஸ்நானம் பண்ண வந்தாள். ஆஹா! அந்த நாணற்பெட்டி அவள் கண்ணில் பட்டுவிட்டது. தாதியரை அனுப்பி அதை எடுத்து வரும்படி சொன்னாள்.

தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த நாணற் பெட்டி, அடுத்த நிமிடமே தாதியர்களின் கையில் தவழ ஆரம்பித்துவிட்டது.

என் உள்ளம் உவகையால் துள்ளிக் குதிக்கிறது. என்னே ஆச்சரியம்! என்னே கிருபை! ஆற்றோடு அடித்துக் கொண்டு

போகக் கூடியவன் அரசகுமாரத்திக்கு தத்துப்பிள்ளையாகிறான்.

கடைசி அத்தியாயம் எழுதப்பட வேண்டிய பழைய சுவடியை தூக்கி எறிந்துவிட்டு, புதிய சுவடியில் புதிய அத்தியாயம் அங்கே ஆரம்பிக்கப்பட்டதை எண்ணிப் பாருங்கள்!

எனக்கன்பானவர்களே! இனி எங்களால் ஏதும் செய்ய முடியாது என்று ( நாணற் ) பெட்டிகட்டி உங்களை எவர் வழியனுப்பி, கைக்கழுவிவிட்டாலும் நீங்கள் கலங்கத் தேவையில்லை. எல்லாம் புதிதாயின என்ற வார்த்தையின்படி நீங்கள் எதிர்பாராத இடத்திலிருந்து, நீங்கள் நினையாத பாதுகாப்பை உங்களுக்குக் கட்டளையிட்டு, ஒரு புதிய அத்தியாயத்தை தேவன் துவங்கப் போகிறார்.

பொதுவாக இராஜக் குடும்பத்துப் பெண்களுக்கு அரண்மனையை ஒட்டியவாறே குளியல் தடாகம் (Swimming Pool) அமைக்கப்படுவது.

அக்கால வழக்கம் மட்டுமல்ல, நைல் நதி எகிப்திய மக்களுக்கு ஒரு புனித நதியாகும். எனவே, **நைல் நதியில் ஸ்நானம் பண்ண இராஜக் குடும்பத்துப் பெண்கள் எப்போதும் வரமாட்டார்கள்.** எப்போதாவது வருவார்கள்.

மோசேயை நாணற்பெட்டியில் வைத்து நைல் நதியிலே விட்டது தற்செயலல்ல. பார்வோன் குமாரத்தி அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஸ்நானம் பண்ண வந்ததும் தற்செயலல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நமது தேவன் அதனதன் காலத்தில் அந்தந்த காரியங்களை நேர்த்தியாய்ச் செய்கிறார். உங்களைக் குறித்த அவரது வேளை வரும்போது எல்லாம் மிகச் சரியாய் நடக்கும் என்பதை நினைவில் வையுங்கள்.

அம்ராம் – யோகெபேத் மூன்று மாதம் பொறுமை காத்தார்கள். இன்று என் புத்தகத்தை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் பிரச்சனையைக் கண்டு அவரசப்படாதே. தேவ சமூகத்தில் பொறுமையோடு ஒரு மூன்று மாதம் காத்திருந்து பார். உன் காரியம் மாறுதலாய் முடியும்.

அம்ராம் – யோகெபேத் விசுவாசம் பெரியது. அவர்கள் பதறவில்லை. பக்கத்து வீட்டாரிடம் கதறவும் இல்லை. கர்த்தருக்குக் காத்திருந்தார்கள். அதனால் அவர்கள் முகம்



வெட்கப்படவுமில்லை – உள்ளம் வேதனைப்படவும் இல்லை.

பார்வோன் குமாரத்தி அந்த நாணற் பெட்டியைத் திறந்தாள். என்னே ஆச்சரியம்! **பிள்ளை அழுதது** என்று வேதத்தில் அர்த்த புஷ்டியுடன் எழுதப்பட்டுள்ளது (யாத். 2 : 6).

மூன்று மாதம் வீட்டில் அழாத பிள்ளை இப்பொழுது வீறிட்டு அழுகிறது என்றால் அதன் அர்த்தம் என்ன தெரியுமா? அது அழும்படி தேவன் அனுமதித்தார் என்பதே.

மூன்று மாதம் அழாமல் சேர்த்து வைத்திருந்த அத்தனை அழுகையையும் சேர்த்து இந்தக் குழந்தை அழுதிருக்கும் என்றே நம்புகிறேன். எபிரெய பாரம்பரிய வழக்கில், இந்தக்குழந்தை அழும்படி காபிரியேல் தூதன் வந்து கிள்ளிவிட்டான் என்று நம்புகிறார்கள். எப்படிக் கிள்ளினான்? எங்கே கிள்ளினான்? என்ற தகவல் அறிந்துகொள்ள யாரும் கடிதம் எழுதாதீர்கள். எப்படியோ! குழந்தை அழுதது. பார்வோன் குமாரத்தி அதன் மேல் தன் இரக்கத்தைப் பொழிந்தாள்.

தேவன் நமது பட்சத்திலிருக்கும் போது, நம்மைக் காண்கிற யாவர் கண்களிலும் நமக்கு இரக்கமுண்டாகும் என்பது மட்டும் உண்மை. எஸ்தர் அரண்மனைக்கு போகும் முன்பு தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயவு பெற்றாள். அதுபோலவே பாலகனாகிய மோசே அரண்மனைக்குப் போகுமுன்பு அரச குமாரத்தியிடம் இரக்கம் பெற்றான்.

உங்களை உயர்த்த தேவன் ஒரு கால கட்டத்தை வைத்திருக்கிறார். அந்த நாள்வரை அமைதலாய் ஆவியானவருக்கு அடங்கியிருங்கள். அழிக்க நினைப்பவர்களே உங்களுக்கு அடைக்கலம் தரும் தருக்களாய் நிற்பார்கள்.

**இது எபிரெயர் பிள்ளைகளில் ஒன்று** என்று, பார்வோனின் குமாரத்தி பார்த்தவுடன் சொல்லி விட்டாள் (யாத். 2 : 6). இது எப்படி கண்டுபிடிக்கப்பட்டது என்பதற்கு சில காரணங்கள் உண்டு.

எகிப்தியர் தங்கள் ஆண்மக்களை நதியில் தூக்கிப்போட வேண்டும் என்ற அவசியமே இல்லை. தங்களுக்கேற்பட்ட நிர்ப்பந்தத்தினிமித்தம் எபிரெயரே இந்தப் பிள்ளையை நதியில் போட்டிருப்பார்கள் என்று யூகத்தின் அடிப்படையில் சொல்லியிருக்கலாம்.

ஆனால், அதைவிடவும் அழுத்தமான காரியம் ஒன்று உண்டு. அந்தப்பிள்ளைக்கு உடுத்தியிருந்த வஸ்திரம் அந்தப்பிள்ளை இன்னான் என்று காட்டிக் கொடுத்தது.

ஆம்! எபிரெயரின் உடையும், எகிப்தியரின் உடையும் வித்தியாசமானது. மாத்திரமல்ல எபிரெயரின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு சிறப்பு உடை வடிவம் உண்டு. நிறமும் உண்டு.

எனவே, பார்வோன் குமாரத்தி வெகு சுலபமாக இது எபிரெயக் குழந்தை என்று கண்டு பிடித்து விட்டாள்.

இங்கே ஒரு காரியத்தை நான் சொல்லியே ஆகவேண்டும். நமது கிரியைகள் மாத்திரமல்ல, நமது உடையும் நம்மை இன்னான் என்று காட்ட வேண்டும்.

நீங்கள் போகும்போதே உங்கள் உடையை வைத்து, இவன் கிறிஸ்தவன் - இவள் கிறிஸ்தவள் என்று மற்றவர்கள் சொல்ல வேண்டும்.

எல்லா வஸ்திரங்களையும் தேவனுடைய ஜனம் அணிந்து கொள்ளுதல் கூடாது. இப்படி சிலர் செய்கிறார்கள். அதற்கு சில நியாயங்களையும் எடுத்து வைக்கிறார்கள். இந்த சாரமற்ற சாக்குப் போக்குகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

எல்லாவற்றையும், அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் எல்லாம் எனக்குத் தகுதியாயிராது என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுவதை கவனியுங்கள்.

மேலும் வேதம், விலையேறப்பெற்ற வஸ்திரங்களினால் தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினால் தங்களை அலங்கரிக்க வேண்டும் என்று கூறுகிறது (I தீமோ. 2 : 9, 10).

தேவனுடைய பிள்ளைகள் மற்றவர்களால் அறிமுகம் செய்யப்பட வேண்டுவதில்லை. அவர்களுடைய வஸ்திரமே அவர்களை கிறிஸ்தவர்கள் என்று காட்டிக்கொடுத்து விடும்.

பார்வோனின் குமாரத்தி குழந்தையைக் குறித்த கரிசனையோடிருக்கும் அதே தருவாயில் "**இந்த பிள்ளையை வளர்க்கும்படி எபிரெய ஸ்திரீகளில் ஒருத்தியை நான் போய் அழைத்து வரட்டுமா**" என்று மிரியாம் கேட்கிறாள் (யாத். 2 : 7)



எபிரெய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வரட்டுமா என்று மிரியாம் கேட்டதிலிருந்து, "பார்வோன் குமாரத்தி. **இது எபிரெய குழந்தை** என்று சொன்ன போது" வெகு அருகில் நின்று மிரியாம் கவனித்திருக்கிறாள் - என்று என்னால் யூகிக்க முடிகிறது.

பார்வோனின் குமாரத்தியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு சொந்த தாயையே மிரியாம் சாதுரியமாக அழைத்து வந்தாள். இந்த இடத்தில் மிரியாமின் பணி எத்துனை சிறப்பு வாய்ந்தது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த அன்புள்ள அக்காவைக் குறித்து ஒரு புத்தகமே எழுதலாம். ஆனால் அதற்கு இங்கு இடமில்லை. எனினும் சிலப் பக்கங்கள் இந்த மிரியாமைக் குறித்து எழுதுவது சிறப்பென்று கருதுகிறேன்.

அம்ராமிற்குப் பிறந்த ஆரோன், மிரியாம். மோசே என்பவர்களில் மிரியாமே மூத்தவள், ஆரோனுக்கும் மோசேயுக்கும் மூன்று வயது மாத்திரமே வித்தியாசம். ஆனால், மோசே மூன்று மாத குழந்தையாக இருந்தபோது. ராஜகுமாரத்தியினிடத்தில் பேசும் அளவிற்கு விவரமுள்ள வயதையுடையவளாய் மிரியாம் இருந்தாள். (சுமார் 12 வயது இருக்கலாம்)

மோசேயின் பெற்றோர் குழந்தையை ஆற்றில் போடும்படிக்கு பகலில் சென்றிருக்க முடியாது. ஏனெனில் குழந்தையை நதியில் வீசும்படி அல்ல. நாணல் பெட்டியில் மிதக்கும்படி பிள்ளையை வைக்கும்படியே சென்றார்கள். நிச்சயம் அதிகாலை இருட்டோடே சென்றிருப்பார்கள். இங்கே கவனியுங்கள் பெற்றோர் பிள்ளையை நதியில் விட்ட பின்னர் வீடு திரும்பி விட்டார்கள். ஆனால் மிரியாமோ வீடு திரும்பவில்லை. பலமணி நேரம் நின்ற நிலையில் பிள்ளையை கண்காணித்து வந்தாள்.

எவ்வளவு பாசம் எவ்வளவு பொறுப்பு என்பதனை சிந்தித்துப் பாருங்கள். மிரியாமின் இந்த செயல்பாட்டை வேறு கண்ணோட்டத்தில் நான் பார்க்கிறேன். தனது சகோதரன் அழிந்து விடக்கூடாது, மரிக்கக் கூடாது என்று (ஆத்தும) பாரம் உடையவள் இந்த மிரியாம். அப்பா அம்மாவே சும்மா இருக்கும்போது

எனக்கென்ன கவலை என்று வாளாயிருக்கவில்லை.

அதுமட்டுமா ராஜகுமாரத்தி அந்தக் குழந்தையை தன் வசப்படுத்திக் கொண்டபோது இவள் துணிந்து சென்று இந்தப் பிள்ளையை வளர்க்க எபிரேய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வரட்டுமா என்று பேசியதைப் பாருங்கள்!

நதியருகே ஆத்தும பாரத்துடன் நின்ற மிரியாமை இங்கே ஆத்துமாக்களுக்காய் பரிந்து பேசும் மிரியாமாக என் கண்கள் காண்கிறது.

ராஜகுமாரத்தியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சொந்த தாயை அழைத்து வந்து உரிய நேரத்தில் மோசேயை தாயினிடத்தில் சேர்த்ததை எண்ணும்போது சபைக்குள் ஆத்துமாக்களை நடத்தும் மிரியாம் என் கண்களுக்கு முன்னே நிற்கிறாள்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இன்று இப்படிப்பட்ட அக்காக்களை கர்த்தர் சபையில் எழுப்புவராக. சகோதரனின் அழிவைக் குறித்து பாரப்படுகிறவர்கள். அதற்காய் தேவ சமூகத்தில் நிற்பவர்கள் அவர்களை திரும்ப சபைக்குள் கொண்டு வந்து சேர்க்கிறவர்கள் இன்றைய சபைக்கு அத்தியாவசிய தேவையாய் இருக்கிறார்கள்.

இன்றைய சபையில் உள்ளவர்கள் நிலையோ முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கின்றது. சில அக்காக்கள் ( மூத்த விசுவாசிகள்) செய்கிற காரியங்கள் சபையை ஆபத்துக்குள் வழி நடத்துகிறதாய் இருக்கின்றது.

சகோதரனை நதியில் வீசுகிறவர்கள், தாயை விட்டு ( போதகரை ) பிள்ளையைப் பிரிப்பவர்கள் இன்று எப்படியோ பெருகி விட்டார்கள். எபிரேய தாயை அழைத்து வரட்டுமா என்று கேட்பதை விட்டு இது எபிரேய குழந்தை தண்ணீரில் போட்டுவிடு என்று பரிசேய நீதியை நிலைநாட்டுகிறவர்கள் சபைக்குள் பெருகி விட்டார்கள். ஆண்டவரே! இந்த அக்காக்களை மிரியாமைப் போல மென்மையான, மேன்மையான இதயம் உள்ளவர்களாய் மாற்றும்.

எனது மனதில் ஆழத்தில் ஒரு சிறிய சுமை அழுத்திக் கொண்டு இருக்கிறது. அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது இவ்விடத்திற்கு பொருந்தி வருமா? என்று



எனக்குத் தெரியாது. எனினும் இதை எழுதாவிட்டால் எனக்குள் குற்ற உணர்வு வந்து விடும். எனவே அதை எழுதுகிறேன்.

ஏதோ சிலக் காரணத்தால், நிர்பந்தத்தால் பெற்ற குழந்தையையே தண்ணீரில் போடவேண்டிய நிலைக்கு பெற்றோர் தள்ளப்பட்டிருக்கலாம். அதே வேளையில் அந்தக்குழந்தை பிழைக்க வேண்டும். திரும்ப வரவேண்டும் என்ற ஆசை அவர்கள் அடிமனதில் இருந்தது உண்மை. அதனால் தான் வெறுமனே குழந்தையை நதியில் வீசாமல் நாணல் பெட்டியில் வளர்த்தி நதியில் வைத்தார்கள்.

இப்படி வீட்டை விட்டு வெளியே போய்விட்ட குழந்தையை மிரியாம் பின்சென்று கவனித்து – பரிந்து பேசி தன் புத்தியினாலும் யுக்தியினாலும் பிள்ளையைத் தாயினிடத்தில் சேர்த்துவிட்டாள்.

என் மனதில் என்ன அலை வீசுகிறது? என்ன அனல் வீசுகிறது? என்பதை எனது வாசகர்களாகிய நீங்கள் புரிந்து கொண்டு இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த வரிகளை எனது ஜெபவீட்டில் உட்கார்ந்து கொண்டு எழுதுகிறேன். கண்களில் நீர் முட்டிக்கொண்டு நிற்கிறது. கடந்த நாளில், நான் பெற்றது, சில காலம் என் பாதுகாப்பில் வைத்திருந்த அநேக ஆவிக்குரிய பிள்ளைகள் அந்த கண்ணீர்த் துளிகளில் நிழற்படமாய் நிற்கிறார்கள்.

ஆரோனும், மிரியாமும் என்னுடன் நிற்கிறார்கள். ஆனால் எனது மோசே? ஏதோ ஒரு சூழ்நிலையால் நிர்பந்தத்தால் என்னைவிட்டு வெகுதூரம் நைல் நதியில் – நாணற்கூடையில் இருக்கின்றான்.

அவனை நினைத்து அழமுடிகிறது. ஆனால் அழைத்து வர என்னால் போக முடியாது. எனது நிலை எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் இவன் தரிசனம் இல்லாதவன். பிள்ளையை தண்ணீரில் போட்டு விட்டு பன்னீர் குளியல் எடுக்கிறானே என்று எவரோ சொல்லும் வார்த்தை எனது காதுகளில் விழாமல் இல்லை. இதயம் கணக்கிறது. இதனால் எனது உடல்நலமே பாதிக்கப்படுகிறது.

என் பக்கத்திலுள்ள பிள்ளைகளில் ஒன்று மிரியாமாக மாறிவிட்டால் போதும் எனது மோசே மோசம், இல்லாமல் திரும்பி வந்துவிடுவான். முன்னே அவன் எனக்கு பிரச்சனையாக இருந்தான். இப்போதோ பிரயோஜனமுள்ளவனாக இருப்பான்.

ஏதோ என் சொந்தக் கதையை மீண்டும் இங்கு தொடர்கிறேன் என்று தவறாக நினைத்து விடாதீர்கள். வீட்டுக்கு

வீடு வாசப்படி என்ற தமிழ் பழமொழி அழகானது மாத்திரமல்ல ஆழமானதும் அனுபவப்பூர்வமானதுமாய் இருக்கின்றது.

இது எனது சபையில் மாத்திரம் நடக்கின்ற காரியமல்ல. கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருக்கிற அனைத்து சபைக்குள்ளும் நடைபெறுகிற தவிர்க்க முடியாத காரியமாகும்.

இல்லை! இல்லை!! எங்கள் சபையில் அப்படியில்லை என்று நீங்கள் சொல்ல முடியாது. ஆம்! ஆம்!! எங்கள் போதகர் சிலரை நதியில் வீசிவிட்டார் என்று நீங்கள் சொல்லவும் கூடாது. இந்த வேளையில் உங்கள் வேலையை நீங்கள் சரியாய் செய்ய வேண்டும் என்று கனிவோடும் பணிவோடும் உங்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

சபையைவிட்டு வெளியேறிய சிலரை உங்கள் போதகர் நேரில் சென்று அழைக்க முடியாது. அழைக்கவும் கூடாது. ஆனால் நீங்கள் போய் பேச வேண்டியவர்களிடத்தில் பேசி, அவர்களை போதகரிடத்தில் ஐக்கியப்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால் நீங்கள் தேவ ஜனத்திற்கும், சபைக்கும் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்று மாதக்குழந்தையாகிய மோசேயை உயிரைக் காப்பாற்றியது மாத்திரமல்ல. எண்பது வயதான மோசேயின் ஊழியத்திலும் உற்ற துணையாக மிரியாம் விளங்கியது குறிப்பிட வேண்டிய விஷயம். மூத்த விசுவாசிகள் இந்த மிரியாமைப்போல் சபைக்கு உற்சாகமூட்டும் முன்னோடிகளாய் இருக்கும்படி பழக வேண்டியது அவசியம்.

சரி, மோசேயினிடத்திற்கு வருவோம். எபிரேயத்தாயாகிய யோகெபேத்திடம் பார்வோனின் குமாரத்தி மோசேயை ஒப்படைத்தாள். அதுமட்டுமா? இந்தப் பிள்ளையை வளர்க்க உனக்கு சம்பளம் கொடுக்கிறேன் என்றாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உலக வரலாற்றிலேயே மூன்று மாதக்குழந்தை ஒன்று தன் தாய்க்கு சம்பளம் வாங்கித் தந்தது என்றால் அது மோசே மாத்திரமே. என்னே ஆச்சர்யம் பாருங்கள்.

நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். விசுவாசமும், தேவனுக்குப் பயந்தும் ஜீவிப்பவர்களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களுக்கு நஷ்டத்தையும், கஷ்டத்தையும் கொண்டுவர மாட்டார்கள். மாறாக ஆசீர்வாதத்தையும், உபகாரத்தையும் கொண்டு வருவார்கள்.

இங்கே விசுவாசிகளாய் இருக்கிற வாலிப தம்பியர், தங்கைகளுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். சிலர் தாங்கள் வாங்கும் சம்பளத்தை முழுமையாக பெற்றோரிடம் தருவதில்லை. தாங்கள் விரும்பும் ஆடை மற்றும் அலங்கார பொருட்களை வாங்கி, சம்பளத்தை செலவழிக்கிறார்கள்.



இதனால் பெற்றோர் பண நெருக்கடியால் வேதனைப்பட்டு, பிள்ளைகளை சலித்துக் கொள்ளுகிறார்கள். குடும்பத்தில் சண்டைகளும், போராட்டங்களும் என்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

என் சம்பாத்தியம், நான் அப்படித்தான் செய்வேன் என்று நீங்கள் ஒருநாளும் சொல்லக்கூடாது. உங்களை வளர்த்த – உங்களைப் படிக்க வைத்து ஆளாக்கிய உங்கள் பெற்றோர்களை உங்கள் சம்பளத்தால் தாங்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

மோசே மூன்றே மாதத்தில் தன் பெற்றோருக்கு சம்பாத்தியத்தை பெற்றுத் தந்தான் என்பதை சிந்தித்துப் பாருங்கள். செயலில் இறங்குங்கள்.

எத்துனை ஆண்டுகாலம் தன் பெற்றோருடன் மோசே இருந்தான் என்று தெரியவில்லை. **பிள்ளைப் பெரிதான போது** (யாத். 2 : 10) அந்தக் குழந்தையை பார்வோனின் குமாரத்தியினிடத்தில் விட்டாள் என்று எழுதப்பட்டிருக்கிறது. எத்தனை வயது என்று வேதத்தில் வெளிப்படையாக எழுதப்படாவிட்டாலும், என்ன பருவத்தில் மோசே அரண்மனைக்குச் சென்றான் என்பதை இஸ்ரவேலரின் பழக்கம் மற்றும் பாரம்பரியத்தை வைத்து கணிக்க முடியும்.

ஆதியாகமம் 21: 8 –ல் பிள்ளை வளர்ந்து, பால் மறந்தது. ஈசாக்கு பால் மறந்த நாளிலே ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான் என்று எழுதப்பட்டு இருக்கிறது. அதைப் போலவே சாமுவேலை அவன் தாயாகிய அன்னாள் பால் மறக்கப் பண்ணின பிறகு ஆலயத்தில் கொண்டுபோய் விட்டாள் என்று (Iசாமு 1: 24) எழுதப்பட்டுள்ளது. இவைகளை சரியாக கவனித்துப் பார்த்தால் மோசேயும் தான் பால் மறந்த பின்னரே அரண்மனைக்கு சென்றிருக்கக்கூடும். அதாவது அரண்மனைப் பள்ளிக்கூடத்தில் பாடம் படிக்க போதுமான வயதை உடையவனாக (சுமார் ஐந்து வயதில்) மோசே அரண்மனைக்குச் சென்றான்.

இந்த இளம் வயதில் மிகப்பெரிய மாற்று கலாச்சாரத்திற்குள் மோசேயை கர்த்தர் அழைத்துச் சென்றார் என்பது குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகும். ஐந்து வயது வரை எபிரெய முறைப்படி வளர்ப்பு, ஐந்து வயதுக்கு மேல் எகிப்திய

முறைப்படி வளர்ப்பு.

தேவனுடைய திட்டத்தில் இது மிகப்பெரிய இரகசியம். தமது ஊழியத்தில் எவரை பயன்படுத்த தேவன் முன் குறித்திருக்கிறாரோ, அவர் அந்தப் பணிக்கு தேவையான திறமைகளைப் பெறும்படி, அவர்(கள்) அறியாமலேயே மாறுபட்ட சூழ்நிலைகளில் தேவன் அவரை(களை) வளர்த்து வருகிறார்.

பின்நாளில், தனது ஜனத்தை மோசேயின் மூலம் விடுதலையாக்கிக் கொண்டு வரவேண்டும் என்பது தேவனின் திட்டம். எனவே, இதைக் குறித்த முன் வரலாற்றையும், வாக்குத்தத்தையும், தெய்வீக சித்தத்தையும் அறிந்து கொள்ளும்படி பாலபிராயத்தில் எபிரெய பெற்றோரிடம் மோசேயை வளர விட்டார். அப்பெற்றோர்கள். ஐந்து வயத்திற்குள் இதயப் பலகையில் தேவனுக்கடுத்த காரியங்களை ஆழமாகப்பதித்து விட்டார்கள்.

அடுத்து, தேவ ஜனத்திற்கு தலைவனாக மோசே எழும்ப வேண்டும் என்பது தேவனின் விருப்பம். அவர்களுக்கு அதிபதிகளாகவும், வழி நடத்துநராகவும் இருக்கும் பொருட்டு, தேவையான தலைமத்துவ, அரசியல், அறிவு, வீரம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும்படி இராஜ அரண்மனையில் வளர விடுகிறார். அங்கே அவன் சமுதாயத்துக்கடுத்த சகல கலைகளிலும் வல்லவனாக வளர தேவன் உதவி செய்தார்.

தேவனின் அதிசயமான திட்டம் இஃதுதான். வேற்று மொழி, வேற்று கலாச்சாரம் இவைகளுக்கு கட்டாயமாகவோ அல்லது சூழ்நிலை நிமித்தமாகவோ நீங்கள் தள்ளப்பட்டால் கலங்காதிருங்கள். மாறாக சந்தோஷப்படுங்கள்.

ஐயோ! இவர்களைப் பிரிய வேண்டுமே, அவர்களைப் பிரிய வேண்டுமே எனக்கலங்காதிருங்கள். இப்படிப்பட்ட பயிற்சியின் மூலம் தேவனின் மகிமையான சேவையில் பின் நாட்களில் உங்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தப் போகிறார். (இது ஒரு தீர்க்க தரிசன செய்தி).

இதோ, இந்தப் பாலகன் தனது சொந்தப் பெற்றோரை விட்டு, சொந்தக் கலாச்சாரத்தை விட்டு அரண்மனைக்குப் போகிறான். பார்வோனின் குமாரத்தி, இவனை ஜலத்திலிருந்து எடுத்தேன் என்று சொல்லி மோசே என்று பேரிட்டாள் (இது எகிப்திய பெயரல்ல. அர்த்தமுள்ள எபிரெயப் பெயராகும்) அது முதல் நாற்பது வயது வரை மோசே அரண்மனையில் அரசகுமாரனாய் வளர்ந்தான்.

# 3. வாலிபனாகிய மோசே

மோசேயின் வாழ்க்கையை, மூன்று நாற்பது ஆண்டுகளாய் பிரிக்கலாம். அரண்மனையில் நாற்பது ஆண்டுகள், ஆடுகளோடு வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள், ஆண்டவரின் ஆட்களோடு நாற்பது ஆண்டுகள் என்பவைகளே அவைகள்.

மோசே எகிப்தைவிட்டு ஓடும்போது, அவருக்கு நாற்பது வயது. அதன்பின் நாற்பது ஆண்டுகள் கழித்து எகிப்திற்குத் திரும்பி வருகிறார். எனவே, இந்த எண்பது ஆண்டுகளையும் அவரது வாலிபப்பருவமாக எடுத்துக் கொண்டு, அவரைக் குறித்து சில காரியங்களை இந்த அதிகாரத்தில் நாம் தியானிக்கப் போகிறோம்.

ஐந்து வயது சிறுவனாக, அரசக்குமாரத்தியின் மகனாக அரண்மனைக்குள் மோசே பிரவேசித்தான். பார்வோனின் குமாரத்திக்குப் பிள்ளைகளில்லை. எனவே, தனது தகப்பனின் ஸ்தானத்திற்கு பின்நாளில் மோசே வரவேண்டும் என்று எண்ணி, அவனை இராஜக்குமாரனைப் போல் வளர்த்தாள்.

இதனால், மோசே எகிப்தினுடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான். (அப். 7 : 22). இதுகர்த்தருடைய அநாதி திட்டமாகும்.

நாம் முன்னே அறிந்து கொண்டது போல. மோசேக்கு இரண்டு ஊழியங்களை கர்த்தர் வைத்திருந்தார். ஒன்று இஸ்ரவேலரை தேவனுக்கு நேராக திருப்புவது – நடத்துவது. தேவனில் வளர, வாழச் செய்கிற இம்மாபெரும் ஊழியத்திற்கு தேவன் மாத்திரமே படிப்பித்துத் தரமுடியும். மற்றொன்று, முற்பிதாக்களுக்கு வாக்குப் பண்ணப்பட்ட கானானுக்கு நேரே மக்களை நடத்துவது. இதற்கு யுத்த அறிவும், நிலவியல் அறிவும், சமுதாய அறிவும் அவசியம். அதற்கெனவே, அரண்மனைப் பிரவேசத்தை தேவன் அனுமதித்தார்.

ஒருவேளை, நைல் நதியில் போடாமல் வேறுவிதமாக மோசேயைக் காப்பாற்ற அவனது பெற்றோர்கள் முயற்சி செய்திருந்தால், அந்த முயற்சிக்கு வெற்றியும் கிட்டியிருக்கலாம்.

இரண்டு வயதிற்குட்பட்ட பிள்ளைகளைக் கொல்ல

வேண்டும் என்று ஏரோது சட்டம் போட்ட பொழுது தேவனின் நடத்துதலின்படி, இயேசுவின் பெற்றோர் எகிப்திற்கு ஓடிச்சென்றது போலவே, மோசேயின் பெற்றோர் எகிப்தைவிட்டு வேறு தேசத்திற்கு ஓடி பிள்ளையைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பு இருந்திருக்கலாம்.

அப்படிச் செய்திருந்தால், எதிர் விளைவு எப்படி இருந்திருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள் – முதலாவது இவர்களுக்கு பிழைப்புக்கடுத்த தேவைகளுக்கு திண்டாட வேண்டிய நிலை உண்டாகியிருந்திருக்கும். இரண்டாவதாக, ஒரு தலைவனுக்குரிய உயர்கல்வி, ஓங்கிய அனுபவம், சீரிய யுத்தப் பயிற்சி போன்றவை மோசேக்கு கிட்டாமல் போயிருக்கும்.

ஆனால், விசுவாசத்தில் தெய்வ சித்தத்திற்குக் கீழ்படிந்த பெற்றோர்களால் ஒரு சமுதாயத் தலைவனுக்குத் தேவையான முழுமையான தகுதியை பெற்றுக் கொண்டான் – பிரியமானவர்களே, தேவனுடைய திட்டங்கள் ஒருவேளை தற்காலத்தில் பெரும் சுமையைப் போல் நமக்குத் தோன்றலாம். நமக்கு இன்றைய சூழ்நிலையை மட்டும் தான் பார்க்கத் தெரியும். ஆனால் ஆண்டவர் எதிர்காலத்தையும் சேர்ந்தே அறிந்திருக்கிறபடியால், அதற்கேற்றார் போலவே, நம்மை வழிநடத்துகிறார்.

இதை நாம் புரிந்து கொண்டு, கண்களை மூடிக் கொண்டு கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்தால் நிகழ்காலக் காரியங்கள், எதிர்காலத்தில், செயற்கரிய செயல்கள் செய்ய நமக்கு பயிற்சியாக அமையும்.

எகிப்தின் அரண்மனை – ஆடம்பரம் – ஆகாரம் – ஆளுகை இவைகள் மத்தியில் மோசேயின் மூளையில் எகிப்தின் சகல சாஸ்திரத்திற்குரிய அறிவு நிறைந்திருந்தது உண்மையானாலும், அவனது இருதயத்தின் ஆழத்தில் எது நிறைந்திருந்தது தெரியுமா? **அம்மா சொல்லித் தந்த ஆண்டவரின் சித்தம்** மட்டுமே.

எபிரெயர் 11 : 24,25-ஐ வாசித்துப் பாருங்கள். "விசுவாசத்தினாலே மோசேதான் பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்றெண்ணப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடு



துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்."

நாற்பது வயது இளைஞனை சற்றுப் பாருங்கள்! பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்றெண்ணப்படுவதை **வெறுத்தான்** – இங்கே, பெற்றோர்கள் ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டும். மோசேயின் தாய் அவனது குழந்தைப் பருவத்தில், தேவனைக் குறித்தும், தேவ ஜனத்தைக் குறித்தும், முற்பிதாக்களுக்கு கர்த்தர் தந்த வாக்குத்தத்தங்களைக் குறித்தும் தெளிவாகப் போதித்திருந்தாள். அந்தப் போதனை அவனது வால வயதுவரை அவனுக்குள் அழியாமல் இருந்தது.

சில வேதப் பண்டிதர்கள், ஒரு அறையில் அமர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். அந்தக் கலந்துரையாடலின் ஊடே ஒருவர் சொன்னார்! "எல்லா மொழிப்பெயர்ப்பு வேதங்களிலும் அமெரிக்கன் ஸ்டேண்டர்டு வெர்சன் தான் (ASV) எனக்குப் பிடிக்கும்" என்றார். அதைக்கேட்ட அடுத்தவர், "அப்படியா! எனக்கு நியூ இண்டர்நேஷனல் வெர்சன் (NIV) தான் பிடிக்கும்" என்றார். இப்படியாய் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மொழிப் பெயர்ப்பை மெச்சிக் கொண்டனர்.

நிதானமாக ஒருவர் எழுந்தார். நீங்கள் சொன்ன எல்லா மொழிப் பெயர்ப்புகளைவிட மதர்ஸ் வெர்சன் (MOTHER'S VERSION) தான் எனக்குப் பிடிக்கும் என்றார். அப்படி ஒரு மொழிப்பெயர்ப்பை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.

"உண்மைதான். நான் சொன்னது வேறு, எனது இளம் வயதில் எனது தாய் சொல்லித்தந்த வேதப் போதனையே என்னை இந்த அளவிற்கு கொண்டு வந்தது. எனவே தான் அம்மாவின் மொழிபெயர்ப்பே சிறந்தது என்றேன்" என்று சொன்ன போது, உண்மை! உண்மை! என்று அவரது கூற்றை எல்லோரும் ஆமோதித்தனர்.

மோசேயின் தாய் இதைத்தான் செய்திருந்தாள். அது மோசேயின் ஆழ்மனதில் அப்படியே பதிந்து விட்டது. காலமோ, பாவ சந்தோஷமோ அதை அழிக்க முடியவில்லை.

உங்கள் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போதே வேதத்தை முறையாகப் போதியுங்கள். தெய்வ பயத்தை அவர்களுக்குள்ளாய் விதையுங்கள். அப்படிச் செய்தால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி கல்லூரிக்கோ –

வேலைக்கோ செல்லுகிற பொழுது நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்காது.

பாஸ்டர்! நீங்க சொல்வது சரிதான். என் குழந்தைகளை மிகக் கருத்தாய் வேதத்தைப் போதித்து வளர்த்தேன். சங்கீதங்களை மனப்பாடமாய் சொன்னால் தான் சாப்பாடு போடுவேன். ஆனால், இப்போது நிலைமை வேறு. என் பிள்ளைகள் உலகமாய்த் திரிகிறார்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? எனக் கேட்கலாம்.

இதோ பதில், உங்கள் பிள்ளைகளின் குழந்தைப் பருவத்தில் உங்கள் கடமைகளைச் சரியாய் செய்திருக்கிறீர்கள் என்று உங்கள் மனச்சாட்சி சொல்லுமேயானால், இனி நீங்கள் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம்.

உலகமாய்த் திரியும் உங்கள் பிள்ளைகள் உலகத்தில் – உலகத்தால் – அழியமாட்டார்கள். **மோசே பெரியவனான போது, வெறுத்து** பாவ சந்தோஷத்தை விட்டு விலகியது போல் உங்கள் பிள்ளைகளை சரியான நேரத்தில் உலகத்தை வெறுக்க வைத்து தேவ ஜனத்தோடு, தேவனே சேர்ப்பார்.

பிள்ளைகளினிமித்தம், தொல்லைகளை அனுபவிக்கும் ஆவிக்குரிய பெற்றோர்களே! இது உங்களுக்கென தேவன் அனுப்புகிற தீர்க்கதரிசன செய்தி, இதைக் குறித்து வைத்துக்கொண்டு தினமும் துதியுங்கள். தேவனின் மகிமையை நீங்கள் காண்பீர்கள்.

எனக்கன்பான வாலிபத் தம்பி! தங்கையே! உங்களுக்கொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இஸ்ரவேலர் மத்தியில் எத்தனையோ வாலிபர்கள் இருந்தாலும் அவர்களில் மோசேயை தேவன் தேர்ந்தெடுத்ததற்கு என்ன காரணம் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அரண்மனை – அதிகாரம், இவைகள் தனக்குத் தானமாய் வழங்கப்பட்டிருந்தாலும் அவைகள் அநித்தியமானவைகள், பாவ சந்தோஷமானவைகள் என்று நியாயந்தீர்த்து மோசே வெறுத்ததே தேவனுக்கு முன்பாக விசுவாசக் கிரியையாக இருந்தது.

வேதத்தை நன்றாய் வாசித்துப் பாருங்கள். எவர்கள் தங்களின் வாலிப நாட்களை தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தார்களோ அவர்களை மிகவும் வல்லமையாய்



பயன்படுத்தி உயர்ந்த இடத்தில் தேவன் வைத்தார்.

வாலிபனாகிய யோசேப்பு எகிப்திலே உயர்த்தப்பட்டதையும், வாலிபனாகிய தானியேல் பாபிலோனில் உயர்த்தப்பட்டதும், வாலிபனாகிய தாவீது இஸ்ரவேலில் உயர்த்தப்பட்டதும், பழைய ஏற்பாட்டில் நமக்கு திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மட்டுமா – சவுல் (பவுல்) என்கிற வாலிபன் தீமோத்தேயு என்கிற வாலிபன் புதிய ஏற்பாட்டிலே நமக்கு திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வரலாற்றுப் புகழ்பெற்றவனும் உலக சம்பத்தில் நிறைந்தவனும், மிகப்பெரிய ஞானியுமாகிய சாலமோனின் வாழ்வை கவனித்துப் பாருங்கள். அவன் விரும்பினதையெல்லாம் செய்தான் – அனுபவித்தான். முடிவாக, ஒன்றை மாத்திரம் கண்டுபிடித்தான்.

அது என்ன தெரியுமா? மாயை – மாயை சூரியனுக்குக் கீழ் எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமானவைகள், (பிரசங்கி) ஆம், இதுதான் உண்மை.

வாலிபர்களே! இந்த உலகத்தில் எல்லாமே மாயை, பணம், அழகு, காதல், எல்லாமே மாயை – மாறிப் போகிறவைகள். நீர்க் குமிழியைப் போல், வானவில்லைப் போல் சில நிமிடங்கள் அவைகள் அலங்காரமாய் ஆட்டம் போட்டு அழிந்து போகிறவைகள். அவைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

மோசேயின் இரண்டுவிதமான அறிக்கையைப் பாருங்கள். எகிப்தின் சகல காரியமும்,

1. அநித்தியமானவைகள்
2. பாவ சந்தோஷம்

இவைகளை நீங்கள் இன்றே வெறுத்து ஒதுக்கித்தள்ள வேண்டும். ஏனென்றால், நித்திய ஜீவனுக்காகவும், நித்திய சந்தோஷத்திற்காகவும் நீங்கள் அழைக்கப்பட்டவர்கள். இதை ஒருக்காலும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஒரு நாள், மோசே மெதுவாக வெளியுலா போகிறார். எங்கே தெரியுமா? தன் சகோதரிடத்தில். அங்கே அவர்கள் படுகிற பாட்டைப் பார்த்தவுடன், அவன் இரத்தம் கொதிக்கிறது. எபிரெயனை எகிப்தியன் அடிப்பதைப் பார்த்தபோது, அவன் உள்ளம் தாங்கொண்ணாத் துயரம் கொள்கிறது.

தன் ஜனத்திற்காக – தன் சகோதரன் படுகிற

பாடுகளுக்காக பரிதபிக்கிற வாலிபனாகிய மோசேயைக் கவனித்துப் பாருங்கள்.

அரண்மனையிலிருந்து ஆட்டம் போடும்படியாக அவன் வெளியே செல்லவில்லை. தனது (எபிரெய) சகோதரர்களைப் பார்க்கச் சென்றான்.

வாலிபரே! நீங்கள் வெளியே எதற்குப் போகிறீர்கள்? யாரைப் பார்க்கப் போகிறீர்கள்?

இரட்சிக்கப்பட்ட வாலிப தம்பி! தங்கையே! உனக்கு உன் சகோதரர்களைக் குறித்த ஆத்தும பாரம் உண்டா? உன்னைக் கர்த்தர் உயர்த்தி வைத்திருப்பது எதற்காக? உல்லாசத்தை அனுபவிக்கவா? அல்லது உபத்திரவத்திலுள்ள ஆத்துமாக்களைச் சந்திக்கவா?

மோசே சகோதரர்களைப் பார்க்க வெளியே போனான். ஈசாக்கு தியானம் பண்ண வெளியே போனான். அவர்கள் தேவனிடத்தில் ஆசீர்வாதத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றார்கள். அதே வேளையில், யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைச் சுற்றிப் பார்க்கும்படியாகப் போனாள். யூதாஸ் இராப்போஜன வேளையில் எழுந்து, வெளியே போனான். இவர்கள் தேவ கிருபையையும், பாதுகாப்பையும் இழந்தார்கள்.

கவனமாயிருங்கள்! இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தான் எவனை விழுங்கலாமோவென்று வகைதேடி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல சுற்றித்திரிகிறான். அவனது கையில் சிக்குண்டால் உங்களைக் காப்பாற்றுவது அரிது.

வாலிப வயதில் ஏற்படுகிற மற்றுமொரு ஆபத்தை மோசேயின் வாழ்க்கை நமக்கு வெகு அழகாகப் போதிக்கிறது.

மோசே தனது சகோதரர்களைப் பார்க்க வந்தபோது எகிப்தியன் ஒருவன் எபிரெயனை அடிக்கக் கண்டான். அவ்வளவுதான். வாலிப இரத்தம் கொதித்தது. வேகம் பிறந்தது. அந்த எகிப்தியனை அடித்தே கொன்றான். அத்தோடு விட்டானா? அதுதான் இல்லை. அப்படியே மண்ணில் அடக்கம் செய்துவிட்டான்.

மோசேயைக் கேட்டால், நான் கொலை செய்ய வில்லை. எனது சகோதரனுக்கு விடுதலை கொடுத்தேன் என்பான். ஏனெனில், தனது சகோதரர்களுக்கு விடுதலைப் பெற்றுத்தரவே



தான் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்கிற அறிவு அவனுக்குள்ளிருந்தது.

இங்கே ஒன்றை கவனிக்க வேண்டும். தேவனின் தெரிந்து கொள்ளுதலைக் குறித்த வெளிப்பாடு நமக்கு இருந்தாலும், அந்த சிறப்புச் செயலை செய்வதற்கு ஆண்டவரின் வேளை எது? விதம் எது? (PROPER TIME AND PROPER METHOD) என்கிற தெளிவு – அறிவு நமக்கு இருக்க வேண்டும்.

மோசேயைப் போலவே, ஆர்வக் கோளாறில், சில வாலிபர்கள் ஊழியம் செய்கிறோம் என்ற வேகத்தில், எபிரெயர்களுக்கு உதவுகிறோம் என்ற எண்ணத்தில் எகிப்தியர்களை வீழ்த்திக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த வேகம் – விவேகமல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஊழிய வாஞ்சையால் உந்தப்படும் வாலிபர்களே! எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் செய்யும் ஊழியத்திற்கு காரணம் ஆவியின் நடத்துதலா? அல்லது ஆர்வக் கோளாறா? எது என்பதை திட்டமாய் அறிந்து செயல்படுங்கள்.

மோசேக்கு ஏற்பட்டது போலவே, சில வேளைகளில் உணர்ச்சி வசப்படுகிற தன்மை நம்மையும் பிடித்துக் கொள்கிறது. மோசே எகிப்தியனை வீழ்த்தியது மாத்திரமல்ல. ஆவேசத்தில், கற்பலகைகளையும் வீசி நொறுக்கினதை கவனிக்க வேண்டியது அவசியம்.

வாலிப வயதின் வேகம் காட்டாற்று வெள்ளம் போல அதனால் செழிப்பு ஏற்படுவதற்குப் பதிலாக, சேதம் ஏற்படுவதே அதிகப்பட்சம் என்பதை மறந்து விடக்கூடாது. அந்தக் காட்டாற்றின் வெள்ள வேகத்தை தடுத்து – நிறுத்தி – வகைப்படுத்தினால் வளம் பெறுவது உண்மை.

அதைப்போலவே, நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் தேவ சமூகத்தில் வைத்து ஆவியானவரின் ஒத்தாசையுடன் நமது திட்டங்களை வகைப்படுத்தினால், நமது ஊழியத்தில் வெற்றி வாகை சூடி மகிழலாம். அல்லாவிட்டால் மோசேயின் வாழ்வில் ஏற்பட்ட கதிதான் நமக்கும் ஏற்படும்.

மோசேக்கு தனது செயலால், அன்று அவனுக்குத் திருப்தி, அடுத்த நாளோ, அவனை சந்தித்தது அதிர்ச்சி, ஆம். எபிரெயர்கள் இருவர் மத்தியில் ஏற்பட்ட பிரச்சனைக்கு பஞ்சாயத்து பண்ணப் போனான். நடந்தது என்ன? அவர்கள்

அவனை அங்கீகரிக்கவில்லை. அதனால், சகோதரர்கள் மத்தியில் மட்டுமல்ல. எகிப்திலேயே நிற்க முடியாத சூழ்நிலை, பிடித்தான் ஓட்டம் !

இப்படித்தான் சிலர் வாலிப வேகத்தில் அதையும், இதையும் செய்கிறார்கள். அப்போதைக்கு அதிலே ஒரு திருப்தி ஏற்படுவது உண்மைதான். ஆனால், வெகுசீக்கிரத்தில் சபையிலும், சமுதாயத்திலும் தங்களது அங்கீகாரத்தை இழந்து ஊரைவிட்டே ஓடிப்போக வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். கவனமாயிருங்கள்!

இப்போது மோசேக்கு நாற்பது வயது. அக்கால ஆயுளின் சராசரிப்படி மோசே ஒரு இளம் வாலிபன். (ஈசாக்குக்கும் நாற்பது வயதில் தான் திருமணம் ஆனது ஆதி 25 : 20). இந்த இளம் வயதில் பார்வோனுக்கு அஞ்சி மோசே மீதியான் தேசத்துக்கு ஓடிப்போனான்.

வேதத்தில் மோசே மீதியான் தேசத்துக்குப் போனதையும், துரவண்டையில் எத்திரோவின் பெண்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்ட வந்ததையும் ஒரே வசனத்தில் எழுதப்பட்டுள்ளதால், ஓடிபோன அன்றே அவனுக்குப் பெண் கிடைத்துவிட்டது என்று எண்ணி விடாதீர்கள்.

இந்த வசனப்பகுதி, சம்பவங்களின் தொகுப்பு. எனவே, ஒவ்வொரு சம்பவத்திற்கிடையில் கால இடைவெளி இருக்கிறது என்பதை உணர்தல் வேண்டும். யாத் 2 : 15-ல் மீதியான் தேசத்தில் **தங்கி** என்று குறிப்பிட்டுள்ளபடியால், சில ஆண்டுகள் அவன் மறைந்திருந்தான் என்பதை அறிந்திடல் வேண்டும். இப்படிப்பட்ட தங்கியிருப்பின் காலத்தில், ஒரு நாளில் எத்திரோவின் மகள்களின் சந்திப்பு ஏற்பட்டது.

அக்கால வழக்கின்படி ஊருக்கு வெளியே கிணறுகள் தோண்டி வைப்பது வழக்கம். அந்தக் கிணறுகள் (துரவு) அண்டையில் முக்கிய காரியங்களுக்காக ஒன்று கூடுவது அவர்களது வழக்கம். வேதத்தில், எலியேசர் ரெபோக்காளை துரவண்டையில் கண்டார். யாக்கோபு ராகேலை துரவண்டையில் கண்டார். அந்த வரிசையில் இப்போது மோசேக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது.

அந்த வரிசை அன்றோடே முடிந்து விட்டது. இன்று யாரும் நான் அந்த வரிசையின் வாரிசு என்று கிணற்றுப் பக்கம் போகாதீர்கள் வம்பாய் முடிந்துவிடும்.



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது வழக்கத்திலுள்ள பழமொழி. ஆனால் வேதமோ நமக்கு ஏற்ற துணையை தேவனே உண்டாக்குகிறார் என்பதை தெளிவாகச் சொல்லுகிறது. எனவே, வாலிபர்களே, உங்கள் திருமணக் காரியங்கள் தேவ ஆவியானவரால் ஏற்படுத்தப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதில் கவனமாயிருங்கள்.

சிலர் தங்களாகவே மாம்சத்தின்படி வாழ்க்கைத் துணையைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டு, ஊரைச் சுற்றியடித்துவிட்டு கடைசியில், "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" – என்று திருமண அழைப்பிதழில் அச்சிட்டதைப் பார்த்து, வெட்கப்பட்டு – வேதனைப்பட்டு இருக்கிறேன். ஆண்டவர் எவ்வளவு வேதனைப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது.

இப்படி திருமணப் பத்திரிக்கையில் வசனம் போட்டு மணவிழா நடத்தியவர்களில் பலர் மாதத்திற்கு இருபத்தைந்து நாட்கள் யுத்தம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரியம் யாரால் வந்தது என்று அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

வேதத்தில் யாரும் அவசரக் கல்யாணம் புரிந்து கொள்ளவில்லை. கவனமாயிருங்கள். ஈசாக்கிற்கு எலியேசர் சென்று பெண் கொண்டு வந்தார். அதன் பின்னர். ஈசாக்கு மணம் முடித்துக் கொண்டான்.

ராகேலை யாக்கேபு நேசித்தது உண்மைதான். ஆனால் ஏழாண்டுகள் முழுமையாய் காத்திருந்து முறைப்படி திருமணம் புரிந்து கொண்டான். தன்னோடு பேசுவது ராகேலா, லேயாளா என்று கூட வித்தியாசம் காண யாக்கோபால் முடியவில்லை. அப்படியானால், அந்த ஏழு ஆண்டுகள் தன் மாமன் மகள்களோடு நெருங்கிப் பழகாமல், தன் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டான் என்பது நன்கு புரிகிறதல்லவா?

அதைப்போலவே, மோசே சில காலம் மீதியான் தேசத்தில் தங்கியிருந்தான். எத்திரோவின் ஏற்பாட்டின்படி மோசே சிப்போராளை திருமணம் புரிந்து கொண்டான். முறைகேடான, முரண்பாடான திருமணத்தை தேவன் அங்கீகரிப்பதில்லை – ஆசீர்வதிப்பதில்லை. உங்கள் ஊழியர் அல்லது உங்கள் பெற்றோர் ஆலோசனையின்படியே திருமணங்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்பதை சிந்தையில் வையுங்கள்.

ஆபிரகாம் ஈசாக்கிற்கு தன் இனத்தாரிடத்தில் பெண் கொண்டான். யாக்கோபு தன் மாமன் வீட்டில் பெண் கொண்டான். இப்படியிருக்க மீதியான் தேசத்து பெண்ணை எப்படி மோசே மணம் முடிக்கலாம்? இது நியாயமா? நாங்களும் ஏன் அப்படி செய்யக்கூடாது என்று கேள்விகள் கேட்பீர்களாயின், அது அறியாமை என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மீதியான் தேசத்து குடிகளாகிய மீதியானியர் யாரென்று முதற்கண் நீங்கள் அறிதல்வேண்டும். ஆபிரகாமிற்கு

1. சாராள் என்கிற மனைவி

2. ஆகார் என்கிற அடிமைப் பெண்

3. கேத்தூராள் என்கிற மற்றுமொரு விவாக மனைவி

என்ற மூன்று பேர்கள் மூலம் சந்ததிகள் உண்டாயிற்று.

இதில் கேத்தூராள் (ஆதி 25 : 1, 2) என்பவளுக்குப் பிறந்த நான்காவது குமாரன் தான் மீதியான் என்பவன். இவன் வழியில் வந்தவர்களே மீதியானியர். எனவே, மோசே ஆபிரகாமிற்கு சாராள் வழி சந்ததி. சிப்போராள் ஆபிரகாமிற்கு கேத்தூராள் வழி சந்ததி. இப்படியாய் வேறு இடத்திலல்ல. ஆபிரகாம் வம்சத்தில் தான் மோசே பெண் எடுத்தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சபையில் பிரசங்கத்தின் இடையில் மோசேயின் மனைவியின் பெயர் என்னவென்று கேட்டேன். "அவருக்கு விவாகமே ஆகவில்லை" என ஒரு கூட்டத்தினர் கூறினர். மற்றுமொரு கூட்டத்தினர் மோசேக்கு இரண்டு மனைவி என்று கூப்பாடு போட்டனர். அது எப்படி என்று நான் கேட்டதற்கு, எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தான் (எண். 12 : 1) என்று வசனத்தைக் காட்டி மீதியானில் ஒன்று, எத்தியோப்பியாவில் ஒன்று என்றனர்.

எது சரி என்று நீங்கள் திகைக்கக்கூடாது. அந்நாட்களில், மீதியான், எத்தியோப்பியா ஆகிய பகுதிகள் ஒரே ஆளுகையின் கீழ் இருந்தது. எனவே, அவள் எத்தியோப்பிய பெண் என்று அழைக்கப்பட்டாள். எழுத்தின்படி அவள் எத்தியோப்பிய இனத்தைச் சேர்ந்தவள் அல்ல என்பதே அதன் உண்மை.

யாக்கோபு பெண் கொள்ளும்படி மாமனின் ஆடுகளை மேய்த்தான். மோசே பெண் கொண்டபடியால் மாமனின் ஆடுகளை மேய்த்தான். பார்வோனின் அரண்மனையில் நாற்பது ஆண்டுகள் ஆளுகைக்குரிய பயிற்சி பெற்ற மோசேக்கு,



அடுத்த கட்ட ஆன்மீகப் பயிற்சி இங்கிருந்து தான் துவங்கிற்று. அரண்மனைப்படிப்பை வைத்துக் கொண்டு ஆண்டவரின் ஊழியத்தைச் செய்ய முடியாது. அந்தப் பயிற்சியை மாத்திரம் வைத்துக் கொண்டு இஸ்ரவேலரை கானானுக்குள் வழி நடத்த மோசே வந்திருந்தால், எகிப்தியனை கொன்றது போலவே, முறுமுறுத்த இஸ்ரவேலரையும் கொன்றே புதைத்திருப்பான்.

ஆண்டவரின் ஊழியம் என்பது முற்றிலும் வித்தியாசமானது. வேதக் கலாசாலை உட்பட எந்த இடத்திலும் அதற்கான முழுமையான பயிற்சி கிடையாது. வேத கலாசாலையில், வேத அறிவைப் பெற்றுக் கொள்ளலாம். பிரசங்கிக்கக் கற்றுக் கொள்ளலாம். அவைகளை வைத்துக் கொண்டு ஒரு சபையை நடத்தி விடலாம் என்று நீங்கள் கணக்குப் போட்டால், தோற்றுப் போய்விடுவீர்கள்.

அதற்கு எல்லாக் காலத்திலும் தேவனே பயிற்சி கொடுக்கிறார். இந்த நாற்பது ஆண்டுகள் இரண்டு விதமான பின்னணியில் மோசேக்கு தேவன் பயிற்சி கொடுத்தார். முதலாவது குடும்பம், இரண்டாவது ஆட்டு மந்தை. இந்த இரண்டையும் கட்டிக் காப்பது என்பது பெரிய வேலை, அரிய வேலை.

மீதியான் தேசத்தில் தங்கியிருந்த நாட்களில் மோசேக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். கெர்சோம் (யாத் 2 : 22) என்பவன் முதலாம் மகன். அந்நிய தேசத்தில் பரதேசி என்பது அப்பெயருக்குப் பொருள். இரண்டாம் மகனுக்கு எலியேசர் என்று பெயர். அதற்கு பட்டயத்திற்குத் தப்புவித்தார் என்பது பொருள்-அவன் மனைவி சிப்போராள் என்ற பெயருக்கு சிறுபறவை என்று பொருள்.

இந்த சொந்தக் குடும்பத்துடன் தனது மாமனாகிய எத்திரோவின் ஆடுகளையும் பராமரித்து வந்தான். இந்த நாற்பது ஆண்டுகளில், மோசேயின் பெருமை, கோபம், சுயம், போன்றவைகள் சரியாக உடைக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெட்டி அழிக்கிறவனாக இருந்த அவனை, கட்டி அணைக்கிறவனாக கர்த்தர் மாற்றினார்.

தேவப் பர்வதத்தில் தேவன் சந்தித்தார். தேவ தரிசனம் வலுப்பெற்றது. அன்றுதானே வாலிபனாக இருந்த மோசே இரட்சகனான மோசேயாய் மாறினார்.

# 4. இரட்சகனாகிய மோசே

ஏறக்குறைய எண்பது வயது. அரண்மனைப்பாடம் ஆடுகளுக்குப் பின் செல்லும் அனுபவம், மனைவி – மக்கள் என்கிற குடும்பம் இவைகளோடு மோசே இன்னும் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்.

பரத்தின் தேவன் எகிப்தின் அடிமைத் தனத்திலிருக்கும் இஸ்ரவேலரை கண்ணோக்கினார் – இதுவே இவர்களை விடுவிக்கும் வேளை எனத் திட்டம் பண்ணினார். இந்தப் பெரிய வேலைக்கு சரியான நபரை தேடிக் கொண்டிருந்த ஆண்டவரின் கண்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மோசேயை பொருத்தம் எனக் கண்டது.

மோசேயின் வாழ்வில் இதுவரைமவுனமாய் கிரியை நடத்தின தேவன், இப்பொழுது நேரடியாய் செயல்பட ஆரம்பித்தார். மோசேயை எகிப்திற்கு அனுப்பும்படி தேவனே இறங்கி வந்தார். அஃதினை ஒரு அற்புதமான தரிசனத்தின் மூலம் மோசேக்கு வெளிப்படுத்தினார்.

ஒரு முட்செடியில் அக்கினி ஜுவாலித்து எரிகிறது. இந்தப் புதுமை காட்சியினை உற்றுப் பார்த்த மோசேக்கு புரியாத ஆச்சரியம் எழும்பியது. அந்த அக்கினியில் செடி பற்றியெரியாமல், வேகாமல் நின்றது. அந்த ஜுவாலித்து எரிகிற அக்கினியூடே இருந்து கர்த்தர் மோசேயிடம் பேசினார்.

இந்த முட்செடி சம்பவத்தை முன் வைத்து, ஒரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன். பரிசுத்த ஆவியைக் குறித்து என்னிடம் ஒருவர் தர்க்கம் புரிந்தார். “தேவன் சர்வ வல்லமையுள்ளவர், மகாப்பரிசுத்தர், இப்படியிருக்க அவரின் வல்ல ஆவி நமது உள்ளத்திற்குள் வந்தால், நாம் அழிந்து போவோம். எனவே, பரிசுத்த ஆவி, அபிஷேகம் என்பதெல்லாம் சும்மாதான்” என்றார்.

எனக்கு என்ன பதில் பொருத்தமாய் இதற்கு சொல்வது என்று திகைப்பு ஏற்பட்டது உண்மை. அதே நேரத்தில் இவ்வேத சம்பவத்தை மின்னலென என் சிந்தையில் வந்திட தேவன் செய்தார்.

“பாருங்கள்! சாதாரண பச்சை முட்செடி, அதில்



வழக்கமான முறையில் அக்கினியை மூட்டினால், அந்த முட்செடி படபடவென தெறித்தெரிந்து, கருகிப் போகும். ஆனால், அந்தச் செடியில் இறங்கினது தேவனுடைய அக்கினிப் பிரசன்னம். அதனால், அந்தச் செடி எரியவில்லை. மாறாக, அந்தச் செடிக்குள்ளிருந்து பிரகாசம் வெளியேறினது. அதைப் போலவே, பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வருகிற போது அவரின் மகிமைப் பிரசன்னத்தினால் நாம் அழிந்து போகிறதில்லை. மாறாக, உலகத்தின் கவனத்தை ஈர்க்குமளவில் பிரகாசித்து ஜொலிக்கிறோம்” – இந்த பதிலைச் சொன்னபோது அவர் மவுனமாகிவிட்டார்.

மோசேக்கு கர்த்தர் முட்செடியில் தரிசனம் தந்தது மாத்திரமல்ல– அவருடன் பேசி, தமது திட்டத்தை விவரித்து, அற்புதங்களை நிகழ்த்த, அதிகாரத்தை அவர் கையிலே கொடுத்தார்.

இப்பொழுது, ஆடுகளை மேய்ப்பதை விட்டுவிட்டு, எகிப்தை நோக்கி அழைப்பின் நிச்சயத்தோடு, ஆண்டவரின் அங்கீகாரத்தோடு, அற்புதங்கள் செய்யும் அதிகாரத்தோடு இரட்சகனாகப் புறப்பட்டார் ( முன்னே அவரது எபிரெய சகோதரர்கள் அவரை அங்கிகரிக்காமல், அலட்சியப் படுத்தியிருந்தனர் என்பது நீங்கள் அறிந்ததே).

இந்தப் புறப்பாட்டிற்கு முன்னர், எகிப்திற்குப் போவதற்கு மோசே தேவனிடத்தில் பலமுறை மறுப்புச் சொன்னார். எப்படியோ, மோசேயை ஒப்புக் கொள்ள வைத்து தேவன் அனுப்பிவைத்தார். ஆகிலும் தேவன் (யாத் 4 : 14) மோசேயின் மேல் கோபங்கொண்டார். இந்த ஒருமுறை மாத்திரம் அல்ல. மூன்று முறை தனது ஊழிய நாட்களில் தேவனுடைய கோபம் மோசேக்கு எதிராக திரும்பியது என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

தேவன் மோசேயின்மேல் கோபங்கொண்ட மூன்று சம்பவங்களை நாம் சரியாய் கவனித்துப் பார்த்து, நமது வாழ்வை செவ்வையாய் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

**முதல் சம்பவம்** :

பல அற்புதங்கள், பல வாக்குத்தத்தங்கள் என மோசேக்கு தேவன் அளித்தாலும், எகிப்துக்குப் போக மனமில்லாமல் தட்டிக் கழித்துக் கொண்டேயிருந்தார். தேவனுடைய கோபம் எழும்ப

இதுவே முதல் காரணம்.

இங்கே, ஒரு வேத வரலாற்றை கவனித்துப் பார்ப்போம். (1) ஆபிரகாமிற்கு வாக்கு செய்தபடி இஸ்ரவேலர் எகிப்தில் நானூறு (400) வருடம் இருப்பார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. (ஆதி.15 : 13)

(2) ஆனால், இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்று முப்பது (430) வருஷம் என்று யாத் 12 : 4-ல் எழுதப்பட்டுள்ளது.

இதில், நானூறு வருடம் என்று தேவன் சொல்லியிருக்க, நானூற்று முப்பது வருடம் என்று விஸ்திரிக்கப்பட்டதின் காரணம் என்ன என்பதனை நாம் சிந்தித்துப் பார்த்திடல் வேண்டும்.

தெய்வீக திட்டத்தின்படி நானூறு வருடத்தில், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து தேவன் செயல்படத் துவங்கினார். ஆனால் அழைப்பின் உணர்வைப் பெற்ற மோசே அவசரப்பட்டு எகிப்தியனைக் கொன்று போட்டபடியால், அங்கு இருக்க முடியாமல் மீதியானுக்கு ஓடவேண்டிய அவசியமாயிற்று. இதினிமித்தம், இஸ்ரவேலரின் விடுதலை முப்பது ஆண்டுகள் தள்ளிப் போயிற்று.

ஏற்கனவே, முப்பது ஆண்டுகள் கால தாமதம் செய்துவிட்ட மோசே இப்பொழுது இன்னும் சாக்குப் போக்குச் சொல்வதினால், தேவனுடைய கோபம் எழும்பலாயிற்று. ஊழியத்தில் அவசரமும் கூடாது – அலட்சியமும் கூடாது. இப்படிச் செய்கிறவர்களை தேவன் பொறுத்துக் கொள்வதில்லை. ஆண்டவரின் வேளை வருவதற்கு முன்பு, ஊழியத்திற்கு இறங்குகிறவர்கள் இடறல் கொண்டு வருகிறார்கள். ஆண்டவரின் அழைப்பின் வேளை வந்த பின்னும் தாமதிக்கிறவர்கள் இடறிப் போகிறார்கள்.

தாவீதை சாமுவேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார். ஆனாலும், தாவீது அவசரப்படவில்லை. சவுலின் கீழ் இருந்து, சவுல் மரித்த பின்னரே, இராஜாவானார். அதனால், அவரது இராஜ்யபாரம் நிலைத்து நின்றது.

அதே வேளையில், கர்த்தர் சவுல் என்கிற பவுலை தமது “ஊழியத்திற்கு அழைத்த போது, தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களில் பிரசங்கித்தான்” (அப். 9 : 20) என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்.

**எனவே, அவசரமும் - அலட்சியமும் அல்ல, பொறுமையும் - பொறுப்பும் உள்ளவர்களே தேவனின் இன்றைய தேவை.**



**இரண்டாவது சம்பவம்** :

“வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப் பார்த்தார்” (யாத் 4 : 24)

இந்த வசனத்திற்கு வேதப் பண்டிதர்கள் பல்வேறு விளக்கங்களைச் சொல்லுகிறார்கள். நாம் முந்தினக் குறிப்பில் கவனித்த முப்பதாண்டுகள் கால தாமதமும் இந்த விளக்கங்களில் அடங்கும். இப்படியிருக்க இந்தப் பல்வேறு காரணங்களில், பெரும்பாலான பண்டிதர்கள் சொல்லும் குறிப்பை உங்களுக்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

“உங்களில் தலைமுறை தலைமுறையாக பிறக்கும் ஆண் பிள்ளைக்கெல்லாம் எட்டாம் நாளிலே விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும்” (ஆதி 17 : 12) என்று தேவன் ஆபிரகாமோடு அதிமுக்கிய உடன்படிக்கை செய்திருந்தார்.

இதன்படி மோசே, தனக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணியிருக்க வேண்டும். ஆனால், மோசேயின் ஆலோசனையை மாற்று சூழலில் பழகிவிட்ட அவரது மனைவியாகிய சிப்போராள் நிராகரித்து விட்டாள்.

விருத்தசேதனத்தை நிறைவேற்றாத மோசேயின் மேல் தேவனுடைய கோபம் எழும்ப வேண்டிய கட்டாயம் அங்கு வந்தது. ஆகிலும், இந்த தவறுக்கு மூல காரணம் யார் என்று தேவன் ஆராய்ந்தார். அதிலே சிப்போராள் சிக்கினாள்.

ஆம், பலர் ஒன்று சேர்ந்து ஒரு தவறைச் செய்தால் அதில் தலையாய காரணி யாரோ, அவர்களுக்குத் தண்டனை அல்லது பெரிய தண்டனை அளிப்பது தேவனுடைய ஒழுங்காய் இருக்கிறது.

ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் இந்த ஒழுங்கைத் தெளிவாய் காணமுடியும். ஆதாம், ஏவாள், சர்ப்பம் என்று மூன்று பேரையும் தேவன் நியாயந்தீர்த்த போது, முதல் சாபம் சர்ப்பத்தின் மேல் விழுந்தது.

பாஸ்டர்! ஒருநிமிஷம், அப்படியானால், அடுத்த சாபம் ஏவாளுக்கல்லவா வந்திருக்க வேண்டும். அவள் அல்லவா பழத்தைப் புசித்துவிட்டு, ஆதாமுக்குக் கொடுத்தாள் என்று நீங்கள் கேட்கலாம். நல்ல கேள்வி. அதற்கு பதில் உண்டு.

ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஏவாளே வஞ்சிக்கப்பட்டாள்

(1தீமோ. 2 : 14)ல் எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள். ஏவாள் சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டாள். ஆகிலும் ஏவாள் ஆதாமை வஞ்சிக்கவில்லை. ஆதாம் ஏமாறவும் இல்லை.

ஆதாம் தேவனுடைய பிரமாணத்தை அறிந்திருந்தும் துணிந்து புசித்தான். இதை யோபு 33 : 33 மீறுதல் என்று தெளிவாய்ச் சொல்லுகிறது. எனவே தான் சர்ப்பம், ஆதாம், ஏவாள் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இதைப் போலவே, மற்றும் ஒரு சம்பவத்தை எண். 12 : 1-ல் காண முடியும். "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்த படியினால் **மிரியாமும், ஆரோனும் அவனுக்கு விரோதமாய்ப் பேசினார்கள்.**"

ஆரோனின் பெயருக்கு முன்பாக மிரியாமின் பெயர் முதன் முறையாக வேதத்தில் இந்த சம்பவத்தில் தான் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்தக் கிரியைக்கு முதன்மைக் காரணி மிரியாம் தான். எனவே, தான் மிரியாமுக்கு தண்டனையும், ஆரோனுக்கு விதி விலக்கும் அளிக்கப்பட்டது.

இங்கே இந்த உதாரணங்களை உங்களுக்கு மேற்கோள் காட்டியதின் காரணம், பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்கிற காரியத்தில், முதன்மைக் காரணியாக சிப்போராள் விளங்கியபடியால் தான் பட்டயத்தோடு நிற்கும் தேவதூதனுடைய தரிசனத்தை நேரடியாகவே தேவன் தந்தார் என்பதை குறிப்பிடவே. இதன்மூலம் உணர்வடைந்து, இமைப் பொழுதில் தன் தவறை உணர்ந்து கருக்கான கல்லை எடுத்து மகனுக்கு விருத்தசேதனம் செய்தாள்.

ஊழியம் செய்கிறவன், தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிற மனிதனாக இருக்க வேண்டும். தன் சொந்த வாழ்வில் தேவனுக்கடுத்த காரியங்களில் உண்மையில்லாதவர்களை, தேவன் கோபங்கொண்டு நியாயந்தீர்க்கிறார் என்பதை மறந்து விடக்கூடாது.

மோசே போன்ற அற்புத ஊழியக்காரனாக இருந்தாலும் சரி, ஏலி போன்று ஆசாரியப் பட்டம் பெற்றவனாக இருந்தாலும் சரி, தேவன் பாரபட்சமற்ற நியாயத் தீர்ப்பைச் செய்யத் தவறுவதில்லை.

என் அன்பு வாசகர்களே! **தேவனுடைய நீடிய பொறுமையை தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.**



**தேவகோபம் வருமுன்னே தவறை சரிப்படுத்திக் கொள்வது நமக்கு அவசியம்.**

பிரசங்கி 8 : 10-ல் "பரிசுத்த ஸ்தலத்திற்குள் போக்குவரத்து மாயிருந்த துன்மார்க்கர் அடக்கம் பண்ணப்பட்டதை கண்டேன்" என எழுதப்பட்டுள்ளது. துன்மார்க்கத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டு பரிசுத்த சபைக்குள் போய் வருவது பெரிய ஆபத்தைக் கொண்டு வரும். அனனியா, சப்பீராளை மறந்து விடாதீர்கள்.

இந்தப் புஸ்தகத்தை வாசிக்கும்போதே, சிப்போராளைப் போல தேவ வார்த்தைக்கு வேகமாய்க் கீழ்ப்படியுங்கள். ஏலியைப் போல, ஏனோதானோ வென்று இருந்துவிடாதீர்கள்.

**மூன்றாவது சம்பவம்** :

(எண்ணாகமம் 21 : 12-ல்) மோசே கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக, கோலினால் அடித்தபடியினால் கானானுக்குள் பிரவேசிப்பதில்லையென்று தேவன் சொல்லிவிட்டார்.

இதை உபாகமம் 1 : 31-ல் மோசே, "கர்த்தர் என்மேல் கோபங்கொண்டு அப்படிச் சொன்னார்" என்று குறிப்பிடுகிறார். மோசேயை தேவன் தான் தெரிந்து கொண்டார். ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியத்தில் அற்புதங்கள் ஏராளம் நடந்தது. ஆகிலும், கானானுக்குள் பிரவேசிக்கிற பாக்கியத்தை மோசே இழந்தே போனார். அதற்கு தேவன் சுட்டிக்காட்டிய குற்றங்களைக் கவனித்துப் பாருங்கள்!

(1) "மக்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணவில்லை."

(2) "என்னை விசுவாசிக்கவில்லை" (எண் 20 : 12)

ஜனங்கள் படுத்திய பாட்டில் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், பதற்றப்பட்டு தெளிவாய்த் தெரிந்து வைத்திருந்த தேவ சித்தத்தை மாற்றிச் செய்து விட்டார்.

சிலவேளைகளில் தேவசித்தத்தை - தேவ சத்தத்தை நிறைவேற்றாமல், வசதிக்கேற்ப மாற்றிச் செய்தாலும், தேவனுடைய வல்லமை வெளிப்படத் தவறுவதில்லை என்பதற்கு மோசேயின் வாழ்வே சாட்சி.

எல்லாம் சரியாய் நடப்பதால், நாம் எல்லாவற்றிலும் சரியாய் இருக்கிறோம் என்று கணித்துவிடக்கூடாது. தேவனிடத்தில் எதையாகிலும் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்ப்பார்த்து ஏக்கத்தோடு வரும் மக்கள் ஏமாற்றம்

கொள்ளக்கூடாது என்பதற்காக நாம் சரியாய் இல்லாத பட்சத்திலும், நம்மைக் கொண்டே அற்புதங்களை தேவன் நடப்பிக்கிறார்.

மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக நாம் பயன்படுத்தப் படுகிற அதே வேளையில் நாம் தேவ சித்தத்தின் மத்தியில் நிற்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதை மோசே அறியத் தவறியதுதான் பெருங்குறை. அதனால் என்ன நடந்தது தெரியுமா? அவரால் நடத்தப்பட்டவர்கள் கானானுக்குள் போனார்கள். இவரோ அந்த சிலாக்கியத்தை இழந்து போனார்.

கர்த்தரின் வருகையின்போது, இப்படியும் ஒரு சம்பவம் நடக்கத்தான் போகிறது. நடத்தப்படுகிறவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். வழிகாட்டியவர்கள், விழி பிதுங்கி நிற்பார்கள். ஏனென்றால், எல்லோருக்கும் வழிகாட்டி விட்டு, தான் அசையாமல் நிற்கும் கைகாட்டியைப்போல, ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் பலரை வென்றுவிட்டு, தங்கள் சொந்த ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தெய்வப் பிள்ளைகளே! சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் ஊழிய வாஞ்சை - சாட்சி சொல்லும் வாஞ்சை - இவைகளுக்காக எனது உள்ளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். ஆனால், ஒரு கேள்வி! தேவன் சொன்னதை சொன்னபடி செய்கிறீர்களா?

உங்கள் ஜெபத்தால் அசுத்த ஆவிகள் ஓடலாம் - வியாதியஸ்தர்கள் சொஸ்தமாகலாம். அதற்காக நீங்கள் சந்தோஷப்படுங்கள். ஆனால், அவைகளெல்லாம் நீங்கள் தேவ சித்தத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் / தேறியுள்ளவர்கள் என்பதற்கு அத்தாட்சி பத்திரங்கள் அல்ல.

நீங்கள் தற்பரிசோதனை செய்து உங்களை சரிசெய்யாவிட்டால், சாதனைப் படைத்தும் பூமிக்குரிய கானானை மோசே இழந்ததைப் போல், அற்புத அடையாளங்கள் செய்கிற நீங்களும் பரம கானானை அடையமுடியாமல், அவல நிலையை அடைவீர்கள் என எச்சரிக்க விரும்புகிறேன்.

ஆக, மூன்று முறை தேவ கோபத்திற்கு மோசே ஆளானாலும் **என் தாசனாகிய மோசே** என்று அழைக்கப்படும் அந்தஸ்தை தக்க வைத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். தவறுவது இயற்கை தான். அதை உடனே



சரிப்படுத்திக் கொண்டு, தேவனைப் பிரியப்படுத்துகிறவனே ஆவிக்குரியவன் என்பதற்கு மோசே சாட்சியாயிருக்கிறார்.

நான் எங்கேயோ போய்விட்டேன் என நீங்கள் கருதக்கூடாது. இதுவரையிலும் நீங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கிற தேவ மனிதன் (1) தேவனுடைய தெளிவான அழைப்பையும், அங்கீகாரத்தையும் பெற்றிருக்க வேண்டும் என்றும், (2) தியாக சிந்தை பெற்று இருக்க வேண்டும் என்றும், (3) அந்த அழைப்புக்கேற்ற ஒப்புக் கொடுக்கப்பட்ட ஜீவிதம் இருக்க வேண்டும் என்றும் கண்டீர்கள்.

தேவ மனிதனுக்கு இருக்க வேண்டிய தியாக வாழ்வை இன்னும் கொஞ்சம் கூட விவரித்துக் காண்பிக்க விரும்புகிறேன். நம்மை இரட்சிக்கும்படி இயேசு பரலோகத்தின் மகிமைகள் அனைத்தையும் தியாகம் செய்தார். அப்படியே பவுலும் இலாபமானவைகளை நஷ்டம் என்று விட்டு, தியாக ஜீவியம் செய்தார்.

மோசே ஒருக்காலத்தில் அரண்மனைக்குரியவைகளை தியாகம் செய்தது மாத்திரமல்ல. அதன்பின் தனக்கு வாழ்வு தந்த மீதியானையும் விட்டு புறப்பட்டு போனார். மீதியான் தேசத்தை விடாமலேயே எகிப்திலுள்ள ஆத்துமாக்களை இரட்சிக்க நினைப்பது வடிகட்டின மதியீனம். பரலோகத்தில் அமர்ந்து கொண்டு இரட்சிப்பின் திட்டத்தை இயேசு நிறைவேற்றவில்லை. அவர் **இறங்கி வந்தார்;** மோசே **புறப்பட்டு வந்தார்;** என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

"நீங்கள் **புறப்பட்டுப் போய்**, சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்பது இயேசுவின் கட்டளை. சிறப்பாக, சபை நடத்தும் ஊழியர்களே! சபையைக் கட்ட நினைக்கும் ஊழியர்களே! நீங்கள் சரியான நிலைப்பாடு உள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

கர்த்தர் சொல்லிய பிறகும் மீதியான் தேசத்தை விடாவிட்டால், ஆட்களைக் கண்டெடுக்க முடியாது. முடிவு வரை ஆடுகளைத் தான் மேய்த்துக்கொண்டிருக்க வேண்டும். அட! ஆட்டையும் மேய்ப்பேன்; ஆட்களையும் பார்ப்பேன் என்று நீங்கள் சொல்லுவீர்களானால், அடக்கத்துடன் ஒரு வார்த்தை - ஆத்துமாக்களை கர்த்தருக்காக நீங்கள் **ஆதாயப்படுத்தலாம்;** ஆனால், கர்த்தருக்காய் **ஆயத்தப்படுத்த முடியாது.**

**நான்காவதாக,** இருதயத்தின் ஆழத்தில் ஆத்துமாக் களைக் குறித்த பாரம் இருக்க வேண்டும். மோசேயின் ஒரு குறிப்பிட்ட செயலே, கர்த்தரை இறங்க வைத்து, அழைக்க வைத்தது என்று ஒரு பாரம்பரிய வழக்கு யூதர்கள் மத்தியில் நிலவுகிறது.

அந்த சம்பவம் இதுதான். வனாந்தரத்தில் மோசே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது ஒரு ஆடு காணாமற் போய்விட்டது. அதைதேடி மோசே சென்றார். அந்த ஆடோ ஒரு ஆபத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. அஃதினை இவர் கண்சாடையாய் விட்டுவிடாமல், கண்மணியைப் போல கருதி அதனை மீட்டு வந்தாராம். அந்தக் காட்சியைக் கண்ட கர்த்தர், தமது ஜனத்தை நடத்துவதற்கு மோசேக்கு போதுமான மனதுருக்கம் ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொண்டு, எகிப்திற்குப் போகச் சொன்னாராம்.

இயேசு கிறிஸ்து, பட்டணங்களைப் பார்த்து, ஜனங்களைப் பார்த்து மனதுருகினார் – கண்ணீர் விட்டார். அதனால் தான் உலகத்தை இரட்சிக்கும் திட்டம் அவரில் நிறைவேறினது. தனது சொந்த ஜனங்களின் பாடுகளைக் குறித்து, மனதுருக்கம் உடையவராய் இருந்தபடியால்தான் புருஷர்கள் மாத்திரமே ஆறுலட்சம் கொண்ட ஒரு பெரிய சபையை கர்த்தர் அவரிடத்தில் தந்தார்.

இன்றைக்கு அநேக நற்செய்திக் கூட்டங்கள் நாள்தோறும் நடக்கின்றன. அநேகர் வெளியூர் ஊழியங்களின் பேரில் அடிக்கடி போய் வருகின்றார்கள். அவைகளினால் ஏற்பட்ட பலன் எவ்வளவு என்று பார்த்தால், ஒன்றுமில்லை என்பதே பெரும்பான்மையான பதிலாய் காணப்படுகிறது.

**எவ்வளவு விதைத்தோம்; எவ்வளவு விளைந்தது என்பது முக்கியமல்ல. எவ்வளவு அறுத்தோம்; எவ்வளவு களஞ்சியத்தில் சேர்த்தோம் என்பதே மிகவும் முக்கியம்.**

இன்றைய நற்செய்திக் கூட்டங்கள் திருவிழாக்கள் போலவும் வெளியூர் ஊழியங்கள் இன்பச் சுற்றுலா போலவும் மாறிக் கொண்டிருப்பது அதிக வேதனை தருகிறது.

வழியோரங்களில் சில விதைகள் விழலாம். தவிர்க்க முடியாது தான். ஆனால், வழியிலே விதைக்கிறவர்களைத்தான் தாங்கிக் கொள்ள முடிகிறதில்லை. இதற்கு என்ன காரணம்



தெரியுமா? ஆவல் இருக்கிறது. அதற்கேற்ற ஆத்தும பாரம் இல்லை என்பது தான் உண்மை. ஆத்தும பாரம் தாரும் என்று சிலர் ஜெபித்தே காலம் கடத்துகிறார்கள். அது என்ன கடைச் சரக்கா?

**ஆத்தும பாரம் என்பது இருதயத்தின் ஆழத்தில் சுரக்கும் இரத்த கசிவுக்குச் சமம். அது சும்மா வந்து விடாது. இருதயம் காயப்பட வேண்டும்.**

கிறிஸ்துவற்ற ஆத்துமாக்களுக்கென்று, வைக்கப் பட்டிருக்கும் எதிர்கால நியாயத் தீர்ப்பைக் குறித்த **நரகத்தைப் பற்றின அறிவு,** முழு உலகத்தின் **பாவத்தையும்** இயேசு தன் மேல் ஏற்றுக் கொண்ட கடந்த கால **இரட்சிப்பின் திட்டத்தின் தெளிவு,** கொஞ்சம் கொஞ்சமாய் இற்றுப் போய் இறப்பின் படுக்கையில் நகர்ந்து கொண்டிருக்கும் மாந்தர்களின் **நிலையைக் குறித்த கனிவு** எந்த மனிதனிடம் காணப்படுகிறதோ, அவனே ஆத்தும பாரமுள்ள மனிதன்.

இந்த மூன்றில் எந்த ஒன்று குறைந்தாலும், அந்த மனிதனின் ஆத்துமபாரம் ஊனமுற்றது என்பதனை எவரும் மறுக்க முடியாது. இந்த நிலை இன்றைய திருச்சபைகளில் தேங்கிவிட்டபடியால் தான் ஆத்தும ஆதாயத்திற்கென நடத்தப்படுகிற கூட்டங்கள் போட்டோ ஆல்பங்களாக உருமாறிப் போகிறது.

மோசே, கடந்த காலத்தில் தேவன் சொன்ன வாக்குத்தத்தங்களை, திட்டங்களை தெளிவாய் அறிந்திருந்தார். தமது ஜனத்திற்கு தேவன் அருளப் போகும் ஆசீர்வாதங்களைக் குறித்து அறிந்திருந்தார். இவை இரண்டிற்கும் மேலாக, தனது ஜனத்தின் நிகழ்கால வேதனையை சரியாய் அறிந்திருந்தார். அதனால் தான் மாபெரும் தேவ இரட்சிப்பை அவரால் நிறைவேற்ற முடிந்தது.

**ஐந்தாவதாக,** ஆத்தும ஆதாயப் பணியில் இரட்சகனாக விளங்க வேண்டுமானால், வேளை அறிந்து வேலை செய்ய வேண்டும்.

ஆரம்பத்தில் தட்டிக் கழிக்கப் பார்த்தாலும், தேவ உத்தரவைப் பெற்றுக்கொண்டவுடன், நாட்களை வீணாய்க் கடத்தாமல், எகிப்துக்கு மோசே புறப்பட்டுச் சென்றது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம். தனியாய் மீதியான் வந்த தன்னை ஏற்றுக்

கொண்டு, குடும்பமாய் நிலைப்படுத்தின தன் மாமனிடம் போகிறார். வழவழா குழ குழா என்றெல்லாம் இழுத்துக் குழப்பவில்லை. நான் எகிப்துக்குப் போக உத்தரவு வேண்டும் (யாத். 4 : 18) என்று கேட்கிறார்.

இங்கே மற்றுமொரு காரியத்தைக் கவனிக்க வேண்டும். கர்த்தர் தரிசனம் தந்து அழைத்தபோது, உடனே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றாலும், **உகந்த முறையில் புறப்பட்டுச் சென்றார்** – என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாமனிடம் கேட்க வேண்டுமா? இதுவென்ன மனுஷ ஆலோசனை? என்று கேட்பதெல்லாம் வடிகட்டின பரிசேயத்தனம் என்றே சொல்லுவேன். மோசே எகிப்துக்குப் போகலாமா? வேண்டாமா? என்று ஆலோசனைக் கேட்கவில்லை. நான் எகிப்துக்குப் போக உத்தரவு கொடும் என்றே கேட்கிறார்.

தனது மகளை கொடுத்து, இந்த நாற்பது ஆண்டுகள் பக்கபலமாய் இருந்தார் என்கிற மரியாதையினிமித்தமும், நன்றிக் கடனின் நிமித்தமும் உத்தரவு கொடுங்கள் என்று மாமனாகிய எத்திரோவிடம் மோசே கேட்டார்.

பிரியமானவர்களே! மோசேயின் இந்த செயலால் குடும்பத்தில் சமாதானமும், ஒத்துழைப்பும், கிட்டியதோடல்லாமல், வனாந்திரப் பயணத்தின் இடையிலும் எத்திரோ – வந்து தங்கி மோசேக்கு ஆலோசனைச் சொல்லிச் சென்றார். இதனால், குடும்பம் குதுாகலமாக இருந்தது.

அதே சமயத்தில், இதற்கொப்பான மற்றுமொரு சம்பவத்தை வேதத்திலிருந்து கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். தனிமனிதனாகச் சென்ற யாக்கோபை, லாபான் ஏற்றுக் கொண்டு தனது இரண்டு மகள்களையும் கொடுத்தான். அங்கே யாக்கோபு பெருகினான்.

இப்படியிருந்தும், லாபான் வீட்டை விட்டுப் புறப்பட்ட யாக்கோபு சொல்லிவிட்டு வராமல், திருட்டளவாய் ஓடி வந்தான். இதனால் நடந்தது என்ன தெரியுமா? மாமனாகிய லாபான் பின் தொடர்ந்து வந்து வாக்குவாதம் பண்ணினான்.

கர்த்தர் உங்களை ஊழியத்திற்கு அழைத்தாலோ, அல்லது வேறு வித்தியாசமான காரியங்களைச் செய்ய சொன்னாலோ, அக்காரியங்களில் மோசே பின்பற்றின வழிமுறைகளைப் பின்பற்றினால் உங்கள் மாமனார் உட்பட, இரத்த சம்பந்தமான யாவரையும் இரட்சித்துக் கொள்ள முடியும்.



அவர்கள் ஒருவேளைக் குணப்பட தாமதமானாலும், ஊழியத்திற்கு அநுசரணையாக இருப்பார்கள் – மோசே எகிப்துக்குப் போக உத்தரவு கேட்டார். அதற்கு மாமனாகிய எத்திரோவின் பதில் என்ன தெரியுமா? **சுகமாய்ப் போய் வாரும்** என்றான் (யாத். 4 : 18).

**கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்துவிட்டால் அது தடையாகாது. எந்த மனிதனும் தடை செய்ய முடியாது.** எனவே, நாம் செய்ய வேண்டிய காரியத்தை சரியான வகையில் செய்ய வேண்டும். உரிய நபரிடம் சொல்லாமல், உத்தரவு பெறாமல் செய்தால் ஒரு விதத்தில் திருட்டுத்தனம் தான். உங்கள் ஊழியம் சோபிக்காது. கர்த்தர் உங்களை அழைத்தால், வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டு, முறைப்படி வெளியே வாருங்கள். இரண்டாண்டு, மூன்றாண்டு மருத்துவ விடுப்பு எடுத்துக்கொண்டு ஊழியத்திற்கு ஓடிவந்து விடாதீர்கள். கர்த்தரின் வேலையை கர்த்தர் சொன்ன வேளையிலேயே செய்ய திட்டமிட்டு மோசே புறப்பட்டார். எல்லாமே வெற்றியாய் முடிந்தது அண்ணன் எதிரே வந்தார். அலட்சியம் பண்ணின சகோதரர்களே அங்கீகரித்தார்கள். அரசனும் இவரைக் கண்டு திகைத்தார்.

அநேகர் ஊழியத்திற்கு வந்தபின் அதிகமாக உழைக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் பொருளாதாரம் உள்பட எந்த ஆசீர்வாதத்தையும் காண முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதனை ஆய்வு செய்திடல் வேண்டும். அவர்களுக்கு அழைப்பே இல்லை. உணர்ச்சி வசப்பட்டு வந்து விட்டனர் என்றும், அவர்களிடம் பரிசுத்தம் இல்லை என்றும் சிலர் வேகமாய்ப் பதில் சொல்லி விடுகிறார்கள். இக்கூற்று மிகவும் பொருத்தமாய் தோன்றினாலும், உண்மை அதுவல்ல.

உறுதியான அழைப்பும், உண்மையான ஜீவியமும் உள்ள பலர் இக்கட்டில் ஊழியம் செய்வதைப் பார்க்கும்பொழுது உள்ள வேதனையில் உண்மைக் காரணத்தைத்தேடி அலைந்தேன். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறார்கள். ஆனால், **அவர் சொன்ன வேளையைத் தவறவிட்டு விட்டார்கள்** என்பதே உண்மைக் காரணம் என்பதைக் கண்டு கொண்டேன்.

ரூத்தும், நகோமியும் மோவாப் தேசத்தை விட்டு விட்டு பெத்லகேம் புறப்பட்டு வந்தார்கள். “**அவர்கள் வாற்கோதுமையின் அறுப்பின் துவக்கத்தில், பெத்லகேமுக்கு வந்தார்கள்**” (ரூத் 1 : 22) என்று வெகு அழகாய்

அர்த்த புஷ்டியுடன் எழுதப்பட்டிருப்பதை எண்ணிப் பாருங்கள். கோதுமை அறுவடை முடிவில் பெத்லகேமுக்கு வந்திருந்தால், ரூத்துக்கு வாற்கோதுமை ஏது? வாழ்க்கை ஏது? வெறும் வயற்காட்டைத் தான் வேடிக்கைப் பார்க்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் நடத்தும்படி தேவன் உங்களைத் தெரிந்திருக்கிறாரா? அதை அதற்குரிய நேரத்திலேயே செய்யத் துவங்குங்கள். சில வேளைகளில் தேவனுடைய ஆலோசனைகள் நமக்கு அற்பமாகத் தெரியலாம். ஆனால், கீழ்ப்படியும்போது அளப்பரிய ஆசீர்வாதங்களை அடைய முடிகிறது.

குளத்தில் தூண்டில், கடலில் வலை, இப்படித்தான் மீன்பிடிக்க வழக்கமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், வரிக்கட்ட பணம் தேவைப்படும் போது, "**நீ கடலுக்குப் போய் தூண்டில் போடு**" ஒரு மீன் கிடைக்குமென்று இயேசு சொன்னார். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தூண்டிலை சீஷன் போட்டான். வாயிலே வெள்ளிப்பணம். ரிப்போர்ட் அனுப்பினால் தான் சப்போர்ட் என நீங்கள் வாட வேண்டியதில்லை. தேவன் சொன்ன நேரத்தில் உடனே போங்கள். மீனும் கிடைக்கும், வெள்ளிப்பணமும் கிடைக்கும்.

கர்த்தர் சொன்ன அதே வேளையில் பிலிப்பு வனாந்திர மார்க்கமாக போனான். ஆவியானவர் ஓடு என்றார். பிலிப்பு ஓடினான். இப்போதெல்லாம் போ என்றால் வனாந்திரத்திற்கு யார் போவது?

அங்கே எவன் கிடக்கிறான் அதற்கு எவன் நடக்கிறான் என்ற முறுமுறுப்பே எப்பக்கத்திலும் கேட்கிறது.

இப்போதெல்லாம் சுவிசேஷ பிரசங்கம் என்பது சபையில் உள்ள கிறிஸ்தவர்களுக்கே என்ற புதிய கொள்கை உருவாக்கப்பட்டு விட்டது. அச்சடிக்கும் நோட்டீஸ்கள் கூட திருச்சபை வாசலில் சபை மக்களுக்கே விநியோகிக்கப் படுகிறது.

ஆனால் பிலிப்பு உடனே வனாந்திரத்தில் ஓடினார். நடந்தது என்ன? கந்தாகே என்பவளின் மந்திரி குணப்பட்டான். அருமையான தேவப் பிள்ளையே! நீங்கள் கர்த்தர் சொன்ன வேலையை கர்த்தர் சொன்ன வேளையில் செய்ய முற்பட்டால், புறப்படும் போது நடந்து போகிற நீங்கள் பயணம் முடியும் முன்பே ரதத்தில் போவீர்கள். மண்ணில் நடந்த நீங்கள் பிலிப்புவைப் போல் விண்ணில் பறப்பீர்கள். அமைச்சர்களை ஆதாயம் செய்வீர்கள்.



இப்படி ஏராளமான மேற்கோள்களை அடுக்கிக் கொண்டே போக முடியும். மோசே எந்த அரண்மனையை விட்டு, எகிப்தை விட்டு ஓடிவந்தாரோ அதே எகிப்திற்கு தேவனுடைய வேலையை நிறைவேற்ற கோலை எடுத்துக்கொண்டு சென்றார். இஸ்ரவேலரை மட்டுமல்ல, இதர இனத்தவரையும் எகிப்தை விட்டு வெளியே கொண்டு வரும்படி தேவன் தமது கிரியையை நடப்பித்தார்.

**ஆறாவதாக,** ஆத்தும ஆதாயம் செய்கிற தேவனுடைய மனிதன் ஆவியின் வரத்தை – வல்லமையை உடையவனாயிருக்க வேண்டும். இயேசு தமது சீஷர்களைத் தெரிந்து கொண்டவுடன், அவர்களுக்குப் பிணியாளிகளைக் குணமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் அதிகாரம் கொடுத்தார்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அப்போஸ்தலர்கள் காத்திருந்து, பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு, ஆத்தும ஆதாயப் பணியில் இறங்கினார். அதனால், அங்கே ஆயிரக்கணக்கில் ஆத்துமாக்கள் மனந்திரும்பினார்கள்.

பவுலின் ஊழியத்திலும், பேதுருவின் ஊழியத்திலும் இந்த அற்புதம் செய்யும் வல்லமை மிகவும் அதிகமாய் செயல்பட்டது. பேதுரு தொற்காள் என்பவளை உயிரோடு எழுப்பினார். பவுல் ஐத்திகு என்பவனை உயிரோடு எழுப்பினார்.

இவர்கள் வல்லமை விளங்கும் பெட்டகங்களாக விளங்கினார்கள். பேதுரு சிறையிலடைக்கப்பட்டபோது சத்தமில்லாமல் கதவு திறந்தது.

பவுல் சிறையிலடைக்கப்பட்டபோது ஆட்டம் போட்டுக் கொண்டு கதவுகள் திறந்தன. உண்மையிலேயே உலகத்தை அவர்கள் கலக்கினார்கள் – (நம்மவர்கள் சபையைக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் – அது வேறு விஷயம்.)

இப்பொழுது மோசேக்கு நேராய் நமது கவனத்தைத் திருப்புவோம். வெறுமனே வந்திருந்தால், தன்னைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாத கஷ்டத்தில் சிக்கியிருப்பார். அரண்மனைக்கு மோசே செல்லுகிறார். கொல்ல வகை தேடின அரசன் மாறினது உண்மைதான். ஆனால், அரண்மனைக்குள்ளே அவனை ஏற்கனவே அறிந்தவர்கள்

தான் இருந்தார்கள். ஆட்சி மாறிவிட்டது. ஆனால், அதிகாரிகள் மாறவில்லை என்கின்ற விமரிசனம் இப்பொழுது தமிழ்நாட்டில் எல்லா இதழ்களிலும் வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைதான் அன்று எகிப்தில் நிலவியது.

சகோதரர்கள் மத்தியில் அடையாளங்களை நிகழ்த்தியது மாத்திரமல்ல. அரண்மனைக்குள்ளேயும் மோசே அற்புதங்களை நிகழ்த்தினார். கர்த்தரின் வார்த்தையின்படி மோசேயும், ஆரோனும் பார்வோனுக்கு முன்பாக தங்கள் கோலைப் போட்டார்கள். அது சர்ப்பமாக மாறியது. அவ்வளவுதான். எகிப்தின் அரசவை மந்திரவாதிகளும் தம்தம் கோலைப் போட, அவைகளும் சர்ப்பங்களாக மாறின.

இங்கே மூன்று முக்கியமான காரியங்களைச் சுட்டிக்காட்டி விட்டு, அதன்பின் மோசேயைக் குறித்து தொடர விரும்புகிறேன்.

**முதலாவதாக,** பிரச்சனை வந்தபோது பார்வோன், எவர்களையெல்லாம் அழைத்தான் என்பதைக் கவனித்துப் பாருங்கள்!

(1) சாஸ்திரிகளையும்

(2) சூனியக் காரர்களையும் (SORCERERS)

(3) மந்திரவாதிகளையும் (MAGICIANS)

இந்த மூன்று கூட்டத்தில் தேவ நம்பிக்கையுள்ளவன் ஒருவனும் கிடையாது. இதே நிலை தமிழ்நாடு மற்றும் இந்திய அரசியலில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாட்டின் தலைவர்கள் நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அறிவியல் ரீதியாக அணுகுவதில்லை. மாறாக, ஜோசியம், யாகம், வேள்வி என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் உள்ளார்ந்த அர்த்தம் என்ன தெரியுமா? எகிப்தின் ஆவி தேசத்தை ஆண்டு கொண்டிருக்கிறது என்பதே உண்மை. இப்படிப்பட்ட ஆவிகளை விரட்டி வீழ்த்த, கிருபை பெற்ற மோசேக்களை கர்த்தர் தேசத்தில் எழுப்புவாராக.

**இரண்டாவதாக,** மோசேயின் கோல் சர்ப்பமாக மாறியது போலவே, மந்திரவாதிகளின் கோல்களும், சர்ப்பங்களாக மாறின. இது ஒரு பெரிய விந்தை அல்லவா?

தேவன் செய்யும் அற்புதத்தைப் போலவே, சாத்தானும், அவனது ஏஜெண்ட்டுகளும் செய்கிறார்கள் என்றறிந்து விசுவாசிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



ஒளியின் தூதனுடைய வேஷத்தை பிசாசு தரித்துக்கொண்டு, அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சித்து விடுவான். கவனமாயிருத்தல் அவசியம்.

எகிப்திய மந்திரவாதிகள் மோசே செய்தது போலவே, செய்து தங்கள் வயிற்றை வளர்த்துக்கொண்டது போலவே ஆவிக்குரிய உலகத்திலும் சில கோடங்கிகள் இக்கடைசி காலத்தில் எழும்பியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பில்லி சூன்யம், ஏவல், எந்திரம், தாயத்து என்று ஒரு பெரிய அகராதி – பட்டியலே வைத்திருப்பார்கள். இந்த ஓநாய்கள் ஆடுகளின் தோலைப் போர்த்துக் கொண்டு, அல்லேலூயா கோஷம் போட்டுக் கொண்டு, விசுவாச வீடுகளில் நுழைந்து, விசுவாசிகளின் விசுவாசத்தைக் கரையப் பண்ணுவதுடன் அவர்கள் பணப்பையையும் கரையப்பண்ணி, தங்களுக்குண்டானவைகளைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

விசுவாச மக்களே! நீங்கள் தேவன் பேரில் விசுவாசமாயிருக்கும் பட்சத்தில், உங்களுக்கு விரோதமாக எதுவும் எழும்ப முடியாது.

**மூன்றாவதாக,** அதி முக்கியமான காரியம் ஒன்றைக் கவனிக்கப் போகிறோம். அது மிகமிக வேடிக்கையான காரியம். நினைத்துப் பார்த்தால், வெற்றிக் கொண்டாட்டம் போடவைக்கும். மோசேயின் கோல் கீழே சர்ப்பமாக நெளிகிறது. அதற்கருகில் மந்திரவாதிகளின் கோல்களும், சர்ப்பங்களாக நெளிகின்றன. எங்கும் சர்ப்பமயம்.

இப்போதுதான், ஆச்சரியம் தொடங்குகிறது. மோசேயின் சர்ப்பம் நகர்கிறது. முதலாவது ஒரு சர்ப்பத்தை விழுங்குகிறது. மந்திரவாதிகளுக்கு வேர்க்க ஆரம்பிக்கிறது. மோசேயின் சர்ப்பம் எல்லா சர்ப்பங்களையும் விழுங்கி (ஏப்பம்) விட்டது. இப்போது மோசே சர்ப்பத்தின் வாலைப் பிடிக்க, அது பழையபடியே கோலாக மாறிவிட்டது.

இப்போது மோசேயின் கையில் கோல் இருக்கிறது. ஆனால், மந்திரவாதிகளின் கோல்கள் எங்கே போயிற்று. அவைகள், மோசேயின் கோலுக்குள் அடங்கிவிட்டது. ஆஹா! என்னே அற்புதம்! மோசேயின் வல்லமைக்கு முன்னால் எகிப்தின் மந்திரவாதிகள் கோலற்ற குருடர்களாகி கூனி, குறுகிப்

போனார்கள்.

எகிப்தின் சகல மந்திர, வல்லமைகளைப் பார்க்கிலும், கர்த்தரின் தாசனாகிய மோசேயின் வல்லமை பெரியதாய் இருந்தது.

"என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசி எழும்புவார்" என்று இயேசு கிறிஸ்துவைக் குறித்து மோசே சொன்னதை இங்கே இணைத்துப் பார்ப்போம். இயேசு சிலுவையில் சாத்தானின் சகல அதிகாரங்களையும் உரிந்து கொண்டார் என்பது எத்தனை மகிமை என்று அறிய முடிகிறது அல்லவா?

இயேசுவுக்கு மட்டுமா அந்த அதிகாரம்? வசனத்தைக் கவனியுங்கள். "வானத்தின் கீழெங்கும் சகல அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது; நீங்கள் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." அதன் அர்த்தம் என்ன தெரியுமா? எனது அதிகாரத்தை உங்களுக்குத் தந்துள்ளேன் என்பதே.

ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்த விரும்புகிறவர்களே! ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கு அருளப்பட்டதைப் போல் அல்ல. நீங்கள் அழைக்கப்பட்ட இடத்திற்கும், விதத்திற்கும் ஏற்றது போல் தேவ சமூகத்தில் காத்திருந்து சரியான வரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது (1 கொரி 12 : 7). தேவ சமூகத்தில் காத்திருந்து, வல்லமை பெற்று, வெற்றி நடை போட தேவன் உதவிச் செய்வாராக.

ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள்ளாக நடத்த விரும்புகிறவர்கள்.

(1) அழைப்பில் உறுதி
(2) தியாக சிந்தை
(3) ஒப்புக் கொடுக்கப்பட்ட ஜீவியம்
(4) ஆத்தும பாரம்
(5) வேளை அறிந்து வேலையை செய்தல்
(6) ஆவியின் வல்லமை

ஆகியவற்றில் சரியான நிலைமை அடைந்தவர்களாக மோசே போல் இருத்தல் வேண்டும்.

# 5. தலைவனாகிய மோசே

கடந்த அத்தியாயங்களில் பாலகன், வாலிபன், இரட்சகன் என்ற தலைப்புகளில் மோசேயின் வாழ்வை சிந்தித்தோம். ஆவிக்குரிய தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும் – நடக்க வேண்டும் என்பதற்கு மோசே மிகப் பெரிய சாட்சியாகத் திகழ்கிறார்.

ஒரு போதகரை "நீங்கள் பரலோகத்திற்கு சென்றால் முக்கியமாக யாரைப் பார்க்க விரும்புகிறீர்கள்" என்று ஒருவர் கேட்டார். "நான் பரலோகம் போனால் மோசேயைப் பார்த்து கைகுலுக்கி வாழ்த்த விரும்புகிறேன்" என்றார்.

கேட்டவருக்கு பெரிய ஆச்சரியம் எதற்காக மோசேயைப் பார்க்க இப்படி துடிக்கின்றீர்கள் என்று ஒரு துணைக் கேள்வி கேட்டார், "எனது கையில் தேவன் கொடுத்துள்ள சிறிய சபையை மேய்க்கவே இத்தனை பாடுபடுகிறேன்; புருஷர் மாத்திரம் ஆறு லட்சம் கொண்ட அவ்வளவு பெரிய சபையை மோசே எப்படி கட்டி மேய்த்தார் என்று எண்ணும்பொழுது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதற்காகவே அவரைப் பார்க்க துடிக்கிறேன்" என்றார்.

உண்மை! புருஷர்கள் மாத்திரம் ஆறு லட்சம் எனில் ஒரு திட்டமிட்ட குடும்பத்தை மனதில் வைத்துக்கொண்டு கணித ரீதியாக தொகையிட்டால், குறைந்த பட்சம் 24 லட்சம் பேர் அடங்கிய மகா சபையின் தலைவனாக மோசே திகழ்ந்து இருக்கிறார். எனவே, ஆவிக்குரிய உலகத்தில் உள்ள தலைவர்களுக்கு மோசேயின் வாழ்க்கை வரலாறு சரியான முன்மாதிரியாகவும், இலக்கணப் புத்தகமாகவும் இருக்கிறது.

எப்படி தலைமை தாங்குவது? எப்படி பிரச்சனைகளை எதிர் கொள்வது? என்பதற்கு மோசேயின் தலைமை நமக்கு நல்ல குறிப்புகளைத் தந்து நம்மை பயிற்றுவிக்கிறது.

நம்மை தலைவனாக தேவன் நியமிப்பது வேறு, நம்மை நாமே தலைவனாக ஏற்படுத்திக் கொள்வது வேறு, இதில் பிந்தினது ஒற்றைக்கால் ஆட்டம் போட்டு, நினையாத நேரத்தில் நம்மை தடம் புரளச் செய்துவிடும்.

அப்சலோம் தன்னையே தலைவனாக்கிக் கொள்ள

தன்னால் ஆன மட்டும் முயன்றான். முடியவில்லை. முடிவில் முடிசிக்கிக் கொள்கிறது.

கர்வாலி மரத்தில் தொங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தேவனால் தலைவனாக ஏற்படுத்தப்படுகிறவனை எந்த சக்தியும் – எந்த சதியும் வீழ்த்த முடியாது என்பதற்கு மோசேயின் வாழ்க்கை நல்ல படிப்பினையாக இருக்கிறது.

**1. தேவனின் வார்த்தையைப் பெற்றவனே தலைவன் :**

ஒரு தலைவன் வெற்றியுள்ள தலைமைத்துவத்தை உடையவனாக இருக்க வேண்டுமாயின் அவன் தனிப்பட்ட முறையில் தேவனுடைய வார்த்தையைப் பெற்றவனாக, பெறுகிறவனாக இருக்க வேண்டும். தலைவனாகிய மோசேயை கர்த்தர் தீர்க்கத்தரிசியாக அபிஷேகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எப்பொழுது பேசினாலும் கர்த்தர் மோசேயுடன் தான் பேசினார். மோசே அந்த வார்த்தைகளை ஆரோன் மூலமாக இஸ்ரவேலருக்குத் தெரியப்படுத்தினார்.

தேவனுக்கும் தலைவனுக்கும் இடையேயுள்ள இப்படிப்பட்ட உறவு – உணர்வு எப்பொழுது அறுபடுகிறதோ அப்போதே அந்த தலைவன் தனது ஊழியத்தில் இறங்கு முகத்தை சந்திக்கத் தொடங்கிவிடுகிறான்.

எந்த ஒரு சிறிய காரியத்திலும் மோசேக்கு கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். தண்ணீர், உணவு பிரச்சனையா, கோராகு மிரியாம் பிரச்சனையா அப்பொழுதெல்லாம் கர்த்தரின் வார்த்தை மோசேயை நோக்கி இறங்கி வந்தது.

சபை நடத்தும் ஊழியர்களே உங்கள் மாம்ச செவிகள் உலகத்தின் சத்தங்களைக் கேட்கிற வேளையில் உங்கள் உள்ளான மனிதன் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதை தவறவிடுகிற பட்சத்தில் நீங்கள் சிதறிப் போவீர்கள். தேவனிடமிருந்து வார்த்தைக் கிடைக்காவிட்டால், நம்மை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். அவரின் மனதுருக்கத்தைப் பெற மனதைத் திறந்து ஜெபிக்க வேண்டும். அப்படி செய்யாத பட்சத்தில் நமது தலைமைப் பொறுப்பே கைமாறிவிடும் என்பதை மறந்து விடக்கூடாது.

ஆசாரியனாகிய ஏலி இந்த தவறைச் செய்தபடியால்,



தனது வார்த்தையை நேரடியாக ஏலிக்குக் கர்த்தர் தெரிவிக்காமல் இளைஞனாகிய சாமுவேலுக்கு தெரியப்படுத்தினார். இந்த காலக்கட்டத்திலேயும் தேவனுடைய வார்த்தை பெற ஏலி தவறினபடியால், சாமுவேல் தலைவனாக மாற்றப்பட்டார்.

சில நேரங்களில் சில மனிதர்கள் சிக்கல்களை தாங்களாகவே உருவாக்கிக் கொள்கிறார்கள். தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக் கொள்ளும்படி மனந்திரும்புவதைப் பார்க்கிலும் மாற்று வழியைக் கடைபிடிப்பதற்கும் – கண்டு பிடிப்பதற்கும் ஆவல் கொண்டு அலைகின்றனர்.

வேதம் சொல்வதை கவனமாய் வாசித்துப் பாருங்கள். இராஜாவாகிய சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது, கர்த்தர் அவனுக்கு சொப்பனங்களிலாவது, ஊரீமினாலாவது தீர்க்கதரிசிகளினாலாவது, மறு உத்தரவு அருளவில்லை – (1 சாமுவேல் 8 : 6)

சவுல் என்ன செய்திருக்க வேண்டும்?

என் தேவனே எனக்கு இரங்கும் என ஜெபித்திருக்க வேண்டும். மாறாக, மாற்று வழியைக் கண்டுபிடித்தான். தனது ஆட்களை அனுப்பி அஞ்சனம் பார்க்கிறவர்களை கண்டுபிடித்தான். முடிவு? பரிதாபமான மரணம், தலைவன் தேவ சமூகத்தில் காத்திருந்து வார்த்தைகளைப் பெற வேண்டும். மோசே அப்படி தேவ சமூகத்தில் வார்த்தைகளைப் பெற்றபடியால் அவர் முகம் பிரகாசிக்க ஆரம்பித்தது. அதனால் மக்கள் அஞ்சினர் அடங்கினர்.

தலைவனுடைய மாம்ச பெலன் கர்த்தரின் ஊழியத்தில் கை கொடுக்காது. சவுல் இராஜாவாகிறபோது சமஸ்த இஸ்ரவேலரிலும் உயரமாக இருந்தான். மக்கள் அவன் தோளுக்குக்கீழாக இருந்தார்களென்று வேதம் சொல்லுகிறது. சரீரத்தில் உயரமாக இருப்பதினால் எவரும் தலைமைத்துவத்தில் நீடிக்கவோ – நிற்கவோ முடியாது, தேவன் தூக்கி எறிவதற்கு முன்பு, மக்களே தூக்கி எறிந்து விடுவார்கள்.

தேவ வார்த்தைப் பெற்றதின் அடையாளமாக நமது முகத்தில் தேவப் பிரசன்னம் வெளிப்பட வேண்டும் என்றால் "**கர்த்தர் சொல்கிறார்**" என்று சொல்ல மெய்யான அனுபவங்கள் நமக்கு வேண்டும். அப்படிப்பட்டவர்களின் தலைமைத்துவத்தையே தேவஜனம் இன்று எதிர்பார்க்கிறது.

தேவன் சொன்ன மற்றும் ஒரு வார்த்தையை நினைவுபடுத்த விரும்புகிறேன். "தீர்க்கத்தரிசி சொன்ன வார்த்தை நிறைவேறினால், அது கர்த்தர் சொன்ன வார்த்தை அது நிறைவேறாமல் போனால், அது தேவனுடைய வார்த்தை அல்ல."

பிரியமானவர்களே! யார் தலைவன் என்பதை நீங்கள் மிக எளிதாக நிதானித்து விடலாம். தேவ வார்த்தை எந்த மனிதன் மூலம் வெளிப்படுகிறதோ, அவனே அவர் ஏற்படுத்தின தலைவன். இந்த தலைவனின் உண்மை எவ்வளவு என்பதை அவர் சொன்ன வார்த்தை எப்படி நிறைவேறுகிறது என்பதை வைத்துக் கண்டுபிடித்து விடலாம்.

பரிசுத்த ஆவியின் வரங்கள் இன்றும் சபையில் கிரியை செய்கிறது. அதற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அதே வேளையில் கூட்டம் கூட்டும்படியாகவும் நோட்டுகளை சேகரிக்கும் படியாகவும், தீர்க்கத்தரிசனம், வெளிப்பாடு என்ற பெயரில் சிலர் அக உணர்வுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றனர்.

தேவனுடைய மனிதன் ஒருவர் இருந்தார். அவரிடம் ஒரு தம்பதியினர் ஜெபித்துக் கொள்ள வந்தனர். இவர் ஜெபித்து விட்டு உங்களுக்குக் கர்த்தர் ஒரு குழந்தையை தரப்போகிறார் என்று அருள் வாக்குக் கொடுத்தார். அவர் சொன்னபடி அந்த சகோதரி கர்ப்பம் தரித்துவிட்டார்.

சங்கதி அத்தோடு முடியவில்லை. இப்போது இருப்பது போல் ஸ்கேன் வசதி அப்போது இல்லை. ஆகவே தம்பதியினர் அந்த ஊழியரிடமே வந்தனர். அவர் ஜெபித்து ஆண்பிள்ளைப்பிறக்கப் போகிறது என்று அருள் வாக்குக் கொடுத்துவிட்டார்.

அந்த சகோதரன் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர். ஆண்பிள்ளைக்கு ஏற்றாற்போல் விதவிதமான ஆடைகளை வாங்கிக் குவித்தார். பிரசவ நாள் வந்தது; பிள்ளை பிறந்தது; அதுவோ பெண் பிள்ளை.

அவ்வளவுதான்! அந்த சகோதரன் ஒரே நிமிஷத்தில் இடறிப்போனார். கர்த்தர் பொய் சொன்னாரா? அல்லது ஊழியக்காரர் பொய் சொன்னாரா? என்று கூப்பாடு போட ஆரம்பித்தார் . அன்று முதல் அந்த தலைவர் தலைகுனிந்து நடக்க வேண்டிய நிலைமை வந்துவிட்டது. தலைவர்களே! உங்கள்



பிரசங்க மேடைகளில் தேவனிடமிருந்து வந்த செய்திகளை மட்டும் அறிவியுங்கள். அந்நிய அக்கினிப் போடாதீர்கள்.

## 2. இணைந்து செயல்படுகிறவனே தலைவன்

தலைமை தாங்கி நடத்த வேண்டியது தலைவனின் பொறுப்பு என்பது உண்மையானாலும், தானே எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்பது நியதி கிடையாது. தனி மனித தலையின்மேல் முழு பொறுப்பையும் தேவன் என்றுமே சுமத்தியது கிடையாது. இணைந்த கரங்கள் எதையும் சாதிக்கும் என்று எங்கோ வாசித்த வாசகத்தை இங்கு கோடிட்டுகாட்ட விரும்புகிறேன்.

இந்த திவ்விய ஒழுங்கை தமது ஊழியத்தில் தலைவர்கள் கடைபிடிக்க வேண்டுமென்று பொறுப்பை தலைவர்களிடம் கொடுத்துள்ளார். எனக்கே வெளிப்படுத்தப்பட்டது என்று எல்லா சுமைகளையும் தலைமேல் போட்டுக் கொள்கிறவர்கள் தலைவர்களாயிராமல் தலைக்கணம் பிடித்தவர்களாய் தவறிப் போகிறார்கள்.

தலைமைத்துவ அழைப்பைப் பெற்றப்பவுல் சில வேளைகளில் சீலாவையும், சில வேளைகளில் பர்னபாவையும், மற்ற வேளையில் மற்றவர்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு தேவனின் திட்டத்தை நிறைவேற்றினார் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தலைமைத்துவத்தைப் பெற்ற பேதுரு பதினொருவருடன் எழுந்துநின்று பிரசங்கித்தார். முடிவு? மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள் - (அப். 2 அதி) பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப்போனார்கள் - (அப். 3 அதி) இருவரும் சேர்ந்தே முதலாம் பெந்தெகொஸ்தே அற்புதத்தை நிகழ்த்தினார்கள்.

இப்படிப்பட்ட வெற்றியுள்ள ஒழுங்கு முறைக்கு மோசே சரியான அடித்தளத்தை அமைத்து தந்தார் என்பதே சிறப்பு. பார்வோனின் சமூகத்தில் கோல் சர்ப்பமாக மாறியதே, அந்த சம்பவத்தில் கோலை யார் போட்டது தெரியுமா? யாத் 7 : 10-ஐ வாசித்துப் பாருங்கள். ஆரோன் கோலைப்போட்டார். அது சர்ப்பமாயிற்று மட்டுமா? ஆரோன் கோலை நீட்ட (யாத் 7 : 19) நீர்நிலைகள் யாவும் இரத்தமாக மாறிற்று. அற்புதங்களை நிறைவேற்ற மோசே ஆரோனை இணைத்துக் கொண்டார்.

அதைப் போலவே, அமலேக்கியருடன் யுத்தம் வந்தபோது, இந்த இருவர் கூட்டணி நால்வரணியாக மாறிற்று. மோசே, ஆரோன், ஊர், யோசுவா என்கிற இந்த கூட்டணியில் யுத்தம் செய்வதற்கென்று தலைமைத்துவப் பொறுப்பை மோசே யோசுவாவிடம் வழங்கியிருந்தார்.

இணைத்துக் கொள்கிறது மாத்திரமல்ல, இசைந்து போவதே முக்கியம். திடீரென ஒருநாள் மோசேயின் மாமனாகிய எத்திரோ வருகிறார். மோசேயின் காரியங்களையும் நீதி விசாரணையையும் கவனிக்கிறார். முதியவராகிய அவர் நிர்வாக சம்பந்தமான ஒரு ஆலோசனையை வழங்குகிறார். "உங்க ஜோலியைப் பாருங்க" என்று மோசே அவரை அலட்சியம் பண்ணாமல், அந்த ஆலோசனையை அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

லேவி 10 : 19, 20-ம் வசனத்தில் ஒரு சிக்கலான காரியம். பாவ நிவாரணப் பலியை ஆரோன் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவில்லை. அதனால் மோசே கோபம் கொண்டார். (வசனம் - 16) ஆனால், அதற்கு என்ன காரணம் என்பதை ஆரோன் விளக்குகிறார் (வசனம் - 19) சர்வாங்க தகனபலி இன்று செலுத்தப்பட்டபடியால், அதைப் புசிக்கவில்லை என்கிறார்.

அதைக் கேட்ட மோசே, "எனக்கே சொல்லி தருகிறாயா?" என்று எகிறாமல் அமைதலாக இருந்தார். (வசனம் 20) என்பதை கவனியுங்கள்.

சிலர் அடுத்தவர் ஆலோசனை சொன்னாலே அலர்ஜி வந்தது போல் துடிக்கின்றார்கள். அதுவும் மாமனார் என்றால் அவ்வளவுதான். அரவம் தீண்டியது போல் அலறுகிறார்கள். தலைவர்களே! கொஞ்சம் கவனியுங்கள். கர்த்தர் நம்மோடு பேசுகிறார் என்பது உண்மைதான். சில வேளைகளில் தெய்வபிள்ளைகளைக் கொண்டும் பேசுவார் என்பதை மறந்து விடக்கூடாது.

மனைவியாகட்டும் - மாமனாராகட்டும் மூப்பராகட்டும் அவர்களுக்கும் பரிசுத்த ஆவியுண்டு என்பதை மறக்க முடியுமா - மறுக்க முடியுமா? எனவே அவர்கள் சொல்வதை காது கொடுத்துக் கேட்கத்தான் வேண்டும். மோசே காது கொடுத்துக் கேட்டது மாத்திரமல்ல. அந்த ஆலோசனை சரியாய் பட்டபடியால், அதை நிறைவேற்றவும் செய்தார். வெற்றியும் கொண்டார்.



இணைந்து செயல்படுதல், இசைந்து போகுதல் என்பவை தலைமைத்துவத்தின் தனிச்சிறப்பு. இதில் நமது பேரும், புகழும் மங்கிப் போய்விடுமோ என்று அஞ்சத் தேவையில்லை **தேவன் உயர்த்த நினைத்த மனிதனை எந்த மனிதனும் தடுக்க முடியாது - கெடுக்க முடியாது.** என்பதற்கு மோசேயின் தலைமைத்துவம் முன்மாதிரியாயிருக்கிறது.

**3. விமர்சனத்தை சகிப்பவனே தலைவன் :**

தலைவன் தனது இரண்டு கண்களால் எதிரேயுள்ள மக்களைப் பார்க்கும் அதே வேளையில் எண்ணற்றக் கண்களால் பார்க்கப்படுகிறான். வெவ்வேறு மனிதர்களின் வெவ்வேறு பார்வைகளால் தலைவனது செயல்கள் அசைப்படுவதும் ஆராயப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்று.

இப்படிப்பட்ட விமர்சனங்களை சாதாரணமாக ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இன்னும் சொல்லப் போனால். அந்த விமர்சனத்தை நமது ரூபத்தைக் காண்பிக்கும் கண்ணாடியாக்கிக் கொண்டு, நம்மை சீர்ப்படுத்திக் கொள்வது மிகச் சிறப்பாக இருக்கும்.

நமக்கு முன்பாய் நன்றாய்ப் பேசுவார்கள். நமது தலைமறைந்தவுடன், தலைகீழாய்ப் பேசுவார்கள். இவைகள் நமது காதுகளுக்கு வந்து எட்டும்போது, சோர்ந்து போகக்கூடாது. நமது காதுக்கு எட்டியவை கொஞ்சம். எட்டாதவைகள் எத்தனையோ! அவைகளும் வந்து சேர்ந்தால் என்ன செய்ய முடியும். எனவே விமர்சனத்தை லகுவாக எடுத்துக் கொள்ளுங்கள்.

மக்கள் யாரைத்தான் விமர்ச்சிக்காமல் விட்டார்கள். பெயல் செபூல், எத்தன், மதுபானப் பிரியன் என்றெல்லாம் இயேசுவை விமர்சித்தார்கள். அதற்காக இயேசு கிறிஸ்து ஊழியத்தை விட்டுவிட்டாரா? இல்லையே.

இன்றைக்கு நாம் வெகுவாக புகழ்ந்து கொண்டிருக்கும் அப்போஸ்தலனாகிய பவுல் அவரது சமகாலத்து மக்களால் மிக மோசமாக விமர்சனம் செய்யப்பட்டவர்தான். அவராலே ஊழியத்துக்கு வந்தவர்கள் கூட அவருக்கு எதிராக விமர்சித்தார்கள். பவுலின் ஊழியம் தடை படவில்லை.

**மோசேயின் ஊழியத்தில்**

1. அவரின் திருணம் விமர்ச்சிக்கப்பட்டது (எண். 12 : 1)

2. அவரின் அழைப்பு விமர்சிக்கப்பட்டது (எண் 12 : 2)
3. மோசேயின் தலைமைத்துவம் விமர்சிக்கப்பட்டது (எண் 16 : 3)

இவைகளெல்லாவற்றையும் சகித்தார், ஜெயித்தார் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மோசேயின் வல்லமையும் கூட விமர்சனத்திற்குள்ளானது. புதிய ஏற்பாட்டில் ( II தீமோ 3 : 8). யந்நேயும். யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த பெயர்களை பழைய ஏற்பாட்டில் உங்களால் காண முடியாது. எனவே, ஒருவேளை இது யார் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

மோசே பார்வோனுக்கு முன்பாக தேவ வல்லமையைப் பயன்படுத்தி அடையாளங்களை நிகழ்த்திய போது, அதற்கு எதிராக மந்திரத்தால் பொய்யான அடையாளங்களை நிகழ்த்திய எகிப்திய மந்திரவாதிகளில் குறிப்பிடதக்கவர்கள் இந்த யந்நேயும் யம்பரேயும்.

ஆக, ஒரு தலைவனின் திருமணம் (சொந்த வாழ்க்கை) வரங்கள், அழைப்பு, அதிகாரம் நிச்சயமாக விமர்ச்சிக்கப்படும். சிலர் அவைகளை அங்கீகரிக்க மாட்டார்கள். இந்த நிலையில் வெகுண்டு எழுந்து நமது தலைமைத்துவத்தின் சிறப்பை சேதப்படுத்திக் கொள்ளக்கூடாது.

இன்னார்தான் நமக்கு எதிராய் பேசுவார்கள் என்று அட்டவணை ஏதும் கிடையாது. யோபுவின் மனைவியைப் போல் சொந்த மனைவியே விமர்சனம் செய்யலாம். சவுல் தாவீதை விமர்சனம் செய்தது போல் மாமனாரே விமர்சிக்கலாம். மந்திரவாதிகள் மோசேயை எதிர்த்தது போல், உலகம் உங்களை எதிர்க்கலாம்.

ஆரோனும் மிரியாமும் மோசேயை விமர்சித்தது போல், உடன் பிறப்புகளே விமர்சிக்கலாம். கோராகின் கூட்டம், துரைத்தனம் பண்ணுகிறாயா? கண்களைப் பிடுங்கிப் பார்க்கிறாயா (எண் 16 : 13 ,14) என்று பேசியது போல், இணத்தாரே நம்மை இடிக்கலாம். இந்த நேரத்தில் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு எதிராக வரும் வார்த்தைகளில், உண்மை இருக்குமானால் உடனே உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். அவைகள் உண்மையல்ல என்று உங்கள் உள்மனம்



சொல்லுமானால் எவனுக்கும் பயப்படத் தேவையில்லை. அதிலும் முக்கியமாக அவைகளுக்கு பதில் சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்ட மனிதர்களை ஒரு பொருட்டாகவும் நீங்கள் எண்ணக் கூடாது.

வாங்கித் தின்றது வாயிலிருந்து வயிற்றிற்குப் போன உடனேயே வக்கிரப் புத்தியினால் வசைபாடும் மக்கள் பலர் ஆவிக்குரிய உலகத்தில் பெருகியிருக்கிறார்கள்.

திராட்சைப் பழம் கிடைக்காததினாலே “சீ.... சீ.... இதுப் புளிக்கும் இதைத் தின்றால் பல் கூசும் என்று நினைத்தது” நடக்காததினால் நம்மை தரம் தாழ்த்தி விமர்சித்துத் திரியும் நரிகள் கொஞ்சம் கூடுதலாகவே அலைந்து திரிகின்றன.

இவர்களுக்குப் பதில் தருகிறேன் என்று நீங்கள் இறங்கிவிடக்கூடாது. கண்ணாடி மாளிகைக்குள் நின்று கொண்டு வெளியே உள்ளவனை நோக்கி கல் எறிந்தால் நஷ்டம் யாருக்கு? நமக்கல்லவா! எனவே விமர்சனத்தை வீரியமற்றதாக ஆக்க வேண்டுமானால் வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள்.

அண்ணனும் அக்காவும் திருமணத்தை விமர்சிப்பதோடு அல்லாமல் தனது தலைமைத்துவத்தை விமர்சித்து போர் கொடி உயர்த்தின போது மோசே எந்த வார்த்தையையும் பதிலாக உரைக்கவில்லை. மவுனமாக இருந்து விட்டார். தன்னைவிட அவர்கள் பெரியவர்கள் என்பதினாலோ அல்லது தவறு இழைத்துவிட்டோம் என்ற குற்ற உணர்வினாலோ அப்படிச் செய்யாமல் தீர்க்கதரிசியாகிய தமது வாயிலிருந்து தீழ்பானது வரக்கூடாது என்பதில் வெகு கவனமாக இருந்தார்.

மோசேயின் மவுனம் கர்த்தரின் மவுனத்தைக் கலைத்து விட்டது. கர்த்தரின் கோபம் அவர்கள் மேல் மூண்டுவிட்டது. (எண் 12 : 10) தேவனின் கிரியையைப் பார்த்து ஆரோன் அடுத்த நிமிடமே, மோசேயை ஆண்டவனே என்று அழைத்தார்.

தலைவர்களே, இது நமக்கு நல்ல பாடம். நமது மவுனம் எதிரிகளின் மேல் அக்கினிப் பிரவாகத்தைக் கொண்டுவரும். நமது கோபமோ வீணானக் குழப்பத்தைக் கொண்டுவரும்.

என் நேசர் குற்றம் சாட்டப்பட்ட போது மவுனமாயிருந்தார். தண்டனையாக வாரினால் அடித்தபோது மவுனமாயிருந்தார். சிலுவையில் அறையப்பட்ட போதும் மவுனமாயிருந்தார். நீ தேவனுடைய குமாரனா என்று கேட்ட போதும்

மவுனமாயிருந்தார்.

இந்த கொடுமைகளுக்கு இடையில் கோலால் தலையில் அடித்தார்கள். தாடியை இழுத்தார்கள். சிலர் முகத்தில் துப்பினார்கள். எனது தலைவர் இயேசுவோ மவுனத்தையே சாதித்தார்.

சில மணிநேரங்கள் – சில நாட்கள் இயேசு தோற்றவர்போல் – தோற்கடிக்கப்பட்டவர்போல் இருந்தார். ஆனால்! ஆனால்! கல்லறையைவிட்டு – மரணத்தைவிட்டு மகிமையாய் எழுந்தார்.

சில வேளைகளில் நாம் தோற்றது போல பிரமை ஊற்றப்படும். நாம் நமது மாம்ச கிரியையில் இறங்காமல் மவுனமாய் தேவனுடைய யுத்தத்திற்காகக் காத்திருக்க வேண்டும்.

தனக்கு சம்பந்தமில்லாத ஒரு காரியத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தான் போகிற வீடுகளெல்லாம் எனது நற்பெயரை களங்கப்படுத்தக்கூடிய வார்த்தைகளை ஒரு ஊழியர் பேசி வந்தார். அதே நேரத்தில் என்னைப் பார்க்கும் போது ஆகா ஓகோ என்று புகழுவார். அவரை ‘நறுக்கென்று’ கேட்டு மூக்கை உடைக்க வேண்டும் என்கிற ஆவேசம் எனக்கு ஏற்பட்டதுண்டு. இயேசுவின் மவுனத்தை நினைத்து அமைதலாகி விட்டேன்.

ஒரு சில மாதங்களில் ஒரு காரியம் நடைபெற்றது. அவரது குடும்பம் இரண்டாய் உடைந்தது. மனைவி பிரிந்து போனாள். அவரால் தொடர்ந்து அந்த ஐக்கியத்தில் இணைந்து ஊழியம் செய்ய முடியாமல் அகன்று போனார்.

எனக்கு விரோதமாய் மற்றவர்கள் பேசுகிறபோது, எங்கெல்லாம் நான் மவுனம் சாதித்தேனோ, அங்கெல்லாம் தேவ கோப அக்கினி இறங்கினதைப் பார்க்கிறேன். எனது சாவை எதிர்ப்பார்த்தவர்கள், எதிர்பாராதவிதத்தில் செத்துப் போனார்கள். என்னைப் பார்த்து தலுக்கி, குலுக்கி நடந்தவர்கள் என்ன காரணமோ தெரியவில்லை தத்தி தத்தி நடக்கிறார்கள்.

இப்படி பத்துக்கும் மேற்பட்ட சம்பவங்களை எழுத முடியும். என் நீதியின் தரத்தை எடைப்போட்டுக் கொள்ளுங்கள் என்பதற்காக எழுதவில்லை. மாறாக நமது தலைமைத்துவத்திற்கு ஆபத்து வரும் வேளையில் மவுனமாக இருந்தால், தேவன் நியாயம் செய்வார் என்பதை சுட்டிக் காட்டவே.

சில வேளைகளில் நம்மைக் குறித்து தீதாய் விமர்ச்சிப்பவர் களுக்கு எந்த மாற்றமும் ஏற்படாமல் அன்றலர்ந்த தாமரை போல்



தள தளவென்று நமக்கு முன்னே நடப்பார்கள். இது என்ன? என்ற ஆச்சரியம் நமக்கே கூட ஏற்படும். “இப்போது பார்த்தீர்களா! நாங்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறோம்” என்று அவர்கள் தண்டோராப் போட்டுக் கொண்டு அலைவார்கள். இவைகளைக் கண்டு நீங்கள் குற்றவுணர்வு அடைய வேண்டியதில்லை.

வசனத்தை நன்றாய் கவனித்துப் பாருங்கள் (II சாமு 15 : 1) இதற்குப் பின்பு அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான். (I) இவ்விதமாய் இஸ்ரவேல் மனிதருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான்.

(II சாமு 15 : 6) எக்காள தொனி கேட்கும்போது அப்சலோம் இராஜாவானார் என்று சொல்லுங்கள் என்று (II) சொல்லி வைத்திருந்தான் Setup.

இந்த சதி அறியாமல் இருநூறு பேர் வஞ்சகம் என்று அறியாமையினால் (III) போனார்கள் (II சாமு 15 : 11)

இத்தோடு காரியம் நிற்கவில்லை. விட்டேனா பார்! தாவீதின் கூடாரத்தை காலி செய்வேன் என கர்வமடைந்தான் (IV) கட்டுப்பாடு பலத்தது. (II சாமு 15 : 12)

தொடர்பே இல்லாத சில அபூர்வப் பிறவிகள் இதைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் எரிச்சல்களைத் தீர்த்துக் கொண்டனர். அவர்களில் ஒருவன் சிமேயி என்பவன். தூஷித்தான், கற்களை எறிந்தான். (V) தொலைந்து போ தொலைந்து போ என்று அடுக்கு மொழியில் அர்ச்சனை செய்தான். (II சாமு 16 : 6, 7)

தாவீதின் உடனிருந்த ஆலோசனைக்காரனாகிய (VI) அகித்தோப்பேல் அப்சலோமோடு சேர்ந்து கொண்டான் (II சாமு 16 : 19).

இப்படியாக அப்சலோமிற்கு எல்லாமே மிகச்சரியாக அழகாக வாய்ப்பாக கூடி வந்தது ‘நினைத்ததை முடிப்பவன்’ என்று உள்ளத்தில் புளங்காகிதம் புரிகிறான். தலைவன் தள்ளாடுகிறான். பகைவன் பரவசப்படுகிறான். இதுவும் தேவன் அனுமதிக்கும் செயலாக இருக்கிறது.

இதற்கு மேல் நடந்ததைப் பாருங்கள். தன் ஆலோசனைப்படி எதுவும் நடக்காததினால், தன் வீட்டுக்குப் போய்,

அகித்தோப்பேல் நான்றுகொண்டு செத்தான் (II சாமு 17 : 23).

அப்சலோம் காட்டு வழியே வந்த போது (I) அவன் தலை (முடி) கர்வாலி மரத்தில் மாட்டிக் கொண்டது (II) அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். (III) அவன் ஏறி இருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று (II சாமு 18 : 9).

(IV) யோவாப் அவன் உயிரோடு இருக்கையில் மூன்று ஈட்டிகளால் அவன் நெஞ்சிலே உருவக் குத்தினான். (V) யோவாபின் ஆயுததாரிகள் அப்சலோமை அடித்தே கொன்றார்கள். (II சாமு 18 : 14, 15)

நாங்கள் நன்றாக இருக்கிறோம் என்று நர்த்தனம் புரியும்! அப்சலோமே நீ மனந்திரும்பு! தெய்வப் பிள்ளைகளுக்கு விரோதமாக தேவ சபைக்கு விரோதமாக உன் ஆவிக்குரிய தலைவனும், தகப்பனுமாகிய போதருக்கு விரோதமாக நீ பேசும் வார்த்தைகளுக்கும், செய்யும் சதிகளுக்கும் உன்னை விடுவித்துக் கொள். அப்படியே தொடர்வது உனக்கு நல்லதல்ல.

எவனும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று அகம்பாவம் கொள்ளாதே. தேவன் என்னோடிருக்கிறார் என்று வஞ்சித்துக் கொள்ளாதே. கர்வாலி மரம் உன்னைத் தடுக்கும். உன் வாகனம் உன்னைவிட்டு விலகும். உன் காரியம் மிக கஷ்டம் என்பதை சொல்லி எச்சரிக்க விரும்புகிறேன்.

தாவீதைப் பாருங்கள் அந்த நியாயத் தீர்ப்பில் மகிழ்ச்சி கொள்ளவில்லை. என் மகனாகிய அப்சலோமே! அப்சலோம் என்று கதறினான். அதுதான் தலைவனின் தகப்பனின் பண்பு. அதைப் போலவே தனக்கு விரோதமாய் மிரியாம் பேசின வார்த்தைகளுக்காகக் கர்த்தர் அவளை தண்டித்தபோது, அவளுக்காக மோசே வேண்டினார். இது தான் தலைவனின் பண்பு.

எனக்கன்பானவர்களே ! நீங்கள் ஏதோ ஒரு வகையில் கர்த்தரின் ஊழியத்தை செய்து கொண்டு வரலாம். ஞாயிறுப் பள்ளி நடத்தினால் கூட அதன் தலைவர் நீங்கள் தான்; வீட்டு ஜெபக்கூட்டம் நடத்தினாலும் அதன் தலைவர் நீங்கள் தான்.

எனவே முன்னனியில் நிற்கிற உங்களை நோக்கி, விபரீதமான, விஷமத்தனமான விமர்சன அம்புகள் புறப்பட்டு வரும். அவைகளைக் கண்டு நீங்கள் கலங்கவும் கூடாது கதறவும் கூடாது.

யோபு புத்தகத்தில் புதிரான ஒரு மிருகத்தைக் குறித்து



எழுதப்பட்டுள்ளது. அதனுடைய பெயர் **'பிகெமோத்'** என்பதாகும். (யோபு 40 : 15) அது தேவனுடைய கிரியைகளில் பிரதானமான கிரியை என்று வேதம் கூறுகிறது. அதன் தன்மைகளைக் குறித்து பல காரியங்கள் எழுதப்பட்டிருந்தாலும் ஒரே ஒரு வசனத்தை மாத்திரம் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதோ நதி புரண்டு வந்தாலும் அது பயந்தோடாது. யோர்தான் நதியத்தனை தண்ணீர் அதன் முகத்தில் மோதினாலும் அது அசையாமல் இருக்கும்.

விமர்சனங்களைத் தாங்க இப்படிப்பட்ட பெலத்தை கர்த்தர் அருள்வாராக. காண்டாமிருகத்திற்கு ஒத்த பெலன் என்பதற்கு பதிலாக பிகெமோத்திற்கு ஒத்த பெலனை தாரும் எனக் கேட்போம்.

## 4. திறப்பில் நிற்பவனே தலைவன்

தங்கள் இரட்சகனான தேவனை மறந்தார்கள். ஆகையால், அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார். அப்போது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட **மோசே** அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரகத்தை ஆற்றும் பொருட்டு அவருக்கு முன்பாக திறப்பில் நின்றான் (சங். 106 : 23)

மேலே வாசித்த வசனத்தில் தலைவனின் நான்காவது தகுதி மோசேயினிடத்தில் மிகுந்து இருப்பதைப் பார்க்கிறோம். யாரும் எப்படியோ போகட்டும் என்று இருப்பவன் தலைவனல்ல. தனது வசத்தில் அல்லது தனது சபையில் உள்ள ஒவ்வொருவருக்கும் உத்திரவாதம் செய்பவனே தலைவன்.

மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள் - எதிர்த்தவர்கள் இவர்கள் மேல் தேவக்கோபாக்கினை இறங்கும்போது ஆ... ஆ... தேவன் தமது தீர்ப்பை சொரியட்டும். ஆக்கினையை அனுப்பட்டும், என்று மோசே அமைதி காத்திருக்கலாம். ஆனால், அது தலைவனின் தகுதியன்று.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கு விரோதமாக எழும்புகிறார்கள். அப்பொழுது, கர்த்தர் இந்த ஜனத்தை முழுவதும் அழிக்கப் போகிறேன் என்றார். அதற்கு மோசே அப்படியல்ல ஆண்டவரே இந்த மக்களை வீணாய் அழித்துவிடக்கூடாது என்று திறப்பிலே நின்றார். (எண் 16 : 22)

பிரிதொரு இடத்தில் ஆண்டவரே இந்த ஜனத்தை ஒன்றும் செய்ய வேண்டாம். எனது பெயரைக் கிறுக்கிப் போடும் என்று பரிந்து பேசினார் (யாத். 32 : 32).

இப்படி பலமுறை தேவ சமூகத்தில் மோசே நின்றபடியால்

கர்த்தர் ஜனத்தின் மேல் வரவேண்டிய ஆக்கினையை மாற்றிப் போட்டார்.

தேவன் நம்மை தேசத்திற்கு காவலாளியாக வைத்திருக்கிறார். தேசத்தின் அக்கிரமத்திற்காய் கர்த்தரின் சமூகத்தில் விழுகிற மோசேக்களை கர்த்தர் தேடிக் கொண்டிருக்கிறார். ஜெபிப்பது வேறு, தேவ சமூகத்தில் திறப்பில் நிற்பது வேறு. இதை சரியாக புரிந்து கொள்ளாமல் அதிக நேரம் ஜெபிப்பதால், தாங்கள் தேசத்தின் நன்மைக்கு சேவை செய்து விட்டோம் என்று திருப்தி அடைந்து சிலர் அடங்கி விடுகின்றனர்.

**தேசத்தை தேவன் அழிக்காதபடிக்கு** திறப்பிலே நிற்கிறவன், சுவரை அடைக்கிறவன் தேவனுக்கு இன்றைய தேவையாயிருக்கிறது. தேசத்தின் ஜனங்கள் தங்களின் பாவம், அக்கிரமம் இவைகளின் நிமித்தம் தேவ பாதுகாப்பை உடைத்துக்கொண்டு நாள்தோறும் அழிவில் விழுந்து கொண்டிருக்கிறார்கள். தனது ஜீவனை பணயம் வைத்து பிளப்பில் நின்ற ஜனத்தின் அழிவைத் தடுக்கிறவனே திறப்பில் நிற்கிறவன்.

தேவன் ஆசாரியர்களிடம் சொல்லும் போது ஆசாரியர்கள், இஸ்ரவேலரின் அக்கிரமத்தை சுமக்க வேண்டும் என்றார். மட்டுமல்ல மகிமையான ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்பட்ட போது இஸ்ரவேல் புத்திரராகிய சபையின் மேல் கடுங்கோபம் வராதபடிக்கு லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தை சுற்றிலும் பாளையமிறங்கி, லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தை காவல் காப்பார்களாக என்றார் (எண்.1: 53).

தனது ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியது தலைவனின் பொறுப்பு யூதர்களின் மேல் ஆமான் சதி செய்து, மரண ஆக்கினைக் கொண்டுவர எத்தனித்த போது, எஸ்தர் தனது ஜீவனை பணயம் வைத்து திறப்பில் நின்றபடியால், முழு இஸ்ரவேலரும் காப்பாற்றப்பட்டனர்.

முழு இஸ்ரவேலருக்கும் அன்று வனாந்திரத்தில் ஒரு மோசே, அதன் பின் அந்நிய தேசத்தில் ஒரு எஸ்தர். அகில உலகத்திற்கும் ஒரு இயேசு. உங்கள் பட்டணத்திற்கு யார்? உங்கள் சபைக்கு யார்? திறப்பில் நிற்கப் போவது என்பதை யோசித்துப் பாருங்கள்.

அன்புள்ள தேவ ஊழியரே! உங்கள் சபைக்கு உங்களை தலைவராக தேவன் வைத்திருப்பதற்குக் காரணம் அவர்களை



ஆள்வதற்காக அல்ல. அவர்கள் ஆக்கினைக் குள்ளாகாதபடிக்கு காக்கும்படியாகவே.

உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள் என்று (எபி. 13 : 17) உங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளதை சிந்தித்துப் பாருங்கள்.

தீர்க்கத்தரிசியாகிய சாமுவேல், நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் (திறப்பிலே நிற்காவிட்டால்) பாவம் செய்கிறவனாயிருப்பேன் என்று சொல்வதிலிருந்து, திறப்பிலே நிற்காத தலைவன் பாவம் செய்கிறவன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (I சாமு 12 : 23)

செங்கடலை இரண்டாகப் பிளந்ததோ, கோலை சர்ப்பமாக மாற்றியதோ அல்ல தன்னிடம் அளிக்கப்பட்ட மக்களுக்காய் திறப்பிலே நின்று காத்தபடியால்தான் அவருடைய தலைமைத்துவம் சிறந்து விளங்கிற்று.

## 5. தலைவனை பிறப்பிப்பவனே தலைவன்

நமது இரட்சகர் இயேசுவின் ஊழிய முறையை கவனித்துப் பாருங்கள். அதில் மிகப்பெரிய வழிகாட்டுதல் இருக்கிறது.

அவர் ஊழியம் செய்த நாட்களில் பன்னிருவரைத் தெரிந்து கொண்டார்.

அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பட்டம் கொடுத்தார். பிசாசுகளைத் துரத்தவும் பிணியாளிகளை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். **அவர் வாழ்ந்த காலத்திலேயே அடுத்தக் கட்டத் தலைவர்களை ஆயத்தம் செய்தார். அடையாளம் காட்டினார்.**

தனக்குப் பின் தனது பணியை தன்னைப் போல் செய்ய ஒரு நபரை ஆயத்தப்படுத்தாதவர் தலைவன் அல்ல என்பதை நீங்களே அறியவேண்டும். மோசே இதற்கு சரியான முன் மாதிரி இந்த மாதிரியை தேவன் அவருக்குக் கற்று தந்தார். தேவனிடத்தில் பெற்றுக் கொண்டதை பொறுப்புள்ள மனிதர்களிடத்தில் மோசே ஒப்புக் கொடுத்தார். அதில் யோசுவா என்கிற வாலிபனை தலைவனாக்கியது மிகப் பெரிய செயல்.

மோசேயின் ஊழிய நாட்கள் நிறைவேற வேண்டிய காலக் கட்டம் வந்த போது, மக்கள் மத்தியில் தனக்கு அடுத்த தலைவனாக யோசுவாவை அறிமுகப்படுத்தி வைத்தார்.

இவை யாவற்றையும் விட பெரிய காரியம் என்ன தெரியுமா? தனக்குப் பின் நல்ல தலைவன் தனது ஜனத்திற்கு வேண்டுமென்று ஜெபித்தார். அந்த ஜெபத்தை அப்படியே கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்.

''அப்பொழுது மோசே, கர்த்தரை நோக்கி, கர்த்தருடைய சபை, மேய்ப்பன் இல்லாத மந்தையைப் போல் இராதபடிக்கு அந்த சபைக்கு முன்பாக போக்குவரத்தாய் இருக்கும்படிக்கு, அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டுமென்றார் (எண். 27 : 17).

இந்த ஜெபத்தை உடனே கர்த்தர் அங்கீகரித்தார். **ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர்** என்று மோசே குறிப்பிட்டு சொன்ன வார்த்தையை தேவன் குறிப்பாய் கவனித்து பதில் சொல்லும் போது, ''ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவாவை தெரிந்து கொள் என்றார்'' (எண். 27 : 18).

மோசே ஒரு தலைவனை ஆயுத்தம் செய்தார். தேவன் அதை அங்கீகரித்தார். மோசே அடுத்த கட்டமாக தான் உயிரோடு இருக்கும்போதே அப்போதைய பிரதான ஆசாரியனாகிய எலெயாசருக்கும், சபையாருக்கும் முன்பாக கைகளை வைத்து தலைவனாக ஏற்படுத்தினார். (எண் 27 : 23)

மோசே இஸ்ரவேலரை எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்து வனாந்திரத்தில் வழி நடத்தினார். அந்த ஜனத்தை வனாந்திரத்திலிருந்து வழி நடத்தி யோசுவா கானானுக்குள் கொண்டு வந்தார்.

தலைவர்களே உங்கள் காலத்திலேயே அடுத்தக் கட்ட தலைவர்களை தெரிவு செய்யுங்கள். பயிற்சி கொடுங்கள் அவர்களுக்காய் ஜெபியுங்கள் அவர்களை மக்களுக்கு முன்பாக அடையாயம் காட்டுங்கள். இது மோசேயின் முன் மாதிரி மாத்திரமல்ல. நமது இரட்சகர் இயேசுவும் வைத்து விட்டுப் போன முன்மாதிரியாக இருக்கிறது.

இதுபோல் பல மேற்கோள்களை வேதத்திலிருந்து காட்ட முடியும். எலியா உயிரோடு இருக்கும் போதே தன் ஸ்தானத்தில் எலிசாவை அபிஷேகம் பண்ணினான். தாவீது உயிரோடு இருக்கும் போதே சாலமோனை தன் ஸ்தானத்தில் இராஜாவாக



அபிஷேகம் பண்ணுவித்தான். பவுல் தனது காலத்திலேயே தீத்து, தீமோத்தேயு என்பவர்களை ஆயத்தம் செய்து அத்யட்சகராக ஏற்படுத்தினான்.

நீங்களும் நானும் இதை நிச்சயம் செய்ய வேண்டும். சுயநலத்திற்காகவோ, சோம்பேறி தனத்தாலோ, அடுத்த கட்டத்தலைவரை ஏற்படுத்தாவிட்டால், கர்த்தரின் சபை மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் சிதறிப் போகும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல அந்த தலைமையிடத்தை அடைவதற்கு ஆதிக்கப் போட்டி ஏற்பட்டு அவசியமில்லாத காரியங்கள் அரங்கேற்ற துவங்கும் என்பதையும் நாம் அறிந்திடுதல் வேண்டும்.

யாரையும் குற்றப்படுத்தும்படி அல்ல. ஜாக்கிரதைப் படுத்தும்படி ஒரு சம்பவத்தை எழுதுகிறேன். தமிழகத்தில் ஒரு நல்ல தேவனுடைய மனிதர் பெரிய சபையைக் கட்டினார் – தமிழ் கூறும் நல்லுலகே ஆச்சரியப்படும் விதத்தில் அந்த சபை வளர்ந்து பெருகிற்று.

சபையை வளர்க்க தீவிரம் காட்டிய அவர் அடுத்தக் கட்டத் தலைவரை அடையாளம் காட்டத் தவறி விட்டார். திடீரென அவர் மரித்துப் போனார். அதன்பின் அந்த தலைமை இடத்தைப் பிடிக்க பல்முனைப் போட்டி ஏற்பட்டது.

மாமன்னன் அலெக்ஸாந்தர் மரித்தப் பிறகு அவரது தளபதிகளாகிய செலூக்கஸ், லிசிமாஸ், தாலமி, சாசண்டர் ஆகியோர் நான்காக இராஜ்ஜியத்தைப் பிரித்துக் கொண்டது போல அந்த சபையும் பல சபைகளாய் பிரிந்து குறுகியது.

இது நமக்கு நல்ல எச்சரிப்பு, தலைவன் தன் காலத்துக்குப் பிறகு தன் ஸ்தானத்திற்கு வரவேண்டிய தலைவனை தன் காலத்திலேயே மோசேயைப் போல் ஏற்படுத்த வேண்டும்.

**தலைவன் என்பவன்**

1. **தேவ வார்த்தைப் பெற்றவனாய்**
2. **இணைந்து செயல்படுகிறவனாய்**
3. **விமர்சனத்தைத் தாங்குகிறவனாய்**
4. **திறப்பில் நிற்கிறவனாய்**
5. **தலைவனை ஏற்படுத்துகிறவனாய், இருத்தல் வேண்டும்.** அதற்கு மோசே மிகச் சிறந்த வழிகாட்டியாய் இருக்கிறார்.

# 6. தாசனாகிய மோசே

என் தாசனாகிய மோசே என்ற இந்தப் புத்தகத்தில் கடைசி அத்தியாயத்திற்கு இந்தப் பெயரையே வைத்திருக்கிறேன். காரணம், ஒருமுறை இருமுறை அல்ல, வேதத்தில் பதினெட்டு முறை **என் தாசனாகிய மோசே** என்று கர்த்தர் அழைத்திருக்கிறார்.

யோசுவாவின் புத்தகம் முதல் அதிகாரம், முதல் வசனத்தில் கர்த்தருடைய தாசனாகிய மோசே என்றும், இரண்டாம் வசனத்தில் என் தாசனாகிய மோசே என்றும் ஆவியானவர் எழுதியிருப்பதை கண்டபோது என் ஆவிக்குள் புதிய பரவசம் ஏற்பட்டது.

எண்ணற்ற பக்தர்களைக் குறித்து வேதத்தில் விவரமாக எழுதப்பட்டு, பெருமைப்படுத்தப்பட்டிருந்தாலும், எண்ணிக்கைக்கு உட்பட்ட சிலரை மாத்திரம் **என் தாசன்** என்று ஆண்டவர் மகிழ்வுடன் அழைத்திருக்கிறார். அப்படி அழைக்கப்பட்டவர்களில் என் தாசனாகிய யோபு, என் தாசனாகிய தாவீது என்ற இருவரின் வரலாற்றை எனது மூன்று, பதினெட்டாவது படைப்புகளில் மூலம் ஏற்கனவே உங்களுக்கு வழங்கியிருக்கிறேன்.

அந்த வரிசையில் என் சிந்தையைக் கவர்ந்த தேவ மனிதனாகிய மோசேயை உங்களிடத்தில் அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவரைக் குறித்த அனைத்துக் காரியங்களையும் ஒரே நூலில் எழுதுவது இயலாத காரியம். தற்போது எனது சிந்தையில் வெளிப்பட்ட சில காரியங்களை மட்டும் முந்தின அதிகாரங்களில் எழுதியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து மேலும் சில குறிப்புகளை இந்த அதிகாரத்தில் அளிக்க விரும்புகிறேன்.

மோசே இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கிறார். சிறுவயதில் அரசர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் இயேசுவும் மோசேயும் தப்பினர் என்று கடந்த அத்தியாயத்தில் இணைத்துக் காட்டியிருந்தேன். இன்னும் சில ஒற்றுமைகளைத் தொடர்ந்து கவனிப்போம்.

மோசே மலையில் மரித்தார். அதுபோல் இயேசுவும் மலையில் மரித்தார். அடுத்த மோசேயின் சரீரத்தைக் கர்த்தரே



அடக்கம் பண்ணினார். இதுநாள் வரை அந்த பிரேதக் குழியை ஒருவனும் அறியான் (உபா. 34 : 6) இயேசுவும் ஒருவனும் ஒருக்காலும் வைக்கப்பட்டிராத கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்.

மோசேயின் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டாலும், அது அதற்குப் பிறகு விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது (யூதா 1 : 9). மறுரூபமாக்கப்பட்ட நிலையில் இயேசுவுடன் மறுரூப மலையில் தரிசனமானார்.

இயேசுவும் அடக்கம் பண்ணப்பட்டாலும் அதன்பிறகு உயிர்த்தெழுந்து சீஷர்களுக்கு தரிசனமானார். இப்படி தனது வாழ்வில் பல அம்சங்களில் இயேசுவுக்கு நிழலாட்டமாய் இருந்தது மாத்திரமல்ல ஊழிய முறைமைகளிலும், இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகத் திகழ்ந்தார்.

1. உலகத்திற்கு வந்தத் தீர்க்கத்தரிசி
2. நமது பிரதான ஆசாரியர்.
3. வரப்போகிற இராஜாதி இராஜா.

இதற்கு ஒப்பான மூன்றுவிதமான ஊழியத்தைப் பெற்ற ஒரே நபர் மோசே மட்டுமே.

மெல்கிசேதேக்கு இராஜாவும் ஆசாரியருமாக இருந்தார். தாவீது இராஜாவாகவும் தீர்க்கதரிசியாகவும் இருந்தார்.

ஆனால் கர்த்தரின் தாசனாகிய மோசே

1. இஸ்ரவேலின் தீர்க்கதரிசி – (உபாகமம் 18 : 15-20)
2. ஜனத்தின் தலைவன் – (இராஜா) (உபா 33 : 5)
3. ஆரோன் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு முன் ஆரோனை அபிஷேகம் பண்ணுவிக்க ஆசாரிய ஊழியம் செய்தவன் – (லேவி. 9 : 23) என கிறிஸ்துவின் ஊழியத்தின் முன் அடையாளமாய் மூன்றுவித ஊழியத்தையும் நிறைவேற்றினார்.

மோசேயின் இடத்தில் பொதிந்துள்ள நற்பண்புகளை சில பக்கங்கள் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**1. நீதியுள்ள மோசே**

முற்பிதாக்கள் செய்த ஆணையை நிறைவேற்றுவது அரிதான காரியம். தகப்பன் செய்த ஆணையையே நிறைவேற்றாத பிள்ளைகள் இருக்கிற காலக்கட்டத்தில், தாத்தாவுக்கு, தாத்தாவுக்கு தாத்தா செய்த (குழம்பிக்

கொள்ளாதீர்கள்) மோசே நிறைவேற்றினார்.

முற்பிதாக்களுக்கு இட்ட ஆணை அல்லது அவர்கள் ஆணையிட்டு ஒப்புக் கொடுத்ததை ஆதியாகமத்திலும், அதை மோசே நிறைவேற்றியதை யாத்திராகமத்திலும் ஆவியானவர் குறிப்பாய் எழுதி வைத்திருக்கிறார்.

யாக்கோபின் வீட்டாருக்கு ஜீவ ரட்சண்யத்தை உண்டாக்கிய யோசேப்பு மரிக்கும் தருவாயில் "தேவன் உங்களை சந்திக்கும் போது என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக" என்று ஆணையிடுவித்துக் கொண்டான். (ஆதி 20 : 25)

யோசேப்பின் சகோதரன் (1) லேவி; லேவியின் குமாரன் (2) கோகாத்; கோகாத்தின் குமாரன் (3) அம்ரான்; அம்ராமின் குமாரன் (4) மோசே - (யாத். 6 : 16 - 20)

ஆக நான்கு தலைமுறைகளுக்கு அப்பால் இஸ்ரவேலர் எகிப்திலிருந்துப் புறப்படுகின்றனர். எல்லோரும் தங்கள் உடமைகளை மூட்டை கட்டுகிறார்கள். ஆனால், கர்த்தரின் தாசனாகிய மோசே என்ன செய்தார் தெரியுமா? பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பெட்டியில் வைக்கப்பட்ட "யோசேப்பின் எலும்புகளை தன்னோடு கூட எடுத்துக் கொண்டு போனான்" (யாத் 13 : 19).

ஆணையிட்டதில் நஷ்டம் கஷ்டம் ஏற்பட்டாலும் நிறைவேற்றுகிற மனிதனே நீதிமான். மோசே தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருந்தார் என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

**2. வாஞ்சையுள்ள மோசே :**

தேவன் மோசேயோடு பேசினார். மோசேயின் கரத்தின் மூலம் அற்புதங்கள் நிறைவேறியது. ஆகிலும் மோசே அவைகளில் திருப்தியடையவில்லை.

தன்னோடு பேசி தன்னை நடத்தும் தேவனின் முகத்தைக் காண ஆவலாய் துடிக்கிறார். தேவன் எத்தனையோ மாற்றுக் காரியங்களை சொல்லியபோதும் இவர் விட்டபாடில்லை. உமது முகத்தை எனக்கு காண்பியும் என்று கெஞ்சிக் கொண்டேயிருந்தார் (யாத் 33 : 18)

தேவனின் சபைக்கு இந்த வாஞ்சை இருக்க வேண்டியது



மிகவும் அவசியம். கர்த்தர் நம்மைக் கொண்டு பல அற்புதங்கள் செய்யலாம் - பலமான ஊழியத்தை நடத்தலாம். இவைகள் மத்தியில் கர்த்தரின் மகிமையை தரிசிக்கிற தீராத வாஞ்சை உள்ளத்தின் ஆழத்தில் இருக்க வேண்டியது அவசியம்.

தேவனின் நியமனத்தின்படி அவரைப் பார்த்தவர்கள் உயிரோடு கூட இருக்க முடியாது. இதனை தெளிவாக அறிந்திருந்தும் மோசே தேவனை விடவில்லை. எனவே தேவன் தமது தாசனகிய மோசேயின் வாஞ்சையை நிறைவேற்ற சில நியமங்களை ஏற்படுத்தி அவரின் மகிமையை மோசேக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினார். மோசே பின்பக்கத்தைப் பார்த்தார் (முகத்தைப் பார்க்கவில்லை).

இந்த தணியாத தாகமும், வாஞ்சையுமே நம்மை அவரின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும். மோசே அந்த வாஞ்சையால், கன்மலையின் மேல் ஏறினார். கன்மலை வெடிப்பில் தங்கினார். தேவ கரத்தின் கீழ் அமர்ந்திருந்தார் (யாத் 33 : 21-23) எதற்காக மகிமையைக் காணும்படியாக.

கிறிஸ்துவின் வருகையைக் குறித்த வாஞ்சையுள்ள ஆத்துமா மாத்திரமே எந்த தியாகத்தை செய்தாகிலும் தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றும்.

கர்த்தருடைய பிள்ளையே தேவ மகிமையைக் காண நீ ஏறி நிற்க வேண்டிய கன்மலை எது? உனக்குண்டான கன்மலை வெடிப்பு எது? கர்த்தரின் கரத்தின் கீழ் அடங்கியிருக்க வேண்டியது எங்ஙனம்? என்பதை ஜெபத்தில் கேட்டு உடனே கீழ்ப்படி. கர்த்தரின் வருகையில் நீ மகிமையைக் காண்பாய்.

**3. சாட்சி பெற்ற மோசே :**

மோசேயைக் குறித்து கர்த்தரே இறங்கி வந்து சாட்சி கொடுத்ததை பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவன் பதித்து வைத்துள்ளார்.

★ மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாக இருந்தான் (எண் 12 : 6)

★ என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண் 12 : 6)

மோசே தேவனிடத்தில் எப்பேர்ப்பட்ட சாட்சி பெற்றிருந்தார் பாருங்கள். சாந்தம் - உண்மை என்று எழுதாமல் **மிகுந்த -**

**எங்கும்** என்ற வார்த்தைகளை அடைமொழியாக ஆவியானவர் அந்த சாட்சிகளோடு சேர்த்து எழுதியதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனிதர்கள் நம்மைக்குறித்து ஆகா ஒகோ என்று புகழலாம். நம் இருதயத்தை ஆராய்ந்து அறிந்திருக்கிற கர்த்தர் நம்மை குறித்து சாட்சி கொடுக்க இறங்கி வந்தால் அந்த சாட்சி எப்படியிருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

யோபு உத்தமன் என்ற சாட்சியை உயிரோடு இருக்கும் போதே தேவனிடத்தில் பெற்றான். ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பே தேவனிடத்தில் சாட்சி பெற்றான். அப்படியே மோசேயும் தாம் உயிரோடு இருக்கும் போதே தெய்வீக சாட்சி பெற்றிருந்தார்.

நமது அடக்க ஆராதனையில் மக்கள் நம்மை புகழுவது முக்கியமல்ல. நாம் வாழுகின்ற காலத்திலேயே தேவனால் சாட்சி பெற்றிருந்தல் வேண்டும்.

மோசே என்னும் வைரக்கல்லுக்கு ஜொலிக்கும் பட்டைகள் ஏராளம். அதில் நீதி, வாஞ்சை, சாட்சி என்கிற மூன்று பக்கங்களை உங்களுக்கு காட்டியிருக்கின்றேன்.

அதோ! தேவன் தமது தாசனாகிய மோசேயை அழைக்கிறார். அவர் எவ்வளவுதான் மோசேயை நேசித்தாலும் நீதிபரராகிய அவர் நீதியை வளைக்கவில்லை. கடந்த நாளில் கன்மலையை அடித்ததற்காக கானானுக்குள் பிரவேசிக்கமாட்டாய் என்று சொன்னதை ஞாபகப்படுத்தி மரிப்பதற்கு ஆயத்தமாகு என்கிறார்.

ஒருபுறம் நீதி செய்கிற தேவன், மறுபுறம் மரிப்பதற்கு ஆயத்தப்படுத்தும் அன்பின் தேவன். மோசே ஆண்டவரின் வார்த்தையின்படி சகலத்தையும் செய்து முடிக்கிறார். பரிசுத்தவான்களுக்கு அவருடைய மரணத்தை முன்கூட்டியே தெரியப்படுத்தி அதற்காக ஆயத்தப்படுத்துகிறார் என்பதற்கு மோசேயின் இறுதிகாலம் சாட்சியாக இருக்கிறது.

தேவனின் மகிமையைப் பார்க்க ஆசைப்பட்ட மோசேக்கு இப்போது ஒரு சின்ன ஆசை. கானான் எப்படியிருக்கும்? கானான், மோசே காணான் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் நடந்ததோ வேறு.



அவரது தாசனாகிய மோசேயின் இருதய நினைவுகள் அறிந்திருந்த கர்த்தர் பிஸ்காவின் கொடுமுடியில் வைத்து **நல்லா பாருப்பா!** என்று நான்கு எல்லைகளையும் காட்டி, இதுதான் முற்பிதாக்களுக்கு ஆணையிட்ட கானான் தேசம். இதை உன் கண் காணச் செய்தேன் என்றார் (உபாகமம் 34 : 4).

ஆஹா! என்ன பாக்கியம் தமது பிள்ளைகளின் வாஞ்சையை அவர்கள் மரிப்பதற்கு முன்பாக நிறைவேற்றுகிற தேவன் அவரல்லவா? **தேவ ஜனமே உனது வாஞ்சையை உனது கண்கள் காணும்.**

என்னே, ஆச்சரியம்! டெலஸ்கோப், பைனாகுலர் இல்லாத காலத்திலேயே ஒரே இடத்தில் நின்று கொண்டு கானானின் சகல எல்லைகளையும் மோசே தெளிவாக பார்த்திருக்கிறார்.

சில வசனப்பகுதிகளை வாசித்துப் பார்க்கிற போது அந்தக் குறிப்பிட்ட நாள் மோசேயின் பிறந்த நாளாக இருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

உபாகமப் புத்தகத்தில் உள்ள பல அதிகாரங்கள் ஒரே நாளில் சொல்லப்பட்டவைகள். அவைகளிலிருந்து சில வசனங்களை தொடர்ந்து எழுதுகிறேன். கவனித்துப் பாருங்கள்.

(1) உபாகமம் 1 : 10-ல் இதோ இந்த நாளில் நீங்கள் திரளாய் இருக்கின்றீர்கள் என்ற வாக்கியத்தில் **இந்த நாளில்** என்ற பதத்தைக் கவனியுங்கள். ஆங்கில வேதாகமத்தை அடிப்படையாக வைத்து கணக்கிட்டதில் உபாகமப் புத்தகத்தில் மட்டும் 68 முறை இந்த வார்த்தை வருவதால் இதன் பெரும் பகுதி ஒரே நாளில் சொல்லப்பட்டது என்பது தெளிவாகிறது.

(2) உபாகமம் 32 : 48-ல் அந்த நாளில் தானே கர்த்தர் மோசேயை மரிக்க ஆயத்தப்படுத்துகிறார். அதாவது மோசே இந்த வசனத்தைப் பேசிய அதேநாளில் தேவன் ஆயத்தப்படுத்தினார்.

(3) **இன்று** நான் நூற்றிருபது வயதுள்ளவன் (உபாகமம் 31: 2) இந்த வசனத்தில் இன்று என்ற வார்த்தையை மோசே குறிப்பிட்டுள்ளதை கவனியுங்கள்.

(4) உபாகமம் 34 : 7-ல் மோசே மரிக்கிற போது அவருக்கு 120 வயது என்று எழுதப்பட்டுள்ளது.

இந்தக் குறிப்பின்படி ஒருவேளை மோசே தனது பிறந்த நாளிலே மரித்தார் என யூகிக்க இடம் உண்டு.

(Dake's Bible Page 199 1M) நல்லது. கர்த்தர் சொல்ல மோசே மெதுவாக தன் ஜனத்துக்கு விடை கொடுத்துவிட்டு மலையின் மேல் ஏறி போகிறார். (இதற்கு மேல் உள்ள பகுதிகளை என் உள்ளத்தில் உந்தப்படுகிறபடியே உருவகப்படுத்தி எழுதுகிறேன்).

மகனே! மோசே இன்று உனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது. நூற்றியிருபது வயதிலும் உனக்கு கண் மங்கவில்லை. உன் பெலன் குறுகவுமில்லை (உபாகமம் 34 : 7) இனியும் உனக்கு சேதம் ஏற்படாது.

எனக்கு நீ அருமையானவன். எனது குமாரனாகிய கிறிஸ்துவுக்கு நீ முன் அடையாளமானவன் மாத்திரம் அல்ல. அவரின் உலக ஊழிய காலத்தில் நீ அவருக்கு ஊழியம் செய்யவும் திட்டமிட்டிருக்கிறேன் (மத் 17 : 3).

அதுமட்டுமல்ல கிறிஸ்து இரண்டாம் விசை நியாயம் தீர்க்கும்படியாக இந்த உலகத்திற்கு இறங்கி வருவதற்கு முன்பு நீ நேசிக்கிற இந்த ஜனத்தின் சந்ததிக்கு ஊழியம் செய்ய உன்னை இந்த பூமிக்கு அனுப்பப் போகிறேன்.

என் மகனே! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உன்னைக் கனப்படுத்தும்படி பரலோகத்தில் உன் பாட்டுப்பாடப்படுகிறது (வெளி 15 : 3). ஆசை தீர கானானைப் பார்த்து விட்டாயா? போதும், போதும் இனி வருங்கால ஊழியத்தை நீ நிறைவேற்றுவதற்கு முன்பு உனக்கு இடைக்கால ஓய்வு ஆயத்தப்படுத்தியிருக்கிறேன். அதில் பிரவேசி என்று ஆண்டவர் சொல்ல கர்த்தருடைய வார்த்தையின் படியே மோசே மரித்தார் (உபாகமம் 34 : 5).

நீதியுள்ள தேவன் இப்போது நன்றியுள்ள தேவனாக மாறுகிறார். இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தான் வாசம் பண்ண ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணின (யாத் 40 : 33) தமது தாசனாகிய மோசேக்கு தமது கைகளாலேயே பிரேதக்குழியை உண்டாக்கி தாமே அந்த சரீரத்தை அடக்கம் செய்கிறார். கர்த்தரின் தாசனாகிய மோசே தனது நீண்ட நாள் வாஞ்சையின்படி அப்பா வீட்டிற்குப் போய் சேர்ந்து விட்டார். நமக்கும் அப்பா ஆண்டவர்தானே அன்பர் இயேசு வரும்போது அந்த மோசேயை அப்பா வீட்டில் சந்திப்போம். **– ஆமென்.**

## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,
**Pr. அலெக்ஸ் தினகரன்**